

வசந்தம்

தாரண - தை

தந்தி: "வசந்தா" கோயமுத்தூர். போன்: நெ. 25.

வசந்தா மில்ஸ்

லிமிடெட்.

ரிஜிஸ்டர்ட் ஆபீஸ்: சிங்காநல்லூர்.

மேனேஜிங் ஏஜண்ட்ஸ் அண்டு செக்ரடரீஸ்:

R. K. ஷண்முகம் செட்டி அண்டு பிரதர்ஸ்.

1934-ல் கள்ளிக்கோட்டையில் நடந்த கண்காட்சியில் நூல் ரகங்களுக்காக தங்க மெடல், நற்சாட்சிப் பத்திரம் பெற்றிருக்கிறோம்.

நூற்றல்:

20 நெ. முதல் 44 நெ. வரை, ஒத்தை, முறுக்கு, காரம், சலவை நூல் தயாரிக்கிறோம்.

எல்லா விதமான ஜவுளி ரகங்களும்:

வேஷ்டிகள், லாங்கிளாத்,
டவல், சர்ட்டிங்,
மல், சதர்,

தயாரிக்கிறோம்

எங்களுடைய வி. 116 நெ. லாங்கிளாத் மார்க்கட்டில் பெயர் பெற்றது.

600 நெ. காடா தயாரிக்கும் உரிமை எங்களுடை...

போலிகளைக்கண்...

நம் நாட்டுத் தொ...

தென் இந்தியாவில் —
தேநீர் அருந்தும் நேரம்

ஹைதராபாத்துக்குத் தெற்கேயும் கிழக்கேயும் உள்ள புராதன குடும்பங்களில் நீண்டகாலமாக இருந்துவரும் பழக்க வழக்கங்கள் அநேகமாய் மாறுவது கிடையாது. உபயோகம் ஏதாவது உண்டு என்பதாய் இருந்தால்த்தான் புதிய வழக்கங்கள் அங்கே புகமுடியும். வர வர மோட்டார் வண்டிகளில் பிரயாணஞ்செய்வது சகஜமாய்ப் போய்விட்டது. ஜாதிபேதமில்லாமல் ஒன்ருய்ப் பிரயாணஞ்செய்யும் இந்த பஸ்ஸுகள் வந்ததிலிருந்து ஜாதி வேற்றுமைகள் அவ்வளவாகப் பாராட்டப்படுவதில்லை. பிராமணர்கள் பிராமணரல்லாதவர்களுக்கு விருந்து உபசாரம் செய்வது இப்பொழுது வெகு சகஜம். சிற்றுண்டி எதுவுமில்லாமல் தேநீர் மட்டும் உபசரிக்கும் வழக்கம் ஜாதிவேற்றுமையை ஒழித்துப் பல்வேறு மதத்தினருக்குள் பரஸ்பரம் அன்பைப் பெருக்கிவிட்டது.

பெரும்பாலான தென் இந்தியர்கள், சீனியும் பாலும் கலந்த தேநீரைப் பித்தளை டமரா டம்ளர்களில் ரஸிக்கிருர்கள். குடிக்குமுன் டமராவிலிருந்து டம்ளருக்கும் டம்ளரிலிருந்து டமராவுக்கும் ஆக ஊற்றித் தேநீரை ஆறவைத்துக் கொள்கிருர்கள்.

வட தேசத்தைப் போலவே, இங்கும் புத்தம்புதிய புரூக் பாண்ட் தேயிலையை ஜனங்கள் எல்லோரும் விரும்புகிருர்கள்.

ப்ரூக் பாண்ட்

" இரு இலையும் ஒரு மொட்டும் "

சுகம், சிக்கனம், மோஸ்தர்

இவைகளுக்குச்

சிறந்தது

மைசூர் சில்க்

★

கவர்ன்மென்ட் சில்க் வீவிங் பாக்டரி

மைசூர்

பொங்கல் வாழ்த்துகள்

A. P. R. Oil Mills,

Fort, Coimbatore.

R. L. SUBRAMANIA CHETTY, *Mg. Secretary.*

The House of Indian Insurance

For

LIFE
FIRE
MARINE
MOTOR
ACCIDENT

The

NEW INDIA ASSURANCE CO., LTD.

INCORPORATED IN INDIA IN 1919.
HEAD OFFICE : BOMBAY.

இன்ஷ்யூரன்ஸை அபிவிருத்தி செய்யும் விஷயத்தில் "நியூ இந்தியா" முன்னணியில் நிற்கிறது. இந்தியன் இன்ஷ்யூரன்ஸ் இப்பொழுது வெகு துரிதமாக சென்று வரும் முன்னேற்றத்தில் 'நியூ இந்தியா' பெரும் பங்கெடுத்துக் கொண்டிருக்கிறது. இப்பங்கு, ஒவ்வொரு பாலிஸிதாரரும் — எவ்வளவு தொகைக்கு இன்ஷ்யூர் செய்யப்பட்டிருந்தாலும் — பூரண பாதுகாப்பை அனுபவிக்கலாம் என்ற கம்பெனியின் மாறுபாடில்லாத நோக்கத்தால் உதவப்படுகிறது. கம்பெனியால் ஏற்படுத்தப்பட்ட ரிசர்வுகளும் நிதிகளும் அம்மாதிரி பாதுகாப்புக்கு போதிய உத்தரவாதமாகும்.

கிளை ஆபீஸ்: 4,5 முதல் லேன் பீச், சென்னை

3-MAY 1945 MADRAS

உயர்ந்த பித்தளை வெங்கலப் பாத்திரங்களுக்கு
நம்பிக்கையான இடம்

V. K. வெள்ளையப்ப செட்டியார்

பித்தளை தாமிரம் வியாபாரம் கடை வீதி, கோயமுத்தூர்.

The Fashionable Furnishing Fabrics

DRESS TEXTILES

Ladies', gents', Children's Underwear Sport Shirts etc.

S. Beemiah Chetty.

"WHITE SHOP" COIMBATORE

மிகச்சிறந்த ஆயுர்வேத ஔஷதங்
களும் சிகிச்சைகளும்!

ஒரு முறை விஜயம்
செய்யுங்கள்

ஆர்யவைத்தியர்

★

பி. வி. ராமவாரியர்

ஆர்யவைத்ய
பார்மசி

திருச்சி ரோடு கோயமுத்தூர்

★

கேட்லாக் இலவசமாக
அனுப்பி வைக்கப்படும்.

THE VASANTHA DYEING WORKS,

118. Oppanakara Street
Coimbatore.

Phone No. 155. Estd., 1921.

Proprietor

C. M. Subramanya Chettiar

CONTRACTOR
To

THE VASANTHA MILLS, LIMITED.
SINGANALLUR.

For all kinds of dyeing border yarn and tie yarn etc., undertakes any variety of colour dyeing at reasonably cheap rates for dyeing all counts of yarn, cloth and sarees of 100 and 80 counts, wholesale orders received our due and special attention. A trial order will convince you the good quality of our work. Fastness and durability of colour guaranteed.

K. B. R. JEWELLARY

BIG BAZAAR COIMBATORE.

ஸ்ரீ கிருஷ்ண கான சபா

கோயமுத்தூர்.

*

21—1—1945

ஞாயிற்றுக்கிழமை

மாலை 5-25 மணிக்கு

கோவை சலிவன் வீதி ராவ்சாகிப்
மாரண்ண கவுடர் நேஷனல்
பெண் பாடசாலையில்

செம்மங்குடி சீனிவாசய்யர் - பாட்டு
ஸ்ரீ சௌடய்யா - பிடில்
ஸ்ரீ பழனி சுப்ரமணிய பிள்ளை-
மிருதங்கம்

C. K. S.

சொறி எண்ணை

சொறி, சிரங்கு, வண்டுகடி, கறப்பான் இவைகளுக்கு மிகவும் சிறந்த தைலம். விரைவில் குணம் பெற இத்துடன் C. K. S. சஞ்சீவி சோப் (Medicinal) உபயோகியுங்கள்.

சோப் சிறியது விலை		0—5—0
சோப் பெரியது ,,		0—12—0
எண்ணை	1-அவுன்ஸ்	0—10—0
,,	2-அவுன்ஸ்	1—2—0
,,	4-அவுன்ஸ்	2—0—0

ஏஜன்ட்ஸ்:—

அஜ்மீர் ஸ்டோர்ஸ்

ஜெனரல் மெர்ச்சென்ட்ஸ்,
பெரிய கடைவீதி ; கோயமுத்தூர்.

புதிய கடை !! புதிய சரக்குகள் !!

கல்யாண காலங்களுக்கும் மற்ற விசேஷ காலங்களுக்கும்
வேண்டிய நானாவிதமான

ஜவுளி தினுசுகள்

வாங்குவதற்கு ஏற்ற இடம்

ஆர். பத்மனாப நாயுடு சன்ஸ்

ஜவுளி வியாபாரம் : : பெரிய கடைவீதி

ஜெமேஷா கோவில் சமீபம்,

கோயமுத்தூர்.

6. 7 8. 9 கெஜங்களில் எல்லாவிதமான சேலை ரகங்களும்,
ஷர்ட்டிங், கோட்டிங், சீட்டி, வாயில் முதலிய ரகங்க
ளும் ஏராளமாக வந்திருக்கின்றன. தங்கள்
தேவைக்கு விஜயம் செய்யுங்கள்.

ஓம்

ஸ்ரீ நாராயண குரு பாங்கு, லிமிடெட்,

(பிரிட்டீஷ் இந்தியாவில் ரிஜிஸ்டர் செய்யப்பட்டது.)

(பங்குதாரர்கள் பொறுப்பு வரையறுக்கப்பட்டுள்ளது)

ரிஜிஸ்டர் செய்யப்பட்ட தலைமைக் காரியாலயம் : ஹம்பன் கட்டா.

மங்களூர் :

கிளைகள் ...	உடுப்பி குண்டாப்பூர்	தென் கன்னட ஜில்லா

ரிஜிஸ்டர் செய்யப்பட்ட மூலதனம்	ரூ. 2,00,000.
வெளியிடப்பட்டது	ரூ. 1,00,000.
வசூல் செய்யப்பட்ட மூலதனம்	ரூ. 79,000.

1913-ஷு இந்தியன் கம்பெனீஸ் ஆக்ட்படி கம்பெனியானது 1944-ஷு ஆகஸ்டு மாதம் 19ம் தேதி கம்மென்ஸ்மென்ட் சர்டிபிகேட் கவர்ன்மெண்டாரிடமிருந்து பெற்று இதன் வேலையைத் தொடங்கியிருக்கிறது.

கண்ணியமும் பலமும் வாய்ந்த டைரெக்டர்கள் இதை நடத்தி வருகிறார்கள்.

இந்தியப் பாதுகாப்புச் சட்டம் 84-A-யின்படி மத்திய அரசாங்கத்தாரின் சம்மதம் பெற்றுள்ளது. "அரசாங்கத்தார் அனுமதி அளித்திருந்தபோதிலும், இந்தக் கம்பெனியின் பொருளாதார நிலையைப் பொருத்தும், இதன் இதர அலுவல்களின், ஸ்டேட்மெண்ட்களின் ஆதாரங்களைப்பற்றியும் அரசாங்கத்தார் எந்த விதமான உத்தரவாதமோ பொறுப்போ ஏற்றுக்கொள்ளவில்லை என்பதைத் தெரியப்படுத்திக் கொள்ளுகிறோம்."

ஒரு சில பங்குகள்தான் இப்பொழுது விற்பனைக்கு நிர்ணயப்படி கிடைக்கும்.

பங்கு ஒன்றுக்கு ரூ. 50. பிரவேச தனம் பங்கு ஒன்றுக்கு ரூ. 1

கரண்ட் அக்கவுண்ட், சேவிங்ஸ் பாங் அக்கவுண்ட் வைத்துக் கொள்ள வசதி உண்டு. பிக்செட் டிபாசிட்டுகள் ஏற்றுக்கொள்ளப்படும். தங்க நகைகள் அடமானத்திற்கும், பாங்கின் சட்டதிட்டங்களுக்கும், வட்டி நிலவரத்திற்கும் விசாரிக்கவும். சீட்டு நடத்துவது இதன் முக்கிய அம்சங்களில் ஒன்று.

கோயமுத்தூரில் கிளை ஸ்தாபனம் 1945-ஷு ஜனவரி-மீ முதல் வாரத்திலிருந்து தொடங்கப்பெற்றுள்ளது.

ஏஜண்ட்ஸ்: எம். பி. கம்பெனி,
P. B. No. 167,
வெங்கட்டரமண ரோடு
ஆர். எஸ். புரம், கோயமுத்தூர்.

மங்களூர் ஜாரப்பா,
பிரசிடெண்ட் & மானேஜிங்
டைரெக்டர்.

* ஜனங்களுடைய சௌகரியத்தை உத்தேசித்து பாங்குகள் அதிகமில்லாத ஆர். எஸ். புரத்தில் இந்த பாங்கு புதிதாக ஏற்படுத்தப் பட்டிருக்கிறது.

வசந்தம்

மலர் 3]

பொருளடக்கம்

[இதழ் 9

தமிழ் நாட்டுத் தவமுனி	...	தேசிகவிநாயகம் பிள்ளை	... 1
தமிழிசைத் திருவிழா	...	"இசைச் செல்வன்"	... 2
பிளேக் நோய்	...	டாக்டர் டி. எஸ். திருமூர்த்தி	... 7
மலரெனும் பொங்கல்	...	எஸ். பாலசுந்தரம்	... 11
இயற்கை	...	"உல்லாசன்"	... 12
கலைக் கோயில்	...	சுத்தானந்த பாரதி	... 16
ஹம்பி	...	ரா. ஆறுமுகம்	... 24
ஒரு ரங்ரோட்டுக் கதை	...	சி. ஆர். ராமசுவாமி	... 35
சிலப்பதிகாரம்	...	சர். சண்முகம் செட்டியார்	... 40
தூது	...	சி. எஸ். ஆர்	... 48
இதுவும் வேண்டும்	...	'வில்லன்'	... 49
புத்தக ஆராய்ச்சி	...	'உமாபதி'	... 55
சாவித்திரி	...	ஆர். ஷண்முகசுந்தரம்	... 57
பிரயாணம்	...	கௌசல்யா	... 69
திருடன்	...	எம். எஸ். விசாலம்	... 75
தமிழ் இலக்கியம்	...	வித்வான் அ. கிருஷ்ணமூர்த்தி	... 79
மலர் மணம்	...	... ...	... 84

★

தாரண

தை

விளம்பர அட்டவணை

வசந்தா மில்ஸ் – அட்டை (முன் உள்) பக்கம் ...	
புரூக் பாண்ட் ...	I
மைசூர் சில்க், ஏ. பி. ஆர். ...	II
நியூ இந்தியா அஷ்யூரன்ஸ் ...	III
வெள்ளையப்ப செட்டி, பீமைய செட்டி, ஆர்ய வைத்தியர், வசந்தா டையிங் ஒர்க்ஸ், கே. பி. ஆர்.	IV
கிருஷ்ணகான சபா, C. K. S. சொறி எண்ணெ, பத்மனப நாயுடு.	V
நாராயண குரு பாங்கு ...	VI
ஸிம்ஸன் ...	VIII
டாட்டா ஆயில் (ஹமாம் சோப்பு) ...	IX
உம்முடியார், ஓவர்ஸீஸ் ரெப்பிரசென்டேஷன் ...	X
கவர்னர் யுத்தநிதி, சென்டிரல் பாங்கி	XI
பர்மாஷெல், கோயமுத்தூர் ...	XII
ராஜா செட்டி–அட்டை பின் உள் பக்கம் ...	
ஜுபிடர் பிக்சர்ஸ் அட்டை கடைசிப் பக்கம்	



ஸிம்ப்சன் க்யாஸ் ப்ளாண்ட்கள் தங்கள் சக்தியை நிரூபிக்கின்றன.

இந்த நெருக்கடியான காலத்தில் ஆயிரக்கணக்கான ஸிம்ப்ஸன் க்யாஸ் ப்ளாண்ட்கள் தினந்தோறும் ஓயாமல் ஓடிக் கொண்டிருக்கும் போக்குவரத்து சாதனங்களை மிகசிக்கனமாகவும் சுலபமாகவும் தங்கள் வேலையை செய்து முடிக்க உதவுகின்றன.

இவைகளின் உழைப்புத் தன்மையையும் எவ்வளவு கடின மான போக்குவரத்தாயிருந்தாலும், நம்பிக்கையுடன் வேலை செய்யுந் திறமையையும், அபார சக்தியையும் தினந்தோறும் வந்து கொண்டிருக்கும் செய்திகள் மேலும் மேலும் ஊர்ஜிதம் செய்கின்றன. இந்த நம்பிக்கைக்கு காரணம் **ஸிம்ப்ஸனின்** என்றென்றைக்கும் வழக்கமான உயர்ந்தரக தயாரிப்பேயாகும். சிம்ப்ஸன்ஸ் க்யாஸ் உற்பத்தி செய்யும் பிளாண்டுகள்தான் மிகவும் உயர்தரமானவை. இன்று இந்தியாவிலே 8000க்கு அதிகமாக வேலை செய்து வருவது.

ஸிம்ப்ஸன் & கம்பெனி, லிமிடெட்.
மவுண்ட்ரோடு, மதராஸ்.

1840-ல் ஸ்தர்பிதம் செய்யப்பட்ட ஒரு இந்திய தொழிற்சாலை.

அட்டைச் சித்திரம்:

தமிழ் நாட்டுத் தவமுனி

உண்மையும் அறமும் உலகெலாம் பரவ
　　அல்லும் பகலும் அயர்விலா துழைப்போன்;
சாதி, சமய, சாத்திர, கோத்திர
　　வேற்றுமை காணா வீதியி லுலாவுவோன்;
தவத்திற் பெரியோன்; தமிழ்ப் பயிர் வளர்ப்போன்;
　　களங்கமில் லுளத்தாற் கைம்மக வனையோன்;
அன்பா லெவரையுந் தன்பாற் கொள்வோன்;
　　பொது நெறி கண்ட புண்ணியன்; எங்கும்
துதி பெறு சுவாமி சுத்தா னந்த
　　பாரதி யெனப் பெயர் பகரும்,
சீரிய ஞானச் செல்வமிக் கோனே!

— கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளை.

தமிழிசைத் திருவிழா

"இசைச் செல்வன்"

தமிழ்ப் பெருமக்கள் கோலாகலமாகத் தமிழ்த் திருநாட்களைக் கொண்டாடிக் குதூகலித்துக் களிப்படைந்ததைக் காவியங்களிலே கண்டு நாம் பேரானந்தம் அடைந்திருக்கிறோம் அல்லவா? அந்த மாதிரியே தமிழிசை விமரிசை இவ்வாண்டும் அபார ஆனந்தத்தை அளித்தது. தமிழிசைத் திருவிழா 23—12—44 அன்று வழக்கம் போலவே மனமோகனமாக ஆரம்பமாயிற்று. சர் பி. டி. இராஜன் அவர்கள் விழாவைத் தொடங்கி வைத்தார்கள். வரவேற்புக் கழகத் தலைவர் திவான் பகதூர் டி. எம். நாராயணசாமி பிள்ளை அவர்கள்.

அமுத கானத்தோடு விழா ஆரம்பமாகியது. தமிழிசைக் கல்லூரி மாணவிகளான டி. அமிர்தவல்லியும், கமலாவும் அமுதம் போன்ற பாடல்களைப் பொழிந்து வந்திருந்தோரை மகிழ்வித்தார்கள். வருங்காலத்தில் இசை உலகின் சுடர்களாக இத்திருமதிகள் விளங்குவார்கள் என்பதில் சந்தேகமில்லை.

திருமதி கௌசல்யா இராமகிருஷ்ண ரேட்டி வீணையும் பாட்டும் அன்று மிக இனிமையாக அமைந்திருந்தது. சுகமான சாரீரம். நல்ல ஞானம். வாசிப்பிலே இயற்கையான அழுத்தமும் இனிமையும் நிறைந்திருந்தது. அன்று ராஜா சர் அவர்கள், திருமதி கௌசல்யாவைப் பாராட்டிப் பரிசளித்து ஆசீர்வதித்தார்கள்.

இவ்வளவு விரைவில் தமிழ் இசை தமிழ் மக்கள் உள்ளங்களைக் கொள்ளை கொண்டது ஒரு 'அற்புதம்' என்றேதான் சொல்ல வேண்டும். அதிலும் 'தமிழ் மொழியே இசைக்கு ஏற்றதல்ல' என்றெல்லாம் ஆயிரத்தெட்டுக் காரணம் கண்டு பிடித்துச் சொல்லிக் கொண்டிருந்த பேச்சுக்கள் எல்லாம் இருந்த இடம் தெரியாமல் மறைந்து மங்கிப் போய் விட்டன. அதோடு எல்லாரும் காது குளிர, மனங்குளிர பெருவாரியாகத் தமிழ் இசையை நாடெங்கும் பருகத் தொடங்கி விட்டார்களென்றால் — ஆனந்தமாக அனுபவிக்க ஆரம்பித்து விட்டார்கள் என்றால் அதை ஒரு 'அற்புதம்' என்று சொல்லாமல் வேறு என்ன என்று சொல்வது? இந்த அற்புதத்தை நிகழ்த்திய நமது ராஜா சர் அவர்களும், சர் ஆர். கே. எஸ். அவர்களும் தமிழ் மக்களுக்குக் கிடைத்த மகத்தான தலைவர்கள் என்பதை சர் பி. டி. ராஜன் ரொம்ப அழகாகச் சொன்னார்.

சர் பி. டி. ராஜன் அவர்கள் நிகழ்த்திய பிரசங்கத்தின் முக்கிய பகுதியை இங்கு தருகிறேன்.

"இசை செவிக்கு இன்பம் கொடுப்பது மட்டுமல்ல! ஒரு மனிதனுடைய மனதைக் கவர்ந்து, உள்ளத்தில் உதிக்கும் உணர்ச்சிகளைத் தூண்டி, தெய்வீகத் தன்மையையும் அளிக்கிறது. இசையானது தனி மனிதனுக்கே இத்தகைய நன்மை யளிக்குமானால் ஒரு நாட்டு மக்கள் அனைவருக்குமே ஏன் இந்த நன்மையை அளிக்கக் கூடாது?

சொல்லும் பொருளும் இல்லாத தனிப் பண்கள் ஒரு சிலருக்கே

137228

இன்ப மூட்டும். ஆனல் பொது மக்கள் அனைவருமே அதை அனுபவிக்க வேண்டுமானல் அவர்கள் பேசும் மொழியில் தான் இசை அமைக்கப்பட வேண்டும். தேச முன்னேற்ற மென்பது பொது மக்களின் முன்னேற்றமே யன்றி ஒரு சிலரின் முன்னேற்றமல்ல. ஆகவே பொது மக்கள் முன்னேற்றமடைய வேண்டுமானல் அவர்கள் அறிந்து கொள்ளக்கூடிய மொழியிலேயே இசையும் அமைய வேண்டியது அவசிய மன்றோ?

ஒரு தேசம் தன் உணர்ச்சிகளைப் பல கலைகளின் மூலம் வெளியாக்குவதால் தான் தன் பெருமையின் உச்ச நிலையை அடைய முடியும். அக்கலைகளில் முக்கியமானது இசையே. ஏனென்றல் இசை தான் வேறெந்தக் கலையைக் காட்டிலும் ஒரு தேச முன்னேற்றத்துக்குத் தூண்டுகோலாய் இருக்க முடியும்.''

திரு டி. எம். நாராயணசாமிப் பிள்ளை அவர்கள் இலக்கிய உலகுடனும், இசை உலகுடனும் மிக நெருங்கிய தொடர்பு கொண்டுள்ளவர்கள். அவருடைய வரவேற்புரையின் சில பகுதிகளைப் பாருங்கள்.

"தமிழிசைக் குழந்தை சிறப்புக்கேற்றபடி தன் திருமுகத்தைக் காட்டி ஆனந்தத் தாண்டவம் ஆடுகிறுள். இதற்கு முக்கிய காரணமாக இருந்தவர்கள் நமது ராஜா சர் அண்ணமலை செட்டியார் அவர்களும், சர். ஆர். கே. சண்முகம் செட்டியார் அவர்களும். இவர்கள் நமக்குக் கிடைத்த மாபெருந் தலைவர்கள். இவர்கள் ஒன்று சேர்ந்து நடத்தும் எந்த இயக்கமும் பழுது போகாது. எதையும் ஆராய்ச்சி இல்லாமல் ஆரம்பிக்க மாட்டார்கள். எண்ணமல் துணிய மாட்டார்கள். துணிந்த பின் பின் வாங்க மாட்டார்கள். ஆழ்ந்த அறிவு, பரந்த நோக்கம், தீராத உழைப்பு, தேச சேவை இவைகளை அங்கமாக உடையவர்கள். கல்வியையும் கலையையும் பொது மக்களிடையே பரப்ப வேண்டுமென்று கங்கணம் கட்டிக்கொண்டு கண்ணும் கருத்துமாகப் பாடுபடுபவர்கள். கலை ரசிகர்கள். நம் நாட்டில் தோன்றியிருக்கும் அணி விளக்குகள். இவர்கள் இச்சங்கத்திற்கு எல்லா விதத்திலும் பெரும் ஆதரவு அளித்து வருகிறுர்கள். இவர்களுடைய அடிப்படையான ஆதரவு இல்லாவிட்டால் நமது உள்ளத்தில் இயற்கையில் இயங்கிக் கொண்டிருக்கும் இந்த இயக்கம் இவ்வளவு சீக்கிரத்தில் உருவெடுத்து வெளி வந்து தாராளமாகத் தலையெடுத்து உலவுவது கஷ்டமாயிருந்திருக்கும். இப்பெரியார் இருவர் செய்த பேருதவிக்கு நாம் என்ன கைமாறு செய்ய முடியும்? இவ்விருவரையும் மனதார வாழ்த்துவதே நாம் செய்யும் கைம்மாறு.''

பாராட்டுதல்களுக் கெல்லாம் சர் ஆர். கே. எஸ் அவர்கள் ரொம்ப அழகாகப் பதில் அளித்தார். ஆர். கே. எஸ் பிரசங்கம் என்றல் அதில் விஷயம் நிறைந்திருக்கும் என்பதைத் தனியாகச் சொல்ல வேண்டியதில்லை. நகைச்சுவை, உணர்ச்சி, அழுத்தம் — எல்லாமே நிறைந்திருந்தன. தமிழிசையைக், குழந்தை, என்று திரு டி. எம். என் அவர்கள் குறிப்பிட்டதைக் குறித்து ஆர். கே. எஸ் அவர்கள் வெகு வேடிக்கையாகச் சொன்னர்கள்: "தமிழ் இசை குழந்தையா? பாட்டியை யாராகிலும் குழந்தை என்று சொன்னல் எப்படி இருக்குமோ அப்படித்தான் இருக்கிறது இதுவும்

தமிழிசை அதாவது தமிழ் மொழி என்றால் இளமையுடனிருக்கும் கன்னி. மற்ற எல்லா மொழிகளுக்கும் தாயான போதிலும் இளமை மாறாத சீரும் சிறப்பும் பெற்ற தமிழ்க் கன்னியைப் பலரும் பாராட்டி இருப்பதை நீங்கள் கேட்டிருக்கலாம்."

பிறகு, டாக்டர் அளகப்ப செட்டியார் அவர்கள் சங்கீதத்தைப் பற்றிச் சொன்ன கருத்துக்களைப் பாராட்டிப் பேசுகையில் இசை இலக்கணத்தை அழகாக வர்ணித்தார். டாக்டர் அவர்கள் பிரசங்கத்தைக் குறித்து டி. கே. சி அவர்கள் என்னிடம் சொல்லுகையில் "இதுவரை இசையைப் பற்றி இப்படி அற்புதமாக யாருமே பேசியதில்லை" என்றார். சர் ஆர். கே. எஸ் அவர்களும் அதை அப்படியே ஆமோதிப்பதாகப் பாராட்டி விட்டு, "இசை இலக்கணத்தை யெல்லாம் மீறும் நோக்கம் யாருக்கும் இல்லை. தமிழ் இசையும் இலக்கணத்தை அடிப்படையாகக் கொண்டே இன்பமளிக்கும்" என்றார். 26-ம் தேதி நடந்த தமிழ் இசைச் சங்கங்கள் கூட்டத்திலும், இசைச் சங்கங்கள் ஒத்துழைப்பின் போதும் தமிழிசை நாடெங்கும் முழங்க அரிய யோசனைகள் எடுத்துக்காட்டிய போதும் இவ்விதமே சர் ஆர். கே. எஸ். சொன்னார். "தமிழிசையைக் கண்ணும் கருத்துமாகப் பரப்பி நாட்டு மக்களுக்கு ஆனந்தமளிப்பதே எங்கள் லட்சியம்" என்றார்.

இப்போது தமிழ் நாடெங்கும் ஐம்பதுக்குமேல் தமிழ் இசைச் சங்கங்கள் தோன்றியிருக்கின்றன. மேலும் பெருகும் என்பதில் சந்தேகமில்லை. இவ்விதம் வெளியிடங்களில் தோன்றும் கிளைச்சங்கங்கள், தமிழ் இசை சங்கத்தார் ஆதரவில் அதிக அபிவிருத்தி யடைய சகல வழிகளும் வகுக்கப்பட்டிருக்கின்றன. கச்சேரிகள் அமைப்பதில் சௌகர்யம் தேடிக் கொள்ளலாம். தாய்ச் சங்கத்தின் மூலம் எல்லா ஏற்பாடுகளும் செய்து கொள்வதால் பாடகர்களுக்கும், மற்ற வெளியூர் சங்கங்களுக்கும் நல்ல சௌகர்யங்கள் ஏற்படுகின்றன. விரைவில் ஒரு நல்ல "கீர்த்தனைத் தொகுப்பு" முக்கிய இசை வாணர்களின் உதவியால் வெளியிடவும் தீர்மானித்திருக்கிறார்கள். இசைச் சங்கங்களும், கல்லூரிகளும் நடத்தி, மாணவ — மணவிகளைத் தயார்செய்து இசைஉலகச்சேவைக்கு அளிக்கலாம். தற்போது வெளியூர்களிலுள்ள சில இசைச் சங்கக் கல்லூரிகளுக்கு ராஜா சர் அவர்கள் வருஷம் ஒன்றுக்கு அறு நூறு (600) ரூபாய் அன்புடன் உதவ இசைந்துள்ளார். தமிழ் இசை தமிழர் உள்ளங்களில் நன்கு வேரூன்றி விட்டது. இனி அதன் மணத்தை எல்லோரும் ஆனந்தமாக அனுபவிக்க வேண்டியதே.

இசைத் திருவிழா

இசைத் திருவிழா 24-ம் தேதியிலிருந்து ஆரம்பமாகியது. அலங்காரமான அம்மண்டபத்தின் உள்ளேயும் வெளியேயும் வழக்கம் போலவே மலர்ந்த முகத்துடன் ஆண்களும் பெண்களும் நிறைந்திருந்தார்கள்.

முதல் நாள் சென்னை வேதாசலம் செட்டியார் பாடலுடன் கச்சேரி தொடங்கியது. நல்ல எடுப்பான சாரீரம். "அபாரமாக"ப் பாடுகிறார். மெய்ம்மறந்து அனுபவிக்கும் சங்கீதம். பந்துவராளி, தோடி, ராகங்கள் மனதை மயக்கின.

அன்று செம்பை வைத்தியநாத பாகவதருக்குப் பக்க வாத்தியம் வெகு சுகமாக அமைந்திருந்தது. ஆலங்குடியின் கடமும், சௌடய்யாவின் பிடிலும் தனியாகவே கேட்டு இன்ப மடையக் கூடியவை. செம்பையின் சர்க்கரைப் பந்தலில் பக்கவாத்தியங்கள் தேன் மாரியைப் பொழிந்தன. அந்தப் பிரம்மாண்டமான கட்டிடமே இசைப் பெருக்கில் கட்டுண்டு, சொக்கிப் போய் நிற்பது போலிருந்தது.

இசைமணி மயிலம், ப. வச்சிரவேலு முதலியார் மணியாகப் பாடினார். நன்றாகப் பிரகாசிப்பார். பாட்டுக்களின் உச்சரிப்பு ரொம்ப தெளிவாகவும் நயமாகவும் இருக்கின்றன.

இசைவாணர் எம். கே. தியாகராஜ பாகவதர் பாட்டு என்றால் சொல்ல வேண்டுமா? குத்தாலம் சிவவடிவேலுப்பிள்ளை மிருதங்கம் என்றால் கேட்க வேண்டுமா என்ன? கச்சேரி கச்சிதமாக இருந்தது. வெள்ளம் போல் இன்னிசை பொழிந்து இன்ப வெள்ளத்தில் ஆழ்த்தினார்.

திருவாரூர் டி. வி. நமச்சிவாயம் சுகமாகப் பாடினார். ரொம்பவும் முன்னுக்கு வரக்கூடிய இளம் பாடகர். ராக சஞ்சாரங்களில் இனிய குழைவுகளும், அருமையான 'பிடி'களும் நெஞ்சை அள்ளிக் கொள்ளுகின்றன.

இசையரசு எம். எம். தண்டபாணி தேசிகர் பாடுகிறார் என்றால் உள்ளுணர்ச்சியே நடம்புரிவது போன்ற பரவசம் ஏற்படுவதுதான் தெரிந்த விஷயம் ஆயிற்றே! கனிந்த அவருடைய இனிய கானத்துக்கு ராஜமாணிக்கம் பிள்ளையின் பிடிலும், சுப்பிரமண்ய பிள்ளையின் மிருதங்கமும் மதுரமாக இணைந்து சென்றன.

திருவாரூர் திருமதி பி. ஆர். திலகம் அவர்களின் அமுதம் போன்ற பாடல்களைப் பருகிய பின், அன்று திருமதி பாலசரஸ்வதி அவர்கள் பரத நாட்டியம் திருமதி ஜெயம்மாளின் பின் பாட்டுடன் சிறப்பாக நடைபெற்றது. டி. கே. சி அவர்கள் எத்தனையோ தரம் சொல்லி இருக்கிறார்கள். "நாட்டியத்தைப் பார்க்க வேண்டுமானால் பாலசரஸ்வதியிடம் தான் பார்க்க வேண்டும். பாலசரஸ்வதிக்குத் தான் நாட்டியக் கலை நன்றாக வந்திருக்கிறது. உணர்ச்சிகள் அப்படியே அங்கங்களில் பொங்கித் ததும்ப வேண்டும். நம்மையும் இரண்டறக் கலந்து விடுமாறு செய்வதே நாட்டியத்தின் சக்தி" என்று சொல்வார்.

சிதம்பரம் ஜெயராம் பிள்ளை அவர்கள் தமிழ் இன்னிசைப் பிரயோகர். கேட்கலாம் என்று மிக்க ஆவலுடன் இருந்தேன். அவர் வர இயலவில்லை.

திருமதி என். சி. வஸந்த கோகிலத்தின் கானாமிர்தத்தைப் புகழ வேண்டுமா என்ன? வசந்த காலத்தின் இனிய இன்பப் பெருக்கைப்போல் அற்புதமாகப் பாடி கேட்போரை மனமகிழச் செய்தார். ஆலங்குடி அதற்கேற்ப கடம் அருமையாக வாசித்தார். பலே பேஷ்!

தேரழுந்தூர் ஸ்ரீநிவாசாச்சாரியாருடைய இனிய பாடலுக்குப் பின், திருப்பாம்புரத்தின் வேணுகானத்தைப் பருகலாம் என்று ஆவலுடன் இருந்தேன். ஆனால் திருப்பாம்புரம் வர இயலவில்லை. ஆதலால், அன்று புல்லாங் குழலுடன் இனிய இன்பமழை பொழிய இருந்த பிடில் — தனிப் பிடில் அமுதமாகவே பொழிந்து இன்பந்தந்தது. சங்கீத கலாநிதி புரோ

பசர் துவாரம் வெங்கடசாமி நாயுடு அவர்களுடைய பிடில் கச்சேரி என்றால் ரசிகர்களுக்கு மட்டற்ற மகிழ்ச்சி ஏற்படும். ஆம், அன்று ஒரே அற்புதமாக இருந்தது !

மன்னார்குடி திருமதி கே. சாவித்திரி அவர்களின் கோட்டு வாத்தியம் கேட்க அருமையாக இருந்தது. பக்க வாத்தியங்களும்தக்கபடியே அமைந்திருந்தன. மதுரை மணி அய்யர் அவர்கள் பாடலைக் கேட்க ஆவலாயிருந்தவர்கள் அன்று திருமதி பட்டம்மாள் அவர்களுடைய இனிய பாடல்களைச் செவியாறப் பருகினார்கள்.

திருமதி. எம். எல். வசந்தகுமாரி, ஆனந்தமாகப் பாடுகிறார். குரலில் இனிமை நிறைந்திருக்கிறது. அன்று ஜி. என். பி. யின் கானம் மனதை நெகிழ்வித்தது. பக்கவாத்தியங்கள் இனிமையின் சிகரத்தை எடுத்துக் காட்டியவண்ண மிருந்தன. கச்சேரி முதல்தரம்.

தஞ்சை. பொ. கிட்டப்பா, ரொம்ப நன்றாகப் பாடுகிறார். சுகமாக இருந்தது.

திருமதி எம். எஸ். சுப்புலக்ஷ்மி, கச்சேரி என்றால் கூட்டத்திற்கோ குதூகலத்துக்கோ சொல்லவேண்டுமா? கங்கையாற்றின் இனிய கம்பீரமான பிரவாகம்போல் எல்லோருடைய உள்ளங்களையும் அப்படியே இசை வெள்ளத்தினால் ஆனந்தக்கடலில் ஆழ்த்திவிட்டார். ஒரே அற்புதம், ஆனந்தம் அபாரம். அதற்கு என்னத்தை இணையாகச் சொல்லி வர்ணிப்பது?

திருமதி ஏ. என். பெரியநாயகியின் நடனம் கண்ணுக்கும் கருத்துக்கும் விருந்தாக அமைந்திருந்தது. முகபாவத்தில் உணர்ச்சிகள் அழகாக வெளிவந்தன. பெரியநாயகி எந்தக்கோணத்தில் நின்றாலும் அங்கொரு 'புத்தழகு' தென்பட்டது.

சீவலூர் மீனாட்சி சுந்தரம் பிள்ளை அவர்கள் இன்னிசைப் புலவர். இயல் இசை வல்லுநர். பண்பட்ட அவரது இதயத்திலிருந்து பொங்கிய அருமையான கானம் வந்திருந்தோரைப் பரவசப்படுத்திற்று. தமது சொந்தப் பாடல்களைப் பாடி ஆனந்தம் தந்தார்.

மதுரகான திருமதி என். ஏ. சுந்தரம் மதுரகானம் இசைத்தார். கேட்க மதுரமாகவே இருந்தது.

டி. என். ராஜரத்தினம் பிள்ளை அவர்களும், டி. என். ஆர். நடராஜசுந்தரம் பிள்ளை அவர்களும் 'வேணுகானம்' இசைத்தார்கள். அந்த இனிய நாதத்திற்கு ஏற்ற 'தவுல் கச்சேரி' யும் கச்சிதமாயிருந்தது. நீடாமங்கலத்துடன் தவுல் வாசித்த இளைஞன் பலே பேஷ்!

இந்த இனிய கோலாகலத் திருவிழாக்களை ரேடியோவில் ஒலிக்கச் செய்த, சென்னை நிலையத் தலைவரையும் பாராட்டுகிறோம். இப்பேர்ப்பட்ட கோலாகலமான இசை விழாவைச் சிறப்புடன் நடத்தி, தமிழ் மக்களுக்கு மட்டற்ற மகிழ்ச்சியை அளித்த இசைச் சங்கத்தாரை ரொம்பவும் பாராட்டுகிறோம்.

★

பிளேக் நோய்

ராவ்பகதூர் டாக்டர் டி. எஸ். திருமூர்த்தி

'மசை' எப்படி நாய் வர்க்கத்திற்கு ஏற்பட்ட தொத்து வியாதியோ, அதே மாதிரி பிளேக் எலி வர்க்கத்திற்கு உரித்தான தொத்து நோய். நாய், நரி முதலிய பிராணிகளில் இந்த வியாதி மசை பிடித்த ஒன்றினின்றும் கடிபடுதல் காரணமாக மற்றொன்றிற்குப் பரவுகிறது. பிளேக் வியாதியால் இறந்த ஒரு எலியிலிருந்து மற்றொரு எலிக்கு—எலிகளின் பேரில் சர்வ சாதாரணமாக இருக்கும் ஒரு வகைத் தெள்ளுப் பூச்சியால்—பரவுகிறது. மசை நாய்க் கடியால் மனிதனுக்கு அந்த வியாதி உண்டாகிறது. ஆனால் அது மாதிரி பிளேக் எலியின் கடியால் மனிதனுக்கு பிளேக் உண்டாவதில்லை. எலிக்கடி விஷத்தால் உண்டாகிற காய்ச்சல் வேறு. பிளேக் எலியின் ஒரு ரகத் தெள்ளுப் பூச்சியின் கடியாலேதான் பிளேக் மனிதனுக்கு உண்டாகிறது. மசை நாய்க்கடி, வியாதி கண்டவர்களிடமிருந்தாவது, பிளேக் வியாதி கண்டவர்களிடமிருந்தாவது பரவுவதில்லை. சுவாசப்பையைத் தாக்கும் பிளேக் ஒன்றே மனிதனின்றும் மனிதனுக்குத் தொத்தும் குணம் உடையது. அதிர்ஷ்டவசத்தால் இந்த விதமான பிளேக் சாதாரணமாகக் காணப்படுவதில்லை. எனவே மசையும், பிளேக்கும் மனிதவர்க்கத்தைச் சார்ந்த நோய்கள் அல்ல என்றும், வியாதிபட்ட பிராணிகளின் மூலம் மனிதனுக்குத் தொத்தக் கூடிய நோய்கள் என்றும், இந்த நோய்கள் நாய்களுக்கோ அல்லது எலிகளுக்கோ இல்லாமல் போனால், மனிதர்களுக்கும் உண்டாகாது என்றும் நன்கு விளங்குகிறது.

மசைநாய் வியாதி, பிளேக் வியாதி போல் சமூகத்தில் பரவ முடியாது. பைத்தியம் பிடித்த நாய் சில மாடு, குதிரை, நாய் முதலிய மற்ற பிராணிகளையும், மனிதர்களையும் கடிக்கலாம். ஆனால் சீக்கிரத்தில் அந்த நாயைக் கொன்று விடுவார்கள். நாய்கள் எண்ணிக்கையும் ஊரில் அதிகம் இராது. ஆனால் எலிகள் இல்லாத வீடும், விடுதிகளும் இல்லை. தானியாதிகள் சேகரித்து வைக்கப்பட்டிருக்கும் இடங்களிலெல்லாம் வங்கு வளை வைத்துக் கொண்டு சஞ்சாரம் செய்யும். பிளேக் ஜன சமூகத்தில் காண்பதற்கு முன்னாடியே எலிகளிடத்தில் காண்பதால் மனிதனுக்கு ஒரு எச்சரிக்கை செய்கிறது. புளிய மரத்துப் பிசாசு அதனிடம் போனவனையும் பிடித்துக் கொண்டது போல், பிளேக் தெள்ளுப் பூச்சி எலியின் மூலமாய் எலியுடன் கூடி வாழும் மனிதர்களையும் தாக்குகிறது. ஆகையால் பிளேக் வியாதி எலிகளின் தொகை மிகுதியைப் பொருத்தும், ஜன நெருக்கடியைப் பொருத்தும் அந்தந்த வீட்டு வசதிகளைப் பொருத்தும் தீவிரமாய்ப் பரவக்கூடிய ஆற்றல் வாய்ந்தது.

சுகாதார தடைத் திட்டங்களைச் சரியான முறையில் அமுலுக்குக் கொண்டு வந்து இங்கிலாந்து முத

லிய தேசங்களில் மசை வியாதியே நாய்களுக்கு வராமல் செய்து விட்டார்கள். எலிகளும் இறக்குமதிச் சரக்குகளுடன் கப்பலிலிருந்து கரைக்கு வந்துவிடாதபடி அதற்கு வேண்டிய முறைகளைக் கவனிக்க ஏற்பாடுகள் செய்திருக்கிறார்கள். ஆகையால் மசை, பிளேக் என்ற இரு வியாதிகளும் சமூகத்தில் தலை காட்டாதபடி தொலைத்து விட்டார்கள்.

பிளேக்கைப் பொருத்த மட்டில் சில உண்மைகள் வெளிப்பட்டிருக்கின்றன. எலி இல்லாவிட்டால் பிளேக்கும் இல்லை; எலிகளுக்குப் பிளேக் இல்லாத இடங்களில், மனிதர்களுக்கும் அந்த வியாதி கிடையாது. உதாரணமாக நல்ல ஆரோக்கிய ஸ்தலங்கள் என்று மதிக்கப்படும் பெங்களூர், மைசூர், கோயமுத்தூர், குன்னூர், சேலம், பூனா முதலான ஊர்களில் பிளேக் வியாதி அடிக்கடி உண்டாகிறது. மற்ற ஊர்களில் எலிகளுக்குக் குறைச்சல் இல்லை. ஆனாலும் அவைகளின் சீதோஷ்ண நிலையில் எலிகளின் மேல் வசிக்கும் பிளேக் பரப்பும் ஒருவகைத் தெள்ளுப் பூச்சி விருத்தியாவதில்லை. (எலிகள் மேல் அநேக வித தெள்ளுப் பூச்சிகள் உண்டு) ஆகையால் எலிகளுக்கு பிளேக் வியாதி உண்டாவதில்லை. அங்கே மனிதனுக்கும் பயம் இல்லை.

ஆகையால் பிளேக் வியாதியைத் தடுக்க வேண்டுமானால் அதற்கு முதற்படியாக எலிகளுக்கும் மனிதனுக்கும் இருக்கும் சிநேகக் கூட்டுறவை ஒழிக்க வேண்டும். எலி வங்குகள் வீடுகளில் இருக்கக் கூடாது. தானியங்கள் வைத்திருக்கும் கடை கண்ணிகளிலும், குதிர், ஸ்டோர்களிலும் எலிகள் தங்க முடியாதபடி கட்டிட அமைப்புகளைச் செய்ய வேண்டும். பொறிகள் வைத்து எலிகளைப் பிடித்துக் கொல்ல வேண்டும். விஷம் கலந்த ஆகாரங்கள் வைத்தும் கொல்லலாம். எலிகளைக் குறைக்க வீடு தோறும் பூனைகளை வளர்த்தலாம். எலி செத்து விழுந்த வீடுகளைவிட்டு கொஞ்ச நாட்களுக்காவது விலகியிருக்க வேண்டும். செத்த எலிகளை எடுத்துப் பரிசோதிக்கவும், வீட்டை லோஷன் போட்டு சுத்தப் படுத்தவும், எலிகளைக் கொல்லும் விஷக் காற்று ஒன்றை உபயோகித்து வங்குகள், இருண்ட இடங்கள், கூரை முதலானவைகளில் வசிக்கும் மற்ற எலிகளைக் கொல்லவும் சுகாதார இலாக்காக்காரர்களிடம் உடனடியாக மனுச் செய்து கொள்ள வேண்டும். எலி விழுவதை அவர்களிடம் ஒளிப்பதால் தங்களுக்கும், சுற்றிலும் வசிக்கும் மற்றவர்க்கும் பெரும் தீங்கு விளையும் என்பதை அவர்கள் உணர வேண்டும். பிளேக் பரவும் காலங்களில் அந்த வியாதியைத் தடுக்க உபயோகிக்கும் இனகுலேஷன் செய்து கொள்ள வேண்டும். 'எலி விழுந்தாலும் பயம் இல்லை; இனகுலேஷன் செய்து கொண்டிருக்கிறேன்' என்று எலி விழுந்த விஷயத்தைச் சுகாதார இலாக்காவுக்குத் தெரிவிக்காமல் இருக்கக் கூடாது. ஏனெனில், அந்த வீட்டில் உள்ளவர்கள் எல்லாரும் இனகுலேஷன் செய்து கொண்டிருந்தாலும் அயல் வீடுகளில் வசிப்பவர்களும், வேறு இடங்களிலிருந்து வந்தவர்களும் இனகுலேஷன் செய்து கொள்ளாதவர்களாக இருக்கலாம்.

மேற் சொன்ன தடை முறைகளை யெல்லாம் பிளேக் பரவும் பிரதேசங்களில், உரியவர்கள் கையாண்டுகொண்டுதான் வருகி

கிறார்கள். அதன் காரணமாய் ஒரு மாதிரியாக பிளேக் அதிகப் படி பரவாமலும் இருக்கிறது. ஆனால் ஜனங்களுடைய அறியாமை காரணமாகவும், போதுமான அளவு அவர்களுடைய ஒத்துழைப்பு சுகாதார இலாக்காக்காரர்களுக்குக் கிடைக்காத காரணத்தாலும் பிளேக்கை அடியோடு ஒழிக்க முடியாமல் திண்டாடுகிறார்கள்.

சுகாதார திட்டங்களையும், சட்டங்களையும் ஏற்படுத்தி விட்டதாலேயே அதிகப்படி நன்மைகள் உண்டாகி விடும் என்றும் எதிர்பார்க்கக் கூடாது. மனித சுபாவத்தை நன்றாய் அறிந்தவர்கள் சட்டத்துடன் யுக்தியையும் பிரயோகம் செய்து ஜெயம் காணுவார்கள். யுக்தியால் பிளேக் தலைநகரில் பரவாமல் ஜெயம் கொண்ட ஒரு புத்திமானின் கதையை இதற்கு உதாரணமாகச் சொல்லலாம்.

இந்தியாவுக்கு வடமேற்கேயுள்ள ஒரு நாட்டில் ஒரு சமயம் பிளேக் வியாதி அதிகமாகப் பரவி தலை நகருக்குச் சமீபத்திலும் வந்து விட்டது. அரசன் பல தடை முறைகளையும், சட்ட திட்டங்களையும் கையாண்டும் பயன்படாமல் மனமுடைந்து, மறுபடியும் மந்திரிமார்களை வரவழைத்து ஆலோசனை சபை கூட்டினான். இது வரை அமுலுக்குக் கொண்டு வந்த முறைகளைவிட வேறு புது முறை எதையும் எடுத்துக் காட்ட முடியாமல் மந்திரிகள் திகைத்தனர். அப்பொழுது பிரதம மந்திரிக்கு திடீரென்று ஒரு எண்ணம் தோன்றியது. உடனே அவர் அரசனிடம் "சில நாட்களுக்கு முன்பு நான் ஒரு சன்யாசியைத் தெருவில் கண்டேன். அவர் அயல் நாட்டினர் போல் காணப்பட்டார். அவரது முகப் பொலிவால் அவர் மிகவும் அறிவாளியாக இருக்க வேண்டும் என்று யூகித்தேன். அவரைக் கண்டுபிடித்து அவர் யோஜனையைக் கேட்டால் ஒரு வேளை அது நமக்குப் பயன் படும்." என்றார். அவரைத் தேடிப் பிடித்து அழைத்துவர உத்திரவு செய்தார்.

மறுநாளே அரசன் ஆணைக்கிணங்க வந்த அந்தச் சந்நியாசியை மந்திரி அரசனுக்கு அறிமுகம் செய்து வைத்தார். சந்நியாசி ரஷ்யா, சீனா, திபெத், பார்ஷியா முதலான தேசங்களில் எல்லாம் சஞ்சாரம் செய்திருப்பதாக அறிந்த அரசர், "பிளேக் கொள்ளை நோயின் காரணங்களும், வியாதிக் குறிகளும், தடுக்கும் முறைகளும் உங்களுக்குத் தெரியுமா?" என்று அரசன் கேட்க, அதற்கு சந்நியாசி, "ஏதோ சிலவிஷயங்கள் தெரிந்து கொண்டிருக்கிறேன்" என்றார். "அப்படியானால் என் தலை நகருக்கு இந்தக் கொள்ளை நோய் வராதபடி தடுத்து எங்களைக் காப்பாற்ற வேண்டும்" என்று மன்னர் வேண்டினார்.

"இது விஷயத்தில் என்னால் முடிந்ததைச் செய்கிறேன். ஆனால் ஒரு நிபந்தனைக்கு நீங்கள் சம்மதிக்க வேண்டும். குறிப்பாய் நான் சொல்லுகிறபடியெல்லாம் உங்கள் பிரதம மந்திரி சில நாட்களுக்குக் கேட்டு நடக்க வேண்டும். நான் இடும் கட்டளைகள் அவருக்கு மிகவும் பயித்தியக் காரத்தனம் என்று தோன்றினாலும் சரி, அவைகளை மறுக்கக் கூடாது. இதற்கு ஒத்துக் கொண்டால் என்னால் ஆகும் உதவியைச் செய்யத் தடையில்லை." என்றார் சன்யாசி. அரசனும் அவ்விதமாகவே நடந்துகொள்ளும்படி மந்திரிக்கு ஆணையிட்டு விட்டு, நடக்கப் போவதை எதிர்பார்த்து நின்றார். மேதைகளின்

வழியே வேறு! அவர்கள் ஏட்டுச் சுவடிகள் படித்து அத்துடன் நின்று விட்டவர்கள் அல்ல. உலக ஞானம், மக்கள் மனோ நிலை முதலியவைகளை நன்றாக அறிந்தவர்கள்.

சந்நியாசியின் உத்திரவுப்படி மந்திரி தண்டோரா முழக்கி நகரில் இருக்கும் பிரபல வைர வியாபாரிகளை யெல்லாம் தங்களிடம் இருக்கும் மிகச் சிறந்த வைரங்களை எடுத்து வரும்படி செய்தார். சந்நியாசி அவைகளிலிருந்து பத்து வைரங்களைப் பொறுக்கிக் கொண்டு அவற்றிற்கு உரிய விலையை வாங்கிக் கொடுத்து அனுப்பினார். பிறகு சில எலிகளைக் கூண்டில் பிடித்துக் கொண்டு வரும்படி செய்து, ஒவ்வொரு எலியின் வயிற்றிலும் 'ஆபரேஷன்' செய்து அதில் ஒவ்வொரு வைரத்தைப் புதைத்து மறுபடியும் முன்போல் தைத்து விட்டு ஏதோ மருந்தைத் தடவி கூண்டில் விட்டுவிட்டார். இப்படியாக பத்து வைரங்களையும் பத்து எலியின் வயிற்றில் வைத்து அவைகளுக்கு வேண்டிய சிகிச்சை செய்து ரணத்தை சில தினங்களில் ஆற்றி விட்டார். இதை யெல்லாம் பார்த்துக் கொண்டிருந்த மந்திரி முதலானவர்கள் இந்தச் சந்நியாசியைப் பைத்தியக்காரன் என்று சொல்லாமல் இருக்க முடியுமா? ஆச்சரியத்துடன் பார்த்துக் கொண்டு அவரிடம் நம்பிக்கை குறைந்தவர்களாய் மந்திரியும் மற்ற ஆலோசனை சபையினரும் அவர் செய்வதைப் பொருமையுடன் பார்த்துக் கொண்டு இருந்தார்கள். அரசனும் பொறுத்துக் கொண்டிருந்தான். இந்தச் சமாசாரங்கள் எல்லாம் ஊர் பூராவும் பரவி விட்டது.

எலிகளை ஆபரேஷன் செய்த இரண்டு வாரங்களுக்குப் பிறகு ஒரு நாள் நடு இரவு நிலா இல்லாத காலத்தில், தெருக்களில் ஜன சந்தடி இல்லாத போது சந்யாசி அந்தப் பத்து கூண்டுகளையும் தன்னுடன் எடுத்து வரும்படி செய்து மந்திரியுடன் தெருத் தெருவாகச் சுற்றிக் கொண்டு ஜனநெருக்கமும், சாக்கடைகளும், குப்பை கூளங்களும் அதிகமாக இருக்கும் சந்து ஒன்றில் ஒரு கூண்டைத் திறந்து எலியை விட்டு விட்டார். அந்த எலி போன இடம் தெரியாமல் எங்கேயோ ஓடிப் போய் விட்டது. மந்திரிக்கும், வேலைக்காரர்களும் உண்டான ஆச்சரியம் அளவு கடந்தது. மந்திரி வேதனை அடைந்து "விலை பெற்ற வைரம் எலியுடன் போய் விட்டதே! அரசாங்கத்திற்கு அதிக நஷ்டம் ஏற்படுமே" என்று சந்நியாசியிடம் சொன்னார். இதற்கு சந்நியாசி "பிறகு சொல்லுகிறேன். இப்பொழுது சும்மா பார்த்துக் கொண்டிரும்" என்று சொல்லி விட்டார். இப்படியே அந்த நடு நிசியில் எல்லாரும் நித்திரையில் ஆழ்ந்து கிடக்கும் காலத்தில் ஊரில் பத்து முக்கியமான ஆரோக்கியமற்ற சந்துகளில் சந்துக்கு ஒன்றாக பத்து எலிகளையும் விட்டு விட்டுத் திரும்பினார்கள். கூடப் போனவர்களுக்குத் தூக்கம் வருமா? மந்திரிக்கோ அரசன் என்ன சொல்லப் போகிறாரோ என்ற துக்கம். 'இந்தப் பைத்தியக்காரன் செய்த காரியத்தைத் தடை செய்யாமல் ஏன் பார்த்துக் கொண்டு நின்றாய்" என்று கேட்டு விட்டால் என்ன செய்வது என்ற பயம்.

சூரியோதயம் ஆனவுடன் பின் வருமாறு தெருத் தெருவாக தண்டோரா முழங்கியது:-

"மிகுந்த விலைபெற்ற வைரங்கள் வயிற்றில் புதைக்கப்பட்ட

பத்து எலிகள் கூண்டினின்றும் வெளியே விட்டு விடப் பட்டன. அந்த வைரங்கள் சர்க்காருக்குச் சேர்ந்தவை யானுலும் அந்த எலி களை யார் பிடித்து வைரத்தை, எடுத்து அரசனிடம் காண்பிக் கிருர்களோ அவர்களுக்கே அந்த வைரத்தை அரசர் பரிசாக அளிப் பார். அந்த வைரங்களை யாரும் எடுத்து ஒருவரிடமும் விற்க முடி யாது. ஒளித்து வைத்தவர்கள் கடுந் தண்டனைக்கு ஆளா வார்கள்.''

இந்தத் தண்டோராவைக் கேட்ட ஜனங்கள் தங்கள் தங்கள் வேலையை மறந்தார்கள். எங்கு பார்த்தாலும் ஒவ்வொரு வீட்டி லும் ஆண், பெண் இளைஞர், முதி யோர் அடங்கலும் எல்லாரும் எலி வேட்டைக்கு ஆரம்பித்து விட்டார்கள். ஆயிரக்கணக்கான எலிகள் வைரத்திற்காக பிடித்துக் கொல்லப்பட்டன. 'எனக்கு அதிர் ஷ்டம் வராதா, எனக்குப் பாக்கி யம் கிடைக்காதா' என்று தீவிர மாக எலி வேட்டை ஆடினுர்கள்.

சில நாட்களில் ஒன்றன் பின் ஒன்ருக வைரங்களெல்லாம் அரசன் சந்நிதியில் வைக்கப்பட்டு அதைக் கண்டு பிடித்த ஒவ்வொரு வருக்கும் விசேஷ மரியாதை களுடன் பரிசு அளிக்கப் பட்டது. இந்த முறை காரண மாக அந்நகரத்தில் ஒரு எலி கூட இல்லாமல் ஒழிந்து விட்டது.

நகரத்தைச் சுற்றிலும் பல இடங் களில் பிளேக் வியாதி தீவிரமாய்ப் பரவியிருந்த போதிலும் அரசனு டைய பிரதான நகருக்கு மட்டும் பரவவில்லை. சந்நியாசியின் புத்திக் கூர்மையையும் பொது நலப் பணி யையும் போற்ருதவர்கள் இல்லை. மன்னரும் அமைச்சரும் ஊர் மக்க ளும் அவருக்குத் தங்கள் நன்றிய றிதலைத் தெரிவித்தார்கள்.

இது தான் கதை. வெறும் சட்டங்களைக் கொண்டே பொது ஜன விஷயங்களில் ஜெயம் பெறு வது கஷ்டம் என்பதும், மக்களு டைய மனப்போக்கையும் அறிந்து அதற்குத் தகுந்த யுக்திகளையும் சமயோசிதம் போல் கையாள வேண்டும் என்பதும் தான் இக் கதையில் பொதிந்துள்ள உண்மை.

மலரெனும் பொங்கல்!

அமிழ்தினும் இனிய கலைபல பூத்த
தமிழ்நா டென்னும் தடாக மதனில்
அருளெனும் செம்பொற் கதிரொளி வீசி
இருட்டிரை கிழித்துக் கதிரவ னுதிக்க
மலரெனும் பொங்கற் புதுநாள் இன்றே
அலர்ந்தது கண்டீர்! அதன் மணம் நுகர்ந்து
மதுவாம் அதனுள் நிரம்பிய இன்பப்
புதுநல வாழ்வைப் பருகியே என்றும்
பொன்னும் பொருளும் புகழுநல் லாற்றலும்
இன்னும் ஏனைய வளமுடன் வாழ்க.

— எஸ். பாலசுந்தரம்

இயற்கை

"உல்லாசன்"

ஒரு நூறு காதல் கண்ணிகளால் என்
இதயத்தைப் பிணைத்து வருகிறாய்.
இது என்ன விளையாட்டு?
சின்னஞ் சிறிய நிலையற்ற வாழ்க்கை தானே!
இதைப் பிணைப்பதற்கா இத்தனை கண்ணிகள்?
ஒவ்வொரு கணத்திலும் விதவிதமான வழிகளில்
உன் குறும்புச் செய்கைகளால் என்
காதலை நீ பெற்று விடுகிறாய்;
ஆனால், உள்ளக் கள்ளியே!
எனக்கு அளிப்பதற்கு உன்னிடம்
ஒன்றுமே யில்லையா?

ஈரமற்ற இயற்கையே!

உன் உள்ளத்தைத் தேடி நான் அலைந்து திரிகிறேன்.
எத்தனை மலர்கள்! எவ்வளவு பிரகாசம்!
எவ்வித கானங்கள்! நறுமணங்கள்!
ஆனால், காதல் எங்கே?
மக்கள் கண்ணீர் சிந்தும் போது நீ
உன் எழில் செல்வத்திலே மறைந்து
சிரித்துக் கொண்டிருக்கிறாய்!
ஜனசந்தடியற்ற அந்த வீதியிலே நீ
இரவும் பகலும் குதூகலமாய் விளையாடிக் கொண்
டிருக்கிறாய்.
நீ யாரை விரும்புகிறாய் வெறுக்கிறாய் என்பது
எங்களுக்குத் தெரிவதே யில்லை.
காலையில் உன்னால் இரக்கம் காட்டி
அன்பு காட்டுபவர்கள்
மாலையில் புறக்கணிக்கப் பட்டு
புழுதியிலே புரளுகிறார்கள்.
எனினும் உன்னை நான் நேசிக்கிறேன்.
மறக்கவும் முடியவில்லை, மாயக்காரியே!
அன்பற்ற உன் ஆலிங்கனம் என்
இதயத்தில் ஆயிரம் கானங்களை எழுப்புகின்றது.

இன்பத்திலும் துன்பத்திலும் நான்
பரிதியின் ஒளியிலே வாழ்கிறேன்.
எல்லையற்ற இரவில் மரத்துப் போன
அமைதியை நான் விரும்பவில்லை.

பாதி விரிந்து பாதி மூடிய உன்
முகக்கமலமே அதிசயத்தின் இருப்பிடம்.

அது

பயத்தோடு கலந்த காதலை
இதயத்திற்கு ஊட்டுகிறது.
என்றும் புத்தம் புதியதாகத் தோன்றும்
உன் காட்சிகள்
அறிவை எல்லாம் தாண்டியவை-
சிரிப்பாலும் கண்ணீராலும்
இதயம் நிறைவடைகிறது.
இதயத்தையும் உள்ளத்தையும் பெருக்கி
உன்னை நோக்கி விரைந்து வருகிறேன்.

ஆனல்,

என் பிடியிலிருந்து நீ
நழுவி விடுகிறுயே!
சூரியனைப் போன்று சிவந்த
உன் இதழ்களில்
மெல்லிய, இனிய, குறும்புச் சிரிப்பைக்
காண்கிறேன்.
உன்னை விட்டு ஓடிவிட நான் விரும்பினல்
என் கால்களைப் பிணைக்க நீ
வலையை வீசி விடுகிறுய்.
எவ்வளவு குறும்பு! எவ்வளவு சக்தி!
எவ்வளவு வேகம்! எவ்வளவு பேச்சு!
உன் வல்லமையும் சக்தியும்
உனக்கே தெரிவதில்லை.
காரிருள் சூழ்ந்த அந்த இரவிலே
ஏழுலகமும் தூக்கத்தில் ஆழ்ந்திருக்கும்.
அப்பொழுது நீ
கோடி நக்ஷத்திர தீபங்களைக் கையில்
ஏந்திக் கொண்டு
அசைவுடனும் அமைதியுடனும்
ஆகாயத்தில் நின்று கொண்டிருக்கிறுய்!

இன்னுமோரிடத்தில்,

நிரந்தர அமைதியின் விரதம் பூண்டு
என்றும் தனியாகவே இருந்து விடுகிறாய்.
எங்கும் வறண்டு கடினமான
விருக்ஷங்களற்ற பாலைவனத்தின் தனிமை!
சூரிய சந்திரர்கள் உச்சிக்கு மேலே
எழும்பிக் கொண்டிருக்கின்றனர்.
அவர்கள் உன்னைப் பார்க்கின்றனர்.
ஆனால், ஒரு வார்த்தைகூடப் பேசாமல்
உன்னைக் கடந்து செல்கின்றனர்.

பிறிதோரிடத்தில்

கூந்தலும் ஆடையும் காற்றில் பறக்க
வெட்கத்தின் சாயலே இல்லாமல்
சுனை போல வழிந்தோடும் சிரிப்போடு
இன்னும் நீ தவழ்ந்து விளையாடுகிறாய்.
சின்னஞ் சிறு பெண் குழந்தை போல.
உன் வார்த்தைகளும் கானங்களும்
இதயத்திலிருந்து பொங்கி
எல்லையின்றி எழும்பிக் கொண்டுமிருக்கின்றன.

இன்னும்

கதியற்ற பூமியின் மார்பை,
கோபம் பொறித்த கண்களோடும்
சடுதியில் செல்லும் வன்மையோடும்
விட்டு விட்டெரியும் சாபத் தீயினால்
நீ தாக்குகிறாய்;
சில வேளை அந்தி மாலையிலே
மகத்தான துயரால் இரங்கி
இரக்கம் மங்கிய நிழல் போல
உன் முகத்தை மறைக்கிறது.

இப்படித்தான் நீ எண்ணற்ற
இதயங்களைச் செயித்து விட்டாய்
யுகம் யுகமாக உன் வதனம்
புதுமையும் இனிமையும் கலந்ததாகவே இருக்கிறது.
பல தோற்றங்களில் மாறிமாறி
நீ எல்லோருக்கும் அண்மையில் இருந்திருக்கிறாய்.

ஆனல் ஒருவருக்காவது நீ
உன்னைக் கொடுத்து விடவில்லை.
உன்னை அறிய இயலாமல் நான்
எவ்வளவு தவிக்கிறேனே
அவ்வளவு தூரம் நான் உன்
அழகின் விழுமிய செழிப்பினை அறிகிறேன்.
என் காதல் வளர்வது போல என்
துன்பமும் பெருகுகிறது.
இவ்விதமே நான் மகிழ்கிறேன்.
துயருறுகிறேன்.
என்னை விட்டு நீ அகன்று செல்லச் செல்ல
என் துயரமும் பெருகுகிறது.
எவ்வளவு குறைவாக உன்னை அறிகிறேனே
அவ்வளவு அதிகமாக உனை நான் காதலிக்கிறேன்.

(ரவீந்திரநாத் தாகூர் எழுதிய "இயற்கை" ("Nature") என்ற கவிதையைத் தழுவியது.)



43. வலை வீச்சு

உல்லாச மாளிகையில் பல உல்லாசப் படிகளுண்டு; அவை படிப்படியாக ஆளை மயக்கி பிஜிலிக்குப் படிய வைப்பன. ஒவ்வொரு படியிலும் வெவ்வேறு அழகும் இன்பமும் தோன்றும் போலியழகும்,போலியின்பமுமே. ஆங்காங்கே மின்சாரப் பதுமைகள் கண்ணடித்துக் கொண்டிருக்கும்; ஐந்தாம் உல்லாசத்திலுள்ள பதுமை மட்டும் கை குலுக்கி வரவேற்கும்; உள்ளே சென்றால் சுற்றிலும் நிலைக்கண்ணாடிகள் காணும். கண்ணாடிகளுக்கு மேலே அழகான காதற் களியாட்டக் காட்சிகள் நிறமிட்டொளிரும். நட்சத்திரம் பதித்த வான விற்குழாங்களைப்போல், அணி மணிப் பாவையர் தோன்றுவர்; அவர்களுடைய புன்னகையுடன் வைரத்தோடும், புல்லாக்கும் மின்னொளியில் 'டால்' அடிக்கும்போது, வாலிபர் உள்ளம் படபடக்கும்; அங்கே நடக்கும் வரவேற்புகளை ஏற்று அமர்ந்ததும், தாமரைக் கண்கள் கயல் புரளும்; காணும் கண்ணில் மின்சாரத் தூண்டில் பாய்ந்து துடிக்கும்; மனமீனைக் கௌவிப் பிடிக்கும்; பொன் வண்டும் ஜலதரங்கமும் சேர்ந்தது போல் அவர்கள் கலகல வென்று சிரித்தாலோ, உள்ளம் புயல் வீசிக் கொந்தளிக்கும். எங்கும் காம வெறியேற்றும் அழகு மின்னல்கள் தாவித் தாவி வளைக்கும். அந்த மதன உல்லாச ஹாலில் தமிழ்மணியைக் காண்கிறோம்.

வட்டச் சலவை மேஜைமேல் பூக்கள், சிற்றுண்டிகள், ஹாம்பைன் எல்லாம் பளப்பளப்பாக வைக்கப் பெற்றுள்ளன; சுற்றிலும் மஹமல் — நாற்காலிகளில் அத்தர், குப்பையா, ரோஜா, டக்கர் முதலியோர் அமர்ந்திருக்கிறார்கள்; பிஜலி ஒய்யாரமாக வந்து ஒரு தங்க நாற்காலி (பூச்சுத்தங்கந்தான்) யில் அரசி மாதிரி அமர்ந்து, எதிரேயிருந்த தமிழ்மணியைப் பார்த்துப் புன்னகைக்கிறாள். தமிழ் மணியின் பக்கத்தில் ஜவ்வாது வந்து 'ஜம்' என்றமர்ந்து தன் ஜவ்வாது மணத்தை வலதுபுறம் தூதனுப்பிக் கண் கோணத்தில் ஒரு புன்னகை வைத்துத் தன் மனக்கோணலையும் அறிவிக்கிறாள். அடுத்த அறையிலிருந்து 'இஹ்ம்' என்றொரு கனைப்பு வருகிறது; அங்கே டுணுக்கேசர் மறைந்திருக்கிறார். தமிழ்மணி சுற்றிப் பார்த்தான்; நிமிர்ந்து பார்த்தான், குனிந்து பார்த்தான், அண்ணாந்து பார்த்தான். எங்கும் அழகின் வலைகள்; மினுக்கின் கண்

ணிகள். இந்த அழகில் அருளில்லை; அருளில்லா அழகு இருளே — என்பதை அறிந்த புலவனுதலால், தமிழ்மணி சட்டிச்சாமியாரை நினைத்துத் திருநீறிட்டுக் கொண்டு பிஜிலியின் சாயம் பூசிய அழகை நோக்கினுன். பிறகு அடக்கமான புன்னகையுடன் பிஜிலியின் வரவேற்பை ஏற்ருன். பிஜிலி தன் மணிப்ரவாள ஆங்கிலத்தைக் கிண்கிணிக் குரலிற் பேசத் தொடங்கினுள்.

பிஜிலி: ரொம்ப ஸாடிஸ் பாக்ஷனுங்க (மகிழ்ச்சி). பிளேட்டில் தங்கள் ம்யூஸிக் வெறி ஸ்வீட் (தங்கள் தட்டிசை மிக்க இனிது)

தமிழ்: தங்களுக்குத் தமிழும் வருமோ?

பிஜிலி: என் மதர் டங் தமிழ் தானே; ஒயிட் வோர்ள்ட் டூரினுல் பல லாங்கேஜுகள் தெரியும் (உலகை விரிந்து சுற்றிப் பன்மொழி யறிந்தேன்) தங்களுக்கு இங்கிலிஷ் வருமோ?

[போதும் உதாரணம்; பிஜிலி பேசிய படியே நானும் எழுதினுல் தமிழ் குட்டிச்சுவராகும். ஆதலால் ஆங்கிலம் முக்காலே அரைக்கால் — தமிழில் அரைக்கால் கொண்ட பிஜிலி பேச்சை நானே மொழி பெயர்த்துத் தமிழைப் பாது காக்கிறேன்]

தமிழ்: வரும்; ஆனுல் தமிழே எனக்கினிது. தாங்கள் தமிழர் என்பதால் தமிழிலேயே பேசுகிறேன். விளங்கா விட்டால் கேளுங்கள் ஆங்கிலத்தில் விளக்குகிறேன்.

பிஜிலி: எனக்கெல்லாந் தெரியும்; விருந்துக்கு முன் ஒரு பாட்டு நடக்கட்டுமே! ஜவ்வாது சுருதி கூட்டு.

ஜவ்வாது மாயப் புன்னகையுடன் தமிழ்மணியைப் பார்த்துக் கைக்குட்டையால் முக வேர்வையை ஒத்திக்கொண்டு சுருதி மீட்டினுள். தமிழ்மணி இயல்பாக தோடி ராகத்தை இனிமையாக இழுத்து ஒரு கீர்த்தனம் பாடினுன்:—

தோடி — ஆதி

பல்லவி

வா கலாபமயில் மேல் — வடிவேலவா
வந்தென் கலை விருந்
தருந்தி மகிழ்ந்திடவே (வா)

அனுபல்லவி

நா வார உனை நான் — ஆறுமுகனே
நல்ல! தமிழிசையாற்
சொல்லிச் சொல்லிக் கொண்டாட (வா)

சரணம்

தீயர் உறவை விட்டுத்
தூய தொண்டரை நட்டுத்
தாயினும் அன்புறமுன்
சேய்போலிருந்து மனப்
பேயை அடக்கிச் சிவ
நேயந்தந் தனியெப்போதுந்
தோயும் பேரின்பந்தரத்
துள்ளி வள்ளியுடனே (வா)

தமிழ்மணியின் பாட்டு, குரல்; உணர்ச்சி, தாளக்கட்டு — அனைத்தையுங் கேட்டு பிஜிலி உள்ளே வியந்தாள் — தன்னை இவன் மிஞ்சி விட்டான் என்றும் பயந்தாள். அடுத்த நினைப்பு இந்த வாலிபனை எப்படியாவது தன் அடிமையாக்குவதே. அதற்கேற்றபடி பேச்சைத் தொடங்கினுள்.

பிஜிலி: குரல் நன்ருயிருக்கிறது. இவ்வளவு நன்ருகப் பாடும் நீர் நெல்லு மண்டியிலிருக்கக் கூடாது. தங்களுக்குக் கலியாணமானதா?

தமிழ்: இன்னுமில்லை.

பிஜிலி: இன்னுமில்லையா? நல்ல வாலிபம், கலை, அழகு எல்லாம் சேர்ந்திருக்கின்றன; வாழ்வை

அனுபவிக்க வேண்டாமோ? நானென்று சொல்லுகிறேன் கேட்பீரா? கேட்டால் உம்மைக் கலைச்சிகரத்தில் ஏற்று வேன். உலகெல்லாம் புகழச் செய்வேன். அதற்காக என் கலைச் செல்வமெல்லாம் தரு வேன்.

தமிழ்: சொல்லும் தெளிவாக.

பிஜிலி: தெளிவாகச் சொல்லி விடு கிறேன். எங்கள் உல்லாசக் கூட்டம் கலைக்கே வாழுகிறது; கலப்பில்லாத கலையின்பமே எங் கள் நோக்கம். இங்கே வாழ் வெல்லாம் ஆடலும், பாடலும் அழகும் ஆனந்தமுமே — தாங் கள் பேசாமல் நெல் மண்டியை விற்று விட்டு, எங்களுடன் ஐக்கியமாய் விடுங்கள். என் சொந்தப் பிள்ளைபோலத் தங் களை நான் அன்பாக ஆதரிப் பேன். கலைச் செல்வம் நிரம் பத் தருவேன்.

தமிழ்: கலைச் செல்வத்தை நன்றி யுடன் பெற்றுக் கொள்கிறேன். ஆனல் இங்கே வந்திருக்க முடி யாது; நான் ஒரு கலைக்கோயில் எழுப்பக் கருதிக் கொண்டிருக் கிறேன். அதற்கேற்ற துணை யையே நாடுகிறேன்.

பிஜிலி: உல்லாச மாளிகையை விட இன்பமான கலைக்கோயில் உண்டா? இதையே உலகக் கலைநிலைய மாக்கப் போகிறேம். தங்கள் கலை — நோக்கத்தை யும் இங்கேயே நாட்டலாமே; அந்த நோக்கம் நிறைவேற ஓர் அழகான துணையும் இதோ தயா ராயிருக்கிறது. என் அருமை ஜவ்வாது நடனமயில்; சங்கீதக் குயில்; பேச்சுக்கிளி; அழகுத் தங்கம். அவளை மெச்சாத கலை வாணரில்லை; இரண்டு பேரும் அன்புடன் இருந்து இங்கேயே கலையை வளர்க்கலாமே.

தமிழ்: அம்மையே நான் பெண் துணையை விரும்பவில்லை.

பிஜிலி: பெண் துணையில்லாமல் உலகமேது? இப்போது வடி வேலனை வா வா என்று பாடி னீரே; அதில் வேலனை வள்ளி யுடன் ஏன் வரச் சொன்னீர்? உமது வேலன் வள்ளியைக் கைப்பற்றச் செய்த தந்திரமும் மந்திரமும் உலகறியுமே. ஒரு குறத்திக்காக மாஸ்டர் பரம சிவன் அப்படி உருகிக் காதல் பெருகி ...... வேஷம் போட் டானே. தங்கமான என் ஜவ் வாதை நீர் மறுப்பதேன்? இப் படி வறட்டுப் பிரமசாரிக் கட் டைக்குக் கலை என்ன கிலை என்ன? முருகன் கிருகன் என்று பாடுவது, பக்தி செய் வது; முருகன் செய்ததைச் செய்யச் சொன்னல் மாட் டேன் என்பதா? சம்மதிக்காத வள்ளியை உங்கள் ஆறுமுகன் கெஞ்சினனே? பிறகு யானை அண்ணாவை விட்டுப் பயமுறுத் தினனே; யானை பயத்தில் மானை அணைந்தானே; குறவர் காணு மல் அவளைத் தூக்கிச் சென் ருனே......கதிர்காம லீலையெல் லாம் தெரியாதா? அதைப் பரம பக்தரான நீர் செய்யலாகா தோ?

தமிழ்: அம்மணி, வள்ளி முருகன் கதையின் உள்ளப் பொருள் வேறு; அதையறிந்தால் இப் படி முருகனைப் பழிக்கமாட் டீர். தாங்கள் பேசுவது அப சாரம். முருகன் என்பது அழ கிய சிவக்கனல்; அக்கனலின் இச்சா சக்தியும் ஞான சக்தி யுமே வள்ளி — தெய்வயானை யர் ஆவார்.

துப்பையா: அம்மாள் வள்ளியை மட்டும் சொன்னர்; தாங்கள் தெய்வானையையும் வம்பில் இழுத்து விட்டீர்கள்; அம்மா முருகன் இரட்டைப் பெண் சாதிக்காரன் என்பது தங்களுக்குத் தெரியா விட்டால் உடனே தெரிந்து கொள்ளலாம். முருகனுக்கு ஒரு தெய்வயானை மூத்தாள்; அந்த யானை போதாதென்று ஆனையண்ணுவால் வள்ளிமானையும் வலையில் பிடித்தான் வடிவேலன்; யானையையும் மானையும் மயில்மேல் தூக்கி வைத்துக் கொண்டான்; மயிலுக்கு அடியில் ஒரு பாம்பும் உண்டு. இரண்டு மனைவியருக்கும் சண்டை வந்து தன்மேல் பாய்ந்தால், பாம்பைவிட்டுப் பயமுறுத்துவான். முருகன் செய்த இந்தக் காரியத்தைப் பகுத்தறிவுக்கு எட்டாத புராணப் புளுகர், சிவக்கனல் இச்சா சக்தி ஞான சக்தி என்று மழுப்புகிருர்கள். நண்பரே நீர் உண்மையான முருக பக்தன் எனத் தெரிகிறது. காரியத்திலும் முருகனைத் தடையென்ன? எங்கள் நடனராணி சொல்லுவதன் கருத்தும் இதுவே.

தமிழ்: நண்பரே இது கருத்தன்று; வெறும் கிண்டல் — உட்பொருள் அறிந்தால் உளரமாட்டீர்.

துப்: நண்பரே நாங்கள் உட்பொருள் வைத்துப் பேசுவதில்லை; கண்ணாரக் கண்டு காதாரக் கேட்டே பேசுகிறோம். முருகன் வள்ளியைக் கெஞ்சியதும், மிஞ்சியதும் அண்ணாமலை ரெட்டியார் காவடிச் சிந்திலும், குஞ்சரி, சுப்பராம — பதங்களிலும் பார்த்துக் கொள்ளுங்கள்.

பிஜிலி: பார்ப்பதென்ன, கேட்கலாமே; ஜவ்வாது பாதி ராத்திரி வேளையில் பாடடீ.................

ஜவ்வாது உடனே சுருதி கூட்டிப்பாடினள்; பாட்டுடன் மிருதங்கம், பிடில், குழல் எல்லாம் சேர்ந்தன —

பாதி ராத்திரி வேளையில் விட்டுப்
பக்கத்தில் வந்து — மேவிப் — பஞ்ச
பாதகனொரு பாவி — சிறு
பாவையை மெல்லக் கூவிக் — கையைப்
பற்றிக் கூட்டிக் கொண்டேகினன் —
பதை
பதைக்குதே என்றன் ஆவி......

அத்தர், டக்கர்: ஹ ஹ ஹ! சபாஷ் முருகா! ஷண்முகனுக்கு ஜே!

பிஜிலி: பார்த்தாயா முருகன் வேலையை — இதுவும் இச்சா சக்தி வேலைதானே? சரி 'ஆறுமுக வடிவேலனே' பாடடீ ஜவ்வாது.

துப்: கேட்டுக்கேட்டுப் புளித்த பாட்டு; அதில் ஆத்திரக்காரருக்கு என்பதை மட்டும் பாடு.

ஜவ்வாது:

ஆத்திரக் காரர்க்குப்
புத்தி கொஞ்சம் என்பார்
ஆரும் பழமொழியே — நீயும்
அப்படி என்னைப்
பலாத்காரம் செய்திடில்
ஆச்சுது பெண்பழியே......

அத்தர்-டக்கர்: ஹ ஹ ஹ — நல்ல யோக்கியன்தான் — பாரேன் குறும்பை.

துப்: இன்னொரு வேடிக்கையைப் பார் — ஜவ்வாது 'வன்னத் தினைமாவைத் தெள்ளியே' பாடடீ......

ஜவ்வாது பாட்டுடன் நிற்கவில்லை. நடனமாடத் தொடங்கிவிட்டாள். வன்னத் தினைமாவில் ஒவ்வோரடியும் அழுந்தப்பாடி,

கன்னத்திலே குயிற் சத்தமே —
கேட்கக்
கலங்குது பாரென்றன் சித்தமே —
மயக்

கஞ்செயுதே ஆசைப் பித்தமே —
உடல்
கனலேறிய மெழுகாயின
தினியாகிலும் அடிபாதகி
காட்டாயம் நீயொரு முத்தமே —
தந்தால்
கைதொழு வேனுனை நித்தமே —

"சபாஷ் ஷண்முக சரவணபவா! வள்ளிகாதலனுக்கு ஜே! ஹ ஹ" என்று எல்லாரும் ஆர்த்து ஒருவரை யொருவர் பார்த்துக் கொண்டனர்; கன்னங்கள் ஒட்டின. பிறகு பிஜிலி கோப்பைகளில் ஒரு பானத்தை ஊற்றித் தந்தாள். எல்லாரும் குடித்தனர். தமிழ் மணி தொடவில்லை. பிஜிலி பவள வாயால் முத்து நகை புரிந்து "தங்கள் முருகன் குட்டு வெளியாயிற்றென்று பயப் படாதீர்! இதைச் சாப்பிடும்; பிறகு முருகனுடைய தத்துவார்த்தமெல்லாம் உமக்கு இடதுபக்கத்தில் இன்பமயமாகக் காணும்.

தமிழ் : இஃதென்ன?

துப் : இஃதா? இஃது ஓர் தரம் அருந்தினல் பத்து மடங்கு இன்பந்தரும்; பிறகு தத்துவார்த்தம் பேசினல் குஷியாகச் சிரிப்போம்.

தமிழ் : மன்னிக்க வேண்டும், நான் சிவ பூஜை செய்த வீட்டிலேதான் உண்பது.

பிஜிலி : இது வீடில்லையா? சிவனே இங்கே அவதரித்திருக்கையில்...

தமிழ் : அம்மணி சிவனுக்கு அவதாரமில்லை.

பிஜிலி : அவதாரம் இல்லா விட்டாலும் தாரம் உண்டு; அவரும் கன்னி கௌரியுடன் பாதியுடல் ஒட்டிக் கொண்டவரே. எங்கே ஜவ்வாது 'பெண்ணைப் பழிக் காதே' பாடு — காபி ராகம்.

ஜவ்வாது :

பெண்ணைப் பழிக்காதே — முக்
கண்ணன் பாதியுடலைப்
பெண்ணுக்குத் தந்தானே ...

பிஜிலி : போதும்; சிவனே தன் மனைவிக்குப் பாதியுடலைத் தந்த போது நீர் வரட்டுப்பிரமசாரியாகத் திண்டாடுவானேன்? சிவன் பாதியுடலைத் தந்தான்; சிவ பக்தர் முழு உடலையுமல்லவா பெண்களுக்குத் தர வேண்டும்? இந்தக் கோப்பையைக் காலி பண்ணிவிட்டுப் பார்த்தால் உமக்குச் சிவபார்வதி தத்துவம் மூளையில் நுழையும்.

தமிழ் : மது மாது இரண்டும் சிற்றின்பத்தின்பாற் படும்; நான் வேண்டுவது பேரின்பம்.

துப் : தங்களுக்கு ஒரு பேரின்பத்திற்குப் பதில் இரண்டு பேரின்பம் தருவேன் — பாரும். மது மாது இரண்டையும் வெறுப்பவனுக்குச் சிற்றின்பங்கூடக் கிடைக்காது; எனில் பேரின்பம் எப்படி வரும்? தாந்திரிக யோகம் என்று ஒரு இன்பமான யோகம் உண்டு; தெரியுமா? அது ஆகம சூத்திரத்தில் உள்ளதாம். அந்த யோகத்திற்குத் தான் அதிகப் புத்தகங்களை எழுதியிருக்கிறார்கள் முனிவர்கள். நூறு தாந்திர நூல்கள் உள்ளன. அவற்றின் சாரமே பஞ்சமகா சாதனம். மது, மாமிசம், மச்சம், மாது, முத்திரை — இவையே சாதனம்; இவற்ருல் இரு பாலரும் கூடிப் பேரின்பம் பெறுவார்கள் என்று முனிவர் உரைத்தார்களே — நீரேன் அவர் சொல்லை மறுக்கிறீர்? உமக்கும் சாத்திரப் பைத்தியம் உண்டோ?

தமிழ் : ஐயா இதெல்லாம் குடிகாரர் செய்த கூத்து. ஆகம

த்தை அனர்த்தம் செய்த போலி களின் வேலை. வள்ளுவர் என்ற ஒரு முனிவர் உலகுக் கெல்லாம் நீதி சொன்னரே தெரியுமா? அவர் கள்ளுண்டவர் நஞ்சுண்பவர்; பிற மாதரைக் கூடினர் இருட்டறையில் பிணத்தைத் தழுவினவர்களுக்குச் சமானம் என்கிருர். அருணகிரிநாதர் வாக்கைக் கேளுங்கள்:

"மலரணி கொண்டைச்
சொருக்கிலே—"

அத்தர்: ஐயோ வேண்டாம் திருப்புகழ்-பாதி பெண் தூஷணை. பாதி பெருமாளே என்ற அழுகைதான்.

தமிழ்: கருவினுருவாகி வந்து பாடவா?

எல்லாரும்: ஐயையோ வேண்டாம்.

தமிழ்: அப்படியானல் இன்னென்று கேளுங்கள் :-

உருக்கம் பேசிய நீலியர் காசுகள்
பறிக்கும் தோஷிகள் மோகவி
காரிகள்
உருட்டும் பார்வையர் மாபழி
காரிகள்
— மதியாதே!

எல்லாரும்: ஐயையோ வேண்டாம் — போதும்.........

தமிழ்மணி இந்த மாதிரி சிறிது அவர்களை அலற வைத்துப் பிறகு வேதநாயகம் பிள்ளையின் பாட்டொன்றைக் கேளுங்கள் என்று சௌராஷ்ட்ர ராகத்தை ஆலாபனம் செய்து பாடத் தொடங்கினன்.

சௌராஷ்ட்ர ராகம் ஆதி தாளம்

பல்லவி

பெண்ணாசையே பெரும் பித்து — அதில்
பிரமிப்பதெல்லாம் விபத்து (பெ)

அனுபல்லவி

கண்ணாலே வலை பூட்டி—அற்ப சுகமே
காட்டிப் புருஷரை வாட்டி வதைக்கும் (பெ)

சரணம்

மண்ணில் எலும்புதோல் அல்லவோ
மாது
மற்றதெல்லாம் செட்டி நட்டான்
செய் சூது;
பெண்ணில்லா விட்டால் பிழைப்பவர்க்
கேது?
பெண் ஜெயமும் அவர் போனுற்
செல்லாது
உண்டால் விஷம்; வெட்டினுற் கொல்
லும் கத்தி;
உன்னினேர் கண்டோரைக் கொல்
லும் பெண் சத்தி—;
அண்டாமல் ஆடவர் ஓடுதல் புத்தி;
அமர்வேத நாயகன் சொற் கேட்டாற்
சித்தி, (பெ)

மணி பாடப் பாட பிஜிலியின் கண் இரத்தம் சிதறியது; அத்தரும் ஜவ்வாதும், "ஐயோ வேண்டாம்"—என்று அலறினர். தமிழ் மணி விளையாட்டாகச் சிரித்துக் கொண்டே தாயுமானவர் "முத்தனைய மூரல்" என்ற பாட்டையும் பாடியே தீர்த்தான். "போதுமா" என்று தமிழ்மணி மிரட்டினன். "ஐயோ போதும்" என்று எல்லாரும் அலறினர்கள்.

துப்: இவையெல்லாம் பெண்ணை மகிழ்விக்க முடியாத பேடிகளின் பிதற்றல். கேள் என் கானடாவை

பெண்ணின்றி உலகுண்டோ—இரு
கண்ணின்றிக் காட்சியுண்டோ?

எல்லாரும்: சபாஷ்! சரியான பதில்......

பிஜிலி: போதும்! காரியத்திற்கு வருவோம். மிஸ்டர் ராமநாதன், நான் தருவதைச் சாப்பிட மாட்டீராக்கும்; கனிகளாவது சாப்பிடும். இதோ திராட்சைக் குலை.........

தமிழ்: கனிகள் உண்பேன்; வீட்டிற்கு எடுத்துச் சென்று சிவ

நிவேதனம் செய்தே உட்கொள்வேன்.

துப்: அட ஒண்ணும் பசலியே! ஹ ஹ — சரி.........

பிஜிலி: சரி. ஒரு விஷயம்; தங்கள் குரல் மிகவும் நன்ருயிருக்கிறது. ஆனல் இன்னும் பழக வேண்டும்; காம்போதி கீம்போதி என்ருல் பாடுவீர். பேஹாக், மால் கோஸ், பாகேச்வரி போன்ற ஹிந்துஸ்தான் ராக ராகிணிகளே இக்காலம் பிரபலமாயிருக்கின்றன. தாங்கள் ஹிந்துஸ்தான் சங்கீதமும் பழக வேண்டும்; அத்துடன் நாட்டியமும் கற்கலாம்.

தமிழ்: நான் கலை பயிலத் தயாராயிருக்கிறேன்.

பிஜிலி: தங்களை ஒன்று கேட்கிறேன்; எங்கள் கம்பெனிக்குச் சங்கீத உதவி செய்து வர முடியுமா? ஆடும் நாட்களில் பாட வேண்டும். முன்பே எங்களுடன் இருந்து பாடிப் பழக வேண்டும்.

தமிழ்: முதலில் நான் வேண்டிய படி மாணிக்க வாசகர் முத்தி பெற்ற கதை நடக்கட்டும்; அதில் நானே மாணிக்க வாசகராக நடிப்பேன்.

பிஜிலி: சந்தோஷம்! ஆனல் நாங்கள் நடத்துவது ஒண்ணும் பசலி மாணிக்க வாசகரன்று; நாங்கள் நாகரிக மாணிக்க வாசகர் நடத்துவோம்.

தமிழ்: சரி, நானும் நவீன மாணிக்க வாசகராவேன். அதற்கேற்ற பாட்டும் நடனமும் நானே பழகிக் கொள்வேன். எனக்கும் நடிக்கத் தெரியும். நான் நடிப்பதும் நவீன மாணிக்க வாசகராகவே யிருக்கும். நான் சென்று நாளை வருகிறேன்.

பிஜிலி: ஜவ்வாது, பேஹாக் ராகத்தில் "பிரியமுள்ள நண்பருக்கு" பாடி அவருக்கு நல்விடை தா பார்ப்போம்.

ஜவ்வாது உடனே பாடத் தொடங்கினள்:

> பிரியமுள்ள நண்பருக்குப்
> பிரியமுள்ள உள்ளன்பைப்
> பிரியமுடனே தருவேன்
> பிரியாதிருப்போம் எந்நாளும்.

முதலடி பாடும்போது, திடீரென ஒரு திரை உயர்ந்ததும், அத்தர், குப்பை எல்லாரும் திரைக்குள் சென்று மறைந்தனர். ஜவ்வாது தமிழ்மணியின் கையைக் குலுக்க வந்தாள். தமிழ்மணி "முத்தையா" என்று கூப்பிட்டான். முத்தையா உடனே வந்து, "வண்டி தயார்" என்று தமிழ்மணியை அழைத்துச் சென்ருன் — தமிழ்மணி, "இன்று இவ்வளவு போதும். நாளை மிச்சமிருக்கட்டும்" என்று விளையாட்டாகச் சொல்லிச் சென்ருன்.

மறுநாள் முதல் தமிழ்மணி உல்லாச மாளிகைக்கு வந்து இந்துஸ்தான் ராகங்களையும், நடனக் கலையையும் தீவிரமாகப் பயின்ருன்; வேறெந்தக் களியாட்டங்களிலும் சேரவில்லை.

44. நவீன மாணிக்கவாசகர்

தமிழ் மணியை முத்தையா "ராமு தப்பினய் இன்று; அதைக் குடித்திருந்தாயோ பைத்தியம் பிடித்திருக்கும் இந்தக் கனிகளையும்

இப்படியே ஜலதாரையில் எறிந்து செல்'' என்றான். தமிழ்மணி அவ்வாறே செய்தான். பராங்குசமும் சிங்கமும் தெருவில் காத்திருந்து மோட்டாரில் ஏறிக் கொண்டனர். தமிழ்மணி அன்றைய நிகழ்ச்சிகளைச் சொன்னான். கலையில் புகுந்த இந்தக் குடி, விபசாரம், பணக் கொள்ளை, இடம்பம், சூது, பொய், வஞ்சனை — ஆகிய பேய்களை ஒழிக்க வேண்டும் என்றான். எல்லாரும் சிங்கம் வீட்டில் இறங்கி இரகசியமாகப் பேசினார்கள். பேச்சில் அடிக்கடி "மாணிக்க வாசகர் சுடலையாடிச் சாமியாரை அம்பலத்திற்குக் கொண்டு வரவேண்டும்'' என்ற பல்லவியே வந்தது. அனுபல்லவியும், சரணமும் உல்லாச மேடையிற் காண்போம்.

மறுநாள் சிவநேசம் வந்து சேர்ந்தார். அவரைப் பராங்குசமும், சிங்கமும் உள்ளே அழைத்து வைத்துச் செய்தியைச் சொல்லி அசல் பர்மியப் பொங்கி போல் வேஷம் போட்டுத் தயார் செய்தனர். தமிழ்மணியும் ஒரு வாரத்தில் ஹிந்துஸ்தான் கீத நுட்பம் — ஆகியவற்றைக் கற்றான். குப்பையாவும் முத்தையாவும் அவனைப் பயிற்றினர். எல்லாம் தயார். வெள்ளிக்கிழமை வந்து விட்டது; தமிழ்மணி உள்ளம் துள்ளுகிறது; உல்லாச மாளிகை மின்சார விளக்குகளால் போலி நகை புரிகிறது. வாசலில் நவீன **மாணிக்க வாசகர்** என்று பெரிதாக எழுதி இரு புறமும் பெண்ணுரு எழுதியிருக்கிறார்கள். ஏராளமான கூட்டம்; தமிழ்மணி, வேடங்கொண்ட போதுதான் மோட்டாரில் பராங்குசமும், சிங்கம், கந்தையா, பொங்கி (சிவநேசம்) ஆகிய நண்பர்களும் வந்து யான இடத்தில் அமர்ந்தனர். பராங்குசத்துடன் ஐந்து கான்ஸ்டேபிள்களும் ஒரு புகைப் படக் கருவியுடன் வந்து இடம் பார்த்தமர்ந்தனர்; இன்னும் சில கான்ஸ்டேபிள்கள் கூட்டத்தை ஒழுங்குறுத்த அங்கு மிங்கும் நின்றனர். மதுரகானம் தொடங்கியது. மலர் வனத்தில் பெண்கிள் மலர் கொய்தனர். அவர்களைப் பாராமல் ஒரு மந்திரி செல்கிறார். எல்லாரும் "இதென்னடீ'' என்று கேலியாகச் சிரிக்கிறார்கள். கதை தொடர்கிறது. முன்பாகத்தைச் சுருக்கமாகச் சொல்லுகிறேன். இப்போது நந்தனருக்குக் கிந்தனர் புறப்பட்டுத் திரைக்கும் வந்திருப்பது போலவே இது மாணிக்க வாசகருக்கு காணிக்கை வாசகராகப் புறப்பட்ட கதை; குப்பையின் மூளைதான் இதை சிருஷ்டித்தது; பிஜிலியின் அபார மூளை நகாசு செய்தது; டுணுக்கேசர் உரை, பாட்டு எல்லாம் சரிபார்த்துத் தயாரித்தது. தமிழ்மணி தன் பாகத்தைத் தானே எழுதித் தந்தான். 'உன் இலக்கண நடை எங்களைக் கலக்குகிறது.' என்று குப்பை சந்தைக் கடை நடையில் திருத்தி யமைத்தான். இந்த நாடகத்தில் டுணுக்கேசரே சிவகுருவாக வருவதுதான் சிறப்பு; முத்தையா அவருக்குச் சீடனாக வருகிறான்; குப்பையா மகிமையைச் சொல்லும் தூதன்; இன்னும் பல சித்தர்களும் வருகிறார்கள்.

(தொடரும்)

★

அனுபவ உண்மை:

ஹம்பி

[ரா. ஆறுமுகம்]

விடுமுறை நாட்களை வீணாகக் கழிப்பதென்றால் எனக்குப் பிடிப்பதே இல்லை. கிருஸ்மஸுக்காக ஒரு வாரம் ஆபீஸில் லீவு கிடைத்தது. இதை எப்படிப் பயன் படுத்திக் கொள்வது என்று ஒரு நாள் முழுதும் யோசித்தேன். எங்கேனும் ஒரு கிராமத்துக்குப் போய் வரலாமென்று தோன்றியது. அக்கிராமம் ஏதேனும் ஒரு சரித்திரப் பிரசித்தி பெற்றதாயிருப்பின் நன்றாயிருக்கும் என்று மறுகணம் ஒரு யோசனை. சென்னைக்கு அருகில் அப்படி ஏதும் இருப்பதாக எனக்குப் புலப்படவில்லை. மாமல்லபுரம் (மஹாபலிபுரம்) போய் வரலாம். ஆனால் அந்த இடத்திற்கு மூன்று முறைகள் போய் வந்திருக்கிறேன். அதைப் போன்ற கலையழகு நிரம்பிய மற்றொரு இடம் சமீபத்தில் இருக்கக் கூடாதா என்று குறைப்பட்டுக் கொண்டிருந்த போதே, மேஜை மீது கிடந்த ஒரு ரயில்வே விளம்பரம் கண்ணில் பட்டது. "ஹம்பியைப் போய்ப் பாருங்கள்" என அதில் கொட்டை எழுத்துக்களில் பொரித்திருந்தது. அசரீரி வாக்குப் போல இந்த விளம்பரமிருக்கிறதே; அவ்வளவு தூரத்திலுள்ள அந்த இடத்திற்குத் தனியாக எப்படிப் போவது என்று சற்று யோசித்தேன். இரண்டு நண்பர்களாவது இருந்தால் தான் உல்லாசமாகப் போய் வரலாம் என்று எண்ணி எனக்குத் தெரிந்த சில நண்பர்களிடம் கேட்டேன். அவர்கள் அந்த நாட்களை யெல்லாம் சினிமாப் படங்கள் பார்த்தே கழிப்பதென்று ஏற்கெனவே திட்டம் போட்டிருக்கிறார்களாம்! அதை ரத்து செய்து விட்டு வர முடியாதென்று கண்டிப்பாய்ச் சொல்லி விட்டார்கள். வேறு வழியில்லாமல் நான் மாத்திரம் தனியே புறப்பட்டேன்.

சென்னையை விட்டுப் புறப்படும் பம்பாய் மெயிலில் இரவு 9 மணிக்கு கிளம்பினால் குண்டக்கல் ஜங்ஷனுக்கு அடுத்த நாள் காலை 8 மணிக்குப் போய்ச் சேரலாம். அங்கிருந்து வண்டி மாற்றி பூனாவிற்குச் செல்லும் வழியில் சுமார் 30 மைல் சென்றதும் ஹாஸ்பட் என்ற ஸ்டேஷனில் இறங்கி விட வேண்டும். ஹாஸ்பட் கிராமும் அல்ல; பட்டணமும் அல்ல. இரண்டிற்கும் நடுத்தரமான ஒரு ஊர். மத்தியான ஆகாரத்தை அங்கே முடித்துக் கொண்டு ஹம்பி செல்லும் மார்க்கத்தைப் பற்றிச் சிலரிடம் விசாரித்தேன். அங்கிருந்து செல்லும் மோட்டாரிலோ, குதிரை வண்டியிலோ சென்றால் விஜய நகர ராஜ்யத்தின் பாழடைந்த சின்னங்களைச் சரியாகப் பார்க்க முடியாது என்று சொல்லக் கேட்டு, அந்தக் கடும் வெய்யிலையும் பொருட்படுத்தாது கால் நடையாகவே புறப்பட்டேன்.

ஹாஸ்பட் எல்லை கடந்ததும், சாலையின் இருபக்கங்களிலும் ஓங்கி வளர்ந்த மரங்களும், கண்ணுக்கெட்டிய தூரம் வரை பசுமையான வயல்களும், சிற்சில இடங்களில் திடர் திடராகப் பாறைகளும், அதைச் சுற்றிச்

செடி மண்டிக் கிடக்கும் புதர்களும் காணப்படுகின்றன. ஆறு மைல் சென்றதும் பெரிய சாலையினின்றும் ஒரு தனி வழி பிரிந்து காட்டு மார்க்கமாகச் செல்லுகிறது. இரண்டு வழிகளில் எந்தப் பக்கம் செல்லுவதெனத் தெரியாமல் திகைத்து நிற்கையில் அப்பக்கம் ஒரு வழிப்போக்கன் வந்தான். காட்டு மார்க்கத்தில் சென்று ஹம்பியை அடைவதற்குள் இருட்டி விடுமென்றும், ராஜபாட்டையிலேயே சென்ருல் தான் கமலாபுரம் என்ற குக்கிராமத்தில் இரவு தங்கலாமென்றும் தெரிவித்து விட்டு அவன் வழியே போய் விட்டான். காட்டு மார்க்கமாய்ப் போகும் வழியிலிருந்து தென் மேற்கில் நோக்கினேன். சுமார் அரை மைல் தூரத்தில் ஒரு பெரிய பளிங்கு மாளிகை போன்ற கட்டிடம் தெரிந்தது. 'நாம் வந்தது ஹம்பியைப் பார்க்கத்தான். சுகமாக கிராமத்தில் தங்கி இரவைக் கழிப்பதற்கல்ல. இதனல் என்ன கஷ்டம் நேர்ந்தாலும் சரி.' என்று தீர்மானித்து அந்த ஒற்றையடிப் பாதையிலேயே காட்டிற்குள் சென்றேன். அப்போது மாலை 4-மணியிருக்கலாம்.

எனக்கிருந்த உற்சாகத்திலும், ஆவலிலும் அந்தக் கட்டிடத்திற்கு சில நிமிஷங்களில் வந்து சேர்ந்து விட்டேன். அதை வெளியே நின்று கவனித்த போது அதுதான் 500 ஆண்டுகளுக்கு முன் அரசாண்ட கிருஷ்ணதேவராயரின் மாளிகையோ என்று நினைத்தேன். ஆனல் உள்ளே சென்று பார்த்து விட்டு, அப்பக்கம் சென்ற சில குடியானவர்களை விசாரித்ததில், அது கிருஷ்ண தேவராயருக்கும் அவரின் இரு மனைவிமார்களுக்கும் கட்டிய சமாதி என்று தெரிந்தது. அந்தச் சமாதியில் தான் எத்தனை சித்திர வேலைப்பாடுகள்! கேவலம் ஒரு சமாதியே இவ்வளவு நேர்த்தியாக விருந்தால் மற்ற அரண்மனைகளெல்லாம் எப்படியிருக்குமோ என்று அறிய ஆவல் தூண்டியது.

அதே வழி, ஹம்பியைப் பிரதக்ஷணமாகச் சுற்றிக் கொண்டு சிறு சிறு குன்றுகளினூடே செல்லுகிறது. அவ்வழிக்கு வலப்பக்கத்திலெல்லாம் பசுமையான தோட்டங்களும், தோப்புகளும், துரவுகளும், வயல்களும், மலைகளும் காக்ஷியளிக்கின்றன. இடப்பக்கத்திலோ வெறும் கட்டாந்தரை; பாறைகள் நிறைந்த பூமி. காரணம் என்ன வென்ருல் என்றும் வற்ருத ஜீவநதி துங்கபத்திரை வலப் பக்கத்தில் தான் ஓடுகிறது. 100 அடிக்கு மேலுள்ள கட்டாந்தரைப் பிரதேசத்திற்கு நதியைத் திருப்புவது பகீரதப் பிரயத்தனம் தான். வலப் பக்கத்தில் குயிலும், கிளியும், வனப்பக்ஷி சாதிகள் அத்தனையும் இனிமையாகக் கத்திக் கொண்டிருக்கின்றன. அதற்கு நேர் மாருக, சுடுகாடு போன்ற தோற்றந்தான் தென்படுகிறது இடப் பக்கத்தில். இன்பமும், துன்பமும் உலகில் எப்படிக் கலந்து இருக்கிறது என்பதை இக் காக்ஷிகள் நமக்கு ஞாபகப் படுத்துகின்றன.

அந்த வழியைத் தொடர்ந்தே சென்ருல் முட்புதர்களில்லாத வழுவழுப்பான பாறைகளாலாகிய ஒரு பெரிய குன்றின் மீது மண்டபம் ஒன்று தெரிகிறது. அப்பாறையிலே படிகளும் வெட்டி விடப்பட்டிருக்கின்றன. மண்டபத்தினுள் ஒரே கல்லால் செதுக்கப்பட்ட ஒரு பெரிய விநாயகர் விக்கிரகமிருக்கிறது. இதன் இடது கையின் முன் பாகத்தை யாரோ

உடைத்து அதை விக்கிரகத்தின் பாதத்திலேயே சமர்ப்பித்திருக்கிறார்கள். முதன் முதலாக விநாயகர் தரிசனம் கிடைத்து விட்டது. இனியெல்லாம் சுலபமாகவே முடிவடையும் என்ற நம்பிக்கை பிறந்தது.

அக்குன்றிலேயே இன்னும் சற்று தூரம் சென்றால் கோட்டைக்குள் செல்லுவது போன்ற ஒரு பெரிய கதவு தென்படுகிறது. அதற்குள் தைரியமாய்ச் சென்று பார்த்தால் ஒரு பெரிய மண்டபமிருக்கிறது. எங்கோ ஒரு மூலையில் வயது முதிர்ந்த ஒருவர் ஏதோ ஒரு புத்தகத்தை வைத்து உரக்கப் படித்துக் கொண்டிருந்தார். அவரைச் சுற்றி ஸ்திரீகளும் ஆடவர்களுமாக ஐந்தாறுபேர் அமர்ந்து அவர் படிப்பதைக் கவனமாய்க் கேட்டுக் கொண்டிருந்தார்கள். என்னைக் கண்டதும் அப்பெரியார் படிப்பதை நிறுத்தி விட்டு "நீங்கள் யார்? எங்கே வந்தீர்கள்?" என்று கேட்கவில்லை! அவர் தெலுங்கில் படித்துக் கொண்டிருந்தார். சற்று கவனித்துக் கேட்டதில் ராமாயணம் என்று தெரிந்தது. அவரைச் சுற்றியிருந்தவர்களும் என்னைக் கவனிக்கவில்லை. என்னைப் போல எத்தனையோ பேர்கள் அங்கே வந்து போவது வழக்கமாயிருக்கலாம். அப்படி வருகிறவர்களை யெல்லாம் அவர்கள் கவனித்துக் கொண்டிருந்தால் ராமாயணம் படித்து முடிக்க முடியாதென்று எண்ணி, அவர்கள் வேலையிலேயே கவனமாயிருக்கிறார்களென யூகித்துக் கொண்டு மண்டபத்தைப் பார்க்கத்தொடங்கினேன்.

மண்டபம் பெரியது தான். ஆனால் பாழடைந்து, சோபையிழந்து கிடந்தது. ஒவ்வொரு மூலையும், முடுக்கையும் சுற்றிப் பார்த்து விட்டு வருவதற்குள் அஸ்தமன சமயமாகி விட்டது. இனியும் சுற்றிக் கொண்டேயிருந்தால் வழி தெரியாமல் கஷ்டப்பட நேரிடுமென்று கருதி இரவில் தங்குவதற்கான ஏற்பாட்டைத் தேடினேன்.

அந்தக் குன்றை விட்டுக் கீழே இறங்கி வந்ததும், குன்றின் பின்புறத்தில் ஒரு இடிந்து சரிந்த மண்டபத்தில் ஒரு மனிதன் சில பாத்திரங்களைத் தேய்த்துச் சுத்தம் செய்து கொண்டிருக்கக் கண்டேன். அவனை யணுகி அன்று இரவு ஆகாரம் எங்கே கிடைக்குமென்றும், படுக்க வசதி ஏதும் உண்டா என்றும் விசாரித்தேன். என்னைப் போன்று அங்கே வருகிறவர்களுக்கு அவன் தான் ஆகாரம் செய்து கொடுப்பவனென்று தெரிவித்தான். பகலில் தான் சாதம் கிடைக்குமென்றும் இரவில் கோதுமை ரொட்டியும், பாலும் தான் தர முடியுமென்றும் சொன்னான். இரவு 8 மணிக்கு இரண்டு ரொட்டியும், ஒரு டம்ளர் பாலும் கிடைத்தது. அந்தப் பசி வேளைக்கு, ஜனசஞ்சாரமற்ற அக்காட்டில், அது தேவாமிர்தமா யிருந்தது. விலை அதிகம் தான்! படுப்பதற்குத்தான் இடம் சரியாய்க் கிடைக்கவில்லை. மண்டபத்தின் முன் பாறை மீது துணியை விரித்துப் படுத்துவிட்டேன். நடு நிசியில் குளிர் உடம்பை உலுப்பி விட்டது. எழுந்து வேறெங்கும் போகலா மென்று பார்த்தாலோ, தூரத்தில் நரிகள் ஊளையிடும் சத்தம் அந்த ஏகாந்தமான இடத்தில் புலியின் உறுமலைப் போலக் கேட்டது. வழி சரியாகத் தெரிந்தாலும் தைரியமாகப் போகலாம். ஆகவே அன்றைய பாதி இரவைத் தூக்கமில்லாமலே கழிக்க நேர்ந்தது.

பொழுது புலர்ந்தது. மலைகளுக்குப் பின்னுலிருந்து மளமளவென்று மேலே கிளம்பிய சூரியனின் கதிர்கள் பட்ட ஒளியில் துங்கபத்திரை நதியின் பிரவாகம் கண்வீச்சு வரை வளைந்து வளைந்து செல்வது தெரிந்தது. பனிக் கட்டியைப் போலக் குளிர்ந்திருந்த அந்த நீரில் மூழ்கிக் குளித்த இன்பம் இன்னும் என் மனதை விட்டு அகலவில்லை. காலைக் காப்பியும் அந்த மனிதன் 'தயவால்' தான் கிடைத்தது. எவ்வளவு பணம் கொடுத்தாலும் அந்த வனாந்தரத்தில் யார்தான் உணவு கொடுக்க முடியும்? ஆகையால் அந்த மனிதன் என் போன்ற கலைப் பித்தர்களுக்குச் செய்யும் சேவைக்கு நாம் என்ன கைமாறு செய்ய முடியும் பணத்தைத் தவிர? அந்த மனிதனே "இன்னும் இரண்டு நாள் செல்லும் ஹம்பியைப் பார்ப்பதற்கு" என்று தெரிவித்தபடியால், காப்பி சாப்பிட்டதும் என் பிரயாணத்தைத் தொடங்கிவிட்டேன்.

முந்தின நாள் மாலையில் பார்த்த இடத்திலிருந்து புறப்பட்டேன். முதன் முதலாக என் கண்ணில் பட்டது ஒரு பெரிய மண்டபம். அதன்மேல் கோபுரம் ஒன்றும் கட்டப்பட்டு இருக்கவில்லை. அதனல் அது கோயிலாயிருக்குமென்று எனக்கு எண்ணம் உதிக்கவில்லை. உள்ளே ஒரே இருட்டாக இருந்தது. சுவற்றில் தொங்கிய வௌவால்கள் 'படபட' வென்று சத்தமிட்டுக்கொண்டிருந்தன. நல்ல வெளிச்சத்திலிருந்து திடீரென்று உள்ளே நுழைந்தபடியால் முதலில் எனக்கு ஒன்றுமே புலப் படவில்லை. சில விநாடிகளுக்குப் பின்தான் அந்த மண்டபதிற்குள் ஏதோ பெரிய உருவமிருப்பது தெரிந்தது. மெதுவாகப் பக்கத்தில் நெருங்கிப் பார்த்தேன். அதுவும் ஒரு விநாயகர் விக்கிரகம் தான். இதை முதன் முதலாகப் பார்க்கும் எந்த மனிதனும் பயத்தாலோ, ஆச்சரியத்தாலோ, பின்னடையானுல், அவன் மிக்க மனேதிடமுள்ளவன் என்றே சொல்ல வேண்டும். சுமார் 16 அடி உயரம், 12 அடி அகலம், 20 அடி சுற்றளவு. தமிழ் நாட்டில் நான் பார்த்த விக்கிரகங்களில் மதுரை மீனுக்ஷியம்மன் கோவிலிலுள்ள விநாயகரே பெரிது என்று எண்ணியிருந்தேன். ஆனுல் இந்த உருவத்தைப் பார்த்த பின்பு, மதுரை விநாயகர், ஹம்பி விநாயகருக்கு ஒரு கொழுக்கட்டை போன்றவர் தான் என்பது நிச்சயமாகியது! இதை விநாயகர் விக்கிரகம் என்று சொல்லுவதைக் காட்டிலும், ஒரு சிறிய 'விநாயகக் குன்று' என்று சொல்வதே பொருந்தும். இவ்வுருவத்தின் பருமன்தான் நம்மைப் பிரமிக்கச்செய்கிறதேயன்றி முகத்தைக் கூர்ந்து கவனித்தால் களை சொட்டுகிறது. அவ்வளவு நேர்த்தியாக உளியிட்ட சிற்பியின் சாமர்த்தியத்தை நினைக்க நினைக்க அந்த இடத்தை விட்டு நகரவே தோன்றவில்லை.

அக்குன்றிலிருந்தபடியே தெற்கே திரும்பினுல் சுமார் 100 கஜ தூரத்தில், குன்றின் அடிவாரத்தில் கரும்பும், வாழையும், தென்னையும், கமுகும் செறிந்து தோன்றும் மிகக் குளிர்ந்த பிரதேசம் தெரிகிறது. அதன் மத்தியிலிருக்கும் ஏதோ ஒரு பெரிய விக்கிரகத்தின் முதுகுப் பக்கம் கண்ணில் படுகிறது. அதற்கு வழியைக் கண்டு பிடித்துச் சென்று பார்த்தவுடன் நம் ரெயில்வேக் கம்பெனியார்கள் ஹம்பியின் விளம்பரத்திற்காக உபயோகப்படுத்தும் நரசிம்ம மூர்த்தியின்

கிலே தான் அது என வெளியாகிறது. அவர்கள் எவ்வளவோ ஆழ்ந்து யோசித்துத் தான் இந்த விக்கிரகத்திற்கு அவ்வளவு பிரதானம் கொடுத்திருக்கிறார்கள். மண்டபம் ஏதுமின்றி வெய்யிலிலும், மழையிலும் நூற்றுக் கணக்கான ஆண்டுகளாய் நிற்கும் அந்த விக்கிரகத்தின் மேல் வெய்யில் படாதபடி ஏழு தலைகளையுடைய பெரிய பாம்பு குடை விரித்தது போல் நிற்கும் காட்சி நம்மைப் பரவசப் படுத்துகிறது. இது மேற் சொன்ன விநாயகரைக் காட்டிலும் ஒன்றரை மடங்கு பெரிது. சிறு குழந்தைகள் பார்க்க நேர்ந்தால் பயந்து வீறிட்டு விடுவார்கள். பெரியவர்களே அதை நிமிர்ந்து பார்க்கும் போது, பக்கத்திலுள்ள சுவரை ஒரு கையால் பிடித்துக் கொள்ள வேண்டியிருக்கிறது; அவ்வளவு பிரமாண்டமான சிலே. அதன் கண் விழிகள் ஒவ்வொன்றும் ஒரு பெரிய தோங்காய்ப் பருமனிருக்கிறது. விக்கிரகம் உயிர் பெற்று எழுந்து ஒரு மூச்சு உள்ளே இழுத்தால், திறந்திருக்கும் அதன் வாய் வழியாக இரண்டு மனிதர்கள் தாராளமாய் உள்ளே போய்விடக் கூடும்! காலத்தின் கோலத்தால் வாயின் முன் பாகம் மட்டும் சிறிது உடைந்து விழுந்திருக்கிறது. இது 1497ல் விஜய நகரத்தை ஆண்ட வீர நரசிம்மராயரின் ஞாபகார்த்தமாக, அவருடைய வீரச் சின்னமாக, எழுப்பப் பட்டதாம்.

அந்த மண்டபத்திலிருந்து வெளியே வந்ததும், நான் ஏற்கனவே வந்த வழியிலிருந்து ஒரு தனி வழி பிரிந்து செல்லுவது தென்பட்டது. அதில் 20 அடி தூரத்தில் பூமி மட்டத்திற்குச் சற்று தாழ்வாக ஒரு மண்டபமும் அதனுள் ஒரு சிவலிங்கமு மிருக்கிறது. இதுவும் மற்ற விக்கிரகங்களுக்கு எந்த அம்சத்திலும் பின் வாங்கியதாகத் தெரியவில்லே. மண்டபத்தின் மேல் பாகம் மூடப் படாமல் திறந்த வெளியாகத் தானிருக்கிறது. அதன் மத்தியில் உயர்ந்த பீடத்தில் இருக்கிறது லிங்கம். ஆனல் அதைச் சுற்றிலும் சதா காலமும் நீர் ஊற்றுப் பெருக்கெடுத்து சிறு கால்வாய் போல ஓடிக் கொண்டிப்பது, அந்த மூர்த்திக்கு இயற்கையாகவே அமைந்த அகழ் போலிருக்கிறது. லிங்கத்திற்கு மாலே போட வேண்டுமானல் 12 அடி உயர முள்ள ஏணி இல்லாமல் முடியாது. பீடத்திலிருந்து லிங்கத்தின் உயரம் 6 அடி இருக்கிறது. அதன் சுற்றளவு 4 அடி இருக்கும். அதன் அழகைக் கண்டு, மார்க்கண்டனைப் போல வருஷக் கணக்காய் பூஜை செய்து கொண்டிருக்கலாம் போல தோன்றுகிறது. இன்னும் இது போன்று எவ்வளவு இடங்களைப் பார்க்க வேண்டுமோ; நேரம் போதுமோ போதாதோ என்று அந்த இடத்தை விட்டகன்றேன்.

துங்கபத்திரையின் தென் கரை மேல் தமிழ் நாட்டு ஆலயம் போன்ற ஒன்று இருக்கிறது. முன்புறம் உயர்ந்த கோபுரம், உள்ளே ஸ்தூபி, சுற்றுப் பிரகாரம் எல்லாம் வெகு அழகாகக் கட்டப் பட்டிருக்கின்றன. 1467 முதல் 18 ஆண்டுகள் ஆட்சி செய்த விருப்பாக்ஷி ராயரின் பெயரால் கட்டப்பட்டிருக்கும் இக் கோவிலுக்குள் வெகு ஆழமான பெரிய பொற்றாமரைத் தடாகம் பாழடைந்து கிடக்கிறது. பாசம் பிடித்துப் பச்சைப் பசேரென்று தேங்கி நிற்கும் அந்த ஜலத்தில் சிவப்பும், வெள்ளையுமாக நமக்கு மலர்ந்து காணப்படும் தாமரைகள் ஏதோ உணர்ச்சியைத் தூண்டு

கிறது. கோவிலுக்குள்ளிருக்கும் மூல விக்கிரகத்திற்கு இன்றைக்கும் ஒழுங்காய் பூஜைகள் நடந்தேறுவது பாராட்டத்தக்கது.

விருப்பாக்ஷிக் கோயிலின் சந்நிதியிலிருந்து நேரே கிழக்கு நோக்கி சுமார் இரண்டு மைல் தூரத்திற்கு பெரிய கடைத்தெரு செல்லுகிறது. அதன் இரு பக்கங்களிலும் அக்காலத்திலிருந்த கடைகள் இன்னும் அழியாமல், ஆனால் வௌவால்களுக்கு இருப்பிடமாயிருக்கின்றன. இவைகளெல்லாம் சுண்ணும்பு, செங்கல் கலப்பில்லாமல் கருங்கற்களாலேயே ஒன்றின் மேலொன்ருக அடுக்கிக் கட்டப்பட்டிருப்பதால் இக்காலத் தச்சனால் கூட உருக் குலைக்க முடியாமல்ப் போய் விட்டது போலும்! அவ்வளவு பெரிய கடைத் தெருவில் பண்டங்கள் வாங்க வருவோரும் போவோரும் நிறைந்திருந்த அக்காலத்தைப் பார்க்கக் கொடுத்து வைக்கவில்லையே என்ற வருத்தம் யாருக்கும் உண்டாகாமல் போகாது.

கடைத் தெருவின் மறு கோடிக்கு வந்ததும், சற்று தூரத்தில் ஒரு கோவில் தெரிகிறது. அதனருகில் சென்று பார்த்தால் கோவிலின் முன் அந்த ஜில்லா மாஜிஸ்ரேட்டின் எச்சரிக்கை தாங்கிய பலகை நம் கண்ணில் படுகிறது. ஹம்பியின் ஞாபகச் சின்னங்களாக விளங்கும் எந்தப் பொருளையும் சேதப் படுத்தக் கூடாதென்பதும், அப்படிச் செய்பவர்கள் மூன்று மாத சிறைத் தண்டனையோ அல்லது 500 ரூபாய் அபராதமோ விதிக்கப் படுவார்களென்பது தான் அந்த எச்சரிக்கை. கோவிலுக்குள் சென்று பார்த்தால் தலையுள்ள விக்கிரகம் ஒன்று கூடத் தென்படுவதில்லை. எதாவது ஒன்றிற்குத் தலை யிருந்தாலும் கை, கால்களைக் காண முடியாது. 1334ல் மாலிக்காபூர் வந்து அந்த இடத்தைச் சூறை யிட்டபோது இந்த எச்சரிக்கைப் பலகை அங்கு இருந்திருக்காதல்லவா? மாலிக்காபூருக்கு இருந்த மத வெறி எவ்வளவு சிற்பங்களைப் பாழ்படுத்தி விட்டது! ஆலயத்திற்குள் ளிருக்கும் இரண்டு பெரிய மண்டபங்களிலும் எத்தனை தூண் வரிசைகள்! ஒவ்வொரு தூணும் எவ்வளவு பெரியது! அதிலேயே எத்தனை சிறு சிறு கம்பங்கள்! ஒரு சிறு கல்லால் அவைகளைச் சுற்றித் தட்டிக் கொண்டே வந்தால் ஜலதரங்கம் போல் ஒலிக்கிறது. சிற்பியின் திறன் தான் என்ன!

சந்நிதிக்கு வலப் புறத்தில் கல்லாலேயே செதுக்கப்பட்ட ரதம் ஒன்றிருக்கிறது. அதை அர்ஜுனன் ரதம் என்று சொல்லுகிருர்கள். அதன் சக்கரங்களும், அச்சுக்களும், ஆணிகளும் கடையப் பட்டிருக்கும் நேர்த்தியைக் கவனித்தால், இப்போது கூட இரண்டு யானைகளைக் கட்டி இழுத்தால் ரதம் சுலபமாக தெருக்களில் ஓடி வரும் போலிருக்கிறது.

கோவிலின் சுற்றுப் பிரகாரச் சுவர்களில் பாதிக்குமேல் இடிந்து சரிந்து கிடக்கின்றன. சுவர் மேல் கூட்டம் கூட்டமாய் இருந்த கருங் குரங்குகளைக் கண்டதும் எனக்குப் பெரிய பீதி யுண்டாகி விட்டது. அவைகளெல்லாம் ஓடி வந்து சுற்றி வளைத்துக் கொண்டால் என்ன செய்கிறது என்று யோசித்துக் கொண்டிருக்கையில் 'பட்' டென்று தலைமேல் ஒரு கல்லைப் போல் எதோ ஒன்று மேலேயிருந்து விழுந்தது; புளியங்காய்! அண்ணந்து பார்த்தேன். மரத்தின் மேலும் குரங்குகள் காணப்

பட்டன. கீழே விழுந்த காயைக் குனிந்து எடுத்தேன். 'கீச், கீச்' சென சத்த மிட்டுக் கொண்டு மதில் மேலிருந்த மந்திகளெல்லாம் மரத்திற்குத் தாவி விட்டன. ஒரு பெரிய வீரச் செயலைச் செய்து விட்டதாக மனதில் சந்தோஷம் கொண்டு கோவிலிலிருந்து வெளியே வந்து விட்டேன்.

மத்தியானம் ஒரு மணிக்குள் சாப்பாட்டிற்கு வந்துவிட வேண்டுமென்றும், அதற்குப்பின் வந்தால் சாப்பாடு கிடைப்பது கஷ்டமென்றும் அந்த மனிதன் சொன்னது ஞாபகம் வந்தது. பசியெடுத்தவுடன். நேரே 'ஹோட்ட'லுக்குச் சென்றேன். அன்றைக்கு அங்கு வந்தவன் நான் ஒருவன்தான் என்று தெரிந்தது. சாப்பிட்டுக் கொண்டிருக்கும் போதே அந்த மனிதனிடம் நான் பார்த்த இடங்களையெல்லாம் சொல்லி, இன்னும் என்னென்ன பார்க்க வேண்டுமென்று கேட்டேன்.

"ஹம்பியின் சுற்றுவட்டாரம் சுமார் 20 மைல்களுக்குப் பரவியிருக்கிறது. இது வரையிலும் நீங்கள் பார்த்ததெல்லாம் அந்தச் சுற்றுக் கோட்டியுள்ள ஒரு சில பகுதிதான். இதையே பார்த்துக் கொண்டிருந்தால் 4 நாளைக்கு மேலாகுமே. பிற்பகலில் ஹம்பி நகரத்துக்குள்ளேயே நுழைந்து பாருங்கள். அப்போதுதான் விஜயநகரத்தின் தலை நகரின் பெருமை உங்களுக்குப் புலப்படும்" என்று தெரிவித்தான் அந்த மனிதன்.

சாப்பாட்டிற்குப் பின்பு களைப்பு அதிகமாயிருந்த படியால் அடுத்த நாள் பார்த்துக் கொள்ளலாமென்று இருந்து விட்டேன். அன்று இரவு விருப்பாக்ஷிராயர் கோவிலுக்குள்ளேயே படுத்துக் கொள்ள இடம் கிடைத்தது. நரிகள் கதவை உடைத்துக் கொண்டு உள்ளே வர முடியாது என்றதைரியத்தால் நிம்மதியாய்ப் படுத்து, விஜயநகர மன்னர்களைப் பற்றியே கனவு கொண்டிருந்தேன்.

மூன்றும் நாள் அதிகாலையிலேயே எழுந்து என் காரியங்களையெல்லாம் வழக்கம்போல் முடித்துக் கொண்டு அந்த 'ஹோட்டல்'காரன் சொன்ன வழியைக் கண்டு பிடித்து நகருக்குள் பிரவேசித்தேன். சர்க்கார் மராமத்து இலாக்கா அதிகாரிகள் சாலைகளையெல்லாம் வெகு அழகாகச் செப்பனிட்டு வைத்திருக்கிறார்கள். முதல் இரண்டு நாள் அனுபவித்த சிரமங்கள் இன்று இருக்காதென்ற அறிகுறிகள் தென்பட்டன.

சுமார் அரை மைல் தூரம் சென்றதும் 200 அடி நீளம், அகலம் கொண்ட பெரிய சதுரமான பள்ளம் பூமி மட்டத்திற்கு 20 அடி ஆழத்தில் காணப்படுகிறது. அந்தப்பள்ளத்தின் மேல் பரப்பு முழுதும் பலகைக்கற்களால் மூடப்பட்டிருக்கின்றன. இது ஏதோ சுரங்கம் போலிருக்கிறது, என்றெண்ணி நாலா பக்கமும் சுற்றி வந்தேன். வடபாகத்தின் மத்தியில் கீழே இறங்கிச் செல்ல படிவரிசைகள் தெரிந்தன. அதன் வழியே உள்ளே சென்றேன். அது ஒரு பெரிய கோவில். தரையே தெரியாதபடி குளம் போல 3 அடி ஆழம் எங்கு பார்த்தாலும் தெளிந்த நீர் பரவியிருக்கிறது. சூரிய உஷ்ணமே உட்புக முடியாமலிருக்கிற படியால் தண்ணீர் பனிக்கட்டியைப்போல் குளிர்ந்திருக்கிறது. அது ஒரு சிவாலயமென்று மூலஸ்தானத்தை

நெருங்கியதும் தெரிந்தது. வேறு விக்கிரகங்களே அங்கே காணப் படவில்லே. ஆலயம் முழுதும் சுற் றிப் பார்த்து விட்டு வெளியேறு வதற்குள் காலில் உணர்ச்சியே அற்றுப் போய் விட்டது; அவ் வளவு குளிர்ச்சி அந்தத் தண்ணீர்!

இக்கோவிலிருந்து ஒரு மைல் சுற்றளவிற்குள் கருங்கற்களா லேயே கட்டப்பட்ட மூன்று கோட்டைகள் தனித்தனியாக இருக்கின்றன. கோட்டைகளின் சில பாகங்கள் எதிரிகளால் நாசப் படுத்தப் பட்டிருந்தாலும், அவை கள் இன்னும் கட்டி முடிக்கப் பெருத பாகங்களாகவே நமக்குத் தெரிகின்றன. அவ்வளவு உறுதி யாக எந்தப் பீரங்கிக் குண்டுக் கும் அசையாமல் நின்றிருக்கின் றன. மாகினெட் அரணும், ஸீக் பிரிட் அரணும் இதைக்கண்டு தலே வணங்க வேண்டியதுதான். கோட்டைச் சுவரின் அகலம் 4 அடி; இரண்டு வரிசைக் கற்களா லானவை .ஒவ்வொரு கோட்டை யின் மூலேயிலும் வாயிற் காப் போனின் கோபுரம் ஒன்று காணப்படுகிறது. அவை ஒவ் வொன்றும் சென்னேயிலுள்ள கலங்கரை விளக்கத்தில் (Lighthouse) முக்கால் பங்கு உயரமிருக் கிறது. அதன் உச்சிக்குச் செல் லும் படிகள் பாம்புபோல் வளேந்து வளேந்து, சுற்றிச் செல்லுகின்றன. கோபுரத்தின் சிகரத்தில் விசால மான இடம். நான்கு பக்கங் களிலும் பெரிய திறந்த ஜன்னல் களோடு கூடியதாய் வெகு அழ காக, ஒரு மனிதன் தாராளமாய் நின்று பார்க்கும் அளவிற்கு, அமைந்திருக்கிறது. அதினின்று பார்த்தால் சுமார் 20 மைல் சுற்ற ளவிற்கு மூன்று திசைகளிலும் கண் வீச்சுவரை மலேகளும், குன்றுகளும். வடபாகத்தில் வற் ருது ஓடும் துங்கபத்ராவின் வெள் ளப் பெருக்கும், அதன் சிற்ருே டைகளும், பசுமையான வயல் வெளிகளும், தோப்புகளும் கண் களுக்கு இனிய விருந்தளிக் கின்றன. இக்கோபுரங் களின் மேலிருந்துதான் அக்காலத் தில் விரோதிகளின் படைகள் வரு வதை அறிந்து கொள்ளுவார்கள் போலும்.

இனி ஒவ்வொரு கோட்டையின் உள்ப் பக்கத்திலும் சென்று பார்க்க வேண்டும்.

முதற் கோட்டைக்குள் ராணி யின் அந்தப்புற மஹாலும், ஸ்நான மண்டபமுமிருக்கின்றன. ராணியின் மஹால் இரண்டு அடு க்குகள் கொண்ட ஒரு பெரிய நீண்ட ஹால். அக்கால வழக்கப் படி, அரச சபையில் ஏதேனும் விசேஷ சம்பவங்கள் நிகழுங்கால், ராணியும் மற்ற பெண்களும் ஆட வர்கள் தங்களேக் காணவண்ணம் மறைந்து நின்று பலகணிகளின் வழியே கவனிப்பதற்கேற்ற முறையில் இந்த ஹால் அமைக் கப் பட்டிருக்கிறது. ஸ்நானக் குளத்தைச் சுற்றி மூன்றடுக்கு கள் கொண்ட வட்ட வடிவமான ஒரு சிறு மண்டபத்தில் அக்காலத் தில் தீட்டப்பெற்ற வர்ண ஓவியங் கள் இன்றும் மங்கிக் கெட்டுப் போகாமல் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. சிற்சில இடங்களில் அதைப் பார்க்க வந்தவர்களின் கையெழுத்து, ஊர், தேதியெல் லாம் கரியால் எழுதப்பட்டு கண்ணே உறுத்துகிறது. குளம் இப்போது வரண்டு கிடக்கிறது. தண்ணீர் நிறைய இருந்தால் மூன் ருவது மாடியிலிருந்துகூட கீழே குதித்து மூழ்கி ஆனந்திக்கலாம் போலிருக்கிறது.

முதல்க் கோட்டையிலிருந்தே இரண்டாவது கோட்டைக்குள் செல்ல ஒரு சிறு வழி இருக்கிறது. இதற்குள் அடி எடுத்து வைத்ததும் நம் முன் பிரமாண்டமான மாளிகை தென்படுகிறது. அதைப் பார்க்காதவர்கள் சென்னையிலுள்ள எழும்பூர் ரயில்வே ஸ்டேஷனை நினைத்துக்கொண்டால் போதும். கருங்கற்களாலேயே கட்டப்பட்ட அவ்வளவு பெரிய கட்டிடத்தைத் திடீரென்று கண்டதும் நம்மையுமறியாமலே ஆச்சரியம் மேலிடுகிறது. அருகில் சென்று பார்த்தால், அங்குள்ள பலகையைக் கண்டு, அது யானைகள் கட்டும் இடம் என்பது வெளியாகிறது. பத்து யானைகள் கட்டுவதற்கு, பத்து ஹால்கள் கொண்ட ஒரு பெரிய 'மாளிகை' தான் கட்டியிருக்கிறார்கள். இதிலிருந்தே அக்காலத்து மன்னர்களின் செல்வாக்கையும், நாட்டின் வளப்பத்தையும் நிர்ணயித்து விடலாம். ஹம்பியில் இதுவரை பார்த்த மற்றெல்லாக் கட்டிடங்களிலும் இது ஒன்றேதான் அன்று கட்டியது போல, ஒரு சிறு பாகம்கூடச் சேதமடையாமல் தப்பி நிற்கிறது. யானைகளின் முன், பின் கால்களைச் சங்கிலியால் கட்டுவதற்கு ஊன்றியிருக்கும் துளையடித்த கற்களும், இலை, தழைகள் போட்டு வைக்கத் தனித் தொட்டிகளும், எல்லாம் அவ்வளவு தத்ரூபமாக அமைந்திருப்பதைப் பார்த்தால், யானைகளெல்லாம் இப்போது எங்கோ ஊர்வலத்திற்காக வெளியே சென்றிருக்கின்றனவென்றே நமக்குத் தோன்றும்! கட்டிடத்தின் மேல் தளத்திற்குச் சென்று பார்த்தாலோ, நம் ஆச்சரியம் அளவு கடக்கிறது. ஒவ்வொரு யானையின் இருப்பிடத்திற்கு மேலும் எழும்பூர் ஸ்டேஷனின் மேலுள்ள கோபுரங்களைக் காட்டிலும் பெரிதாக ஒவ்வொரு கோபுரமும், அதன்மேல் கலசங்களும் காணப்படுகின்றன. எவ்வளவு பொருளை வாரி இறைத்துக் கட்டினார்களோ! ஆனால் அதில் இன்று ஒரு யானை கூட இருக்கக் கொடுத்து வைக்கவில்லையே! துரதிர்ஷ்ட யானைகள்!

அதற்கடுத்தாற்போல அவைகளை ஓட்டும் மாவுத்தர்கள் தங்கள் குடும்பத்துடன் தங்குவதற்கும் தனியாக ஒரு பெரிய இடமிருக்கிறது. இப்போது அந்த இடத்தில், அக்கட்டிடங்களையெல்லாம் பார்வையிட வருகிறவர்கள் சேதப்படுத்தாமல் கவனித்துக் கொள்ளும் ஒரு மனிதன்தான் சமையல் செய்து சாப்பிட்டுக் கொண்டு வசிக்கிறான்.

இரண்டாவது கோட்டைக்குள்ளிருந்தபடியே மூன்றாவது கோட்டைக்குச் செல்ல ஒரு வழி போகிறது. இதற்குள்ளிருப்பது மூன்று ஆலயங்கள்தான். இரண்டு பெரியது; ஒன்று சிறியது.

சந்திர சேகரர் ஆலயம் பெரிய ஆலயங்களில் ஒன்று. இதன் முன்பாகத்தில் மண்டபமே இல்லாமல் வெட்ட வெளியாக இருக்கிறது. முன் வாசலில் இரு பக்கங்களிலும் கை, கால், தலைகளில்லாத விக்கிரகங்கள் நூற்றுக் கணக்கில் குவித்து வைக்கப்பட்டிருக்கின்றன. சில நல்ல விக்கிரகங்களை வரிசை வரிசையாகவும் நிறுத்தி வைத்திருக்கிறார்கள். ஒரு விக்கிரக மாவது முழு உருவத்தோடு இல்லை. இவைகளைப்பார்த்ததும்,யுத்த களத்தில் கால் ஒடிந்தும், கை இழந்தும், தலைபோயும் சிதறிக் கிடக்கும் யுத்த வீரர்களின் ஞாபகம்தான் நமக்கு வருகிறது. இக்கால யுத்த முறையில் எதிரிப் படைகள் இரண்டும் போர் புரியும் போது ஒரு பாவமுமறியாத

பொது ஜனங்கள் ஆயிரக் கணக்கில் மடிவதைக் காண்கிறோம். இதேபோல அக்காலத்திலும் பாவம், இந்த விக்கிரகங்கள் வெவாகத் துன்பப்பட்டிருக்கின்றன என்று தெரிகிறது. அவைகளின் அவயவங்கள் உடலிலிருந்து பிரிந்து தனித்தனியாகக் கிடந்தபோதிலும், அவைகள் ஒவ்வொன்றையும் எடுத்துப் பார்க்கும்போது உயிர் இன்னும் துடித்துக் கொண்டிருப்பதாகவே நமக்கு உணர்ச்சி ஏற்படுகிறது. சிற்பிகள் அவ்வளவு நேர்த்தியாகச் செதுக்கியிருக்கிறார்கள்.

அதற்கடுத்துள்ள ஸ்ரீ ராமச்சந்திரர் கோவில் இன்னும் கும்பாபிஷேகம்கூட ஆகாததுபோல, அவ்வளவு புத்தப் புதிதாகக் காணப்படுகிறது. கோவிலின் உயர்ந்த வெளிச்சுவர்களில் நம் தமிழ்நாட்டு ஆலயங்களில் காணப்படுவதுபோல் சுண்ணும்பும், காவியும் பட்டை பட்டையாய் அடிக்காமல் தேர், யானை, குதிரை, காலாள் என்ற நால்வகைச் சேனைகளை வரிசை வரிசையாகக் கற்களிலேயே மிக நேர்த்தியாக வெட்டிச் சித்தரித்திருக்கிறார்கள். போர்க்களத்தை நோக்கி உற்சாகத்தோடும், ஆவேசத்தோடும் அப்படைகள் செல்லுவதேபோல் எவ்வளவு ஜீவகளையோடு அவைகள் காட்சியளிக்கின்றன என்பதை எப்படி வர்ணித்துக் காட்டுவது? கற்களில்தான் எவ்வளவு நுட்பமான வேலைப்பாடுகள்! அக்காலத்துச் சிற்பிகள் அவைகளையெல்லாம் வெறும் பாறைக் கற்கள் என்று நினைக்காமல், வைரக்கற்களுக்கு பட்டை செதுக்குவது போல் நினைத்திருப்பார்கள் போலும்! பொன், வெள்ளி, நகைகளில்கூட இவ்வளவு 'நகாஸ்' வேலைகளை நாம் காண முடியாது. அவைகளைப் பார்த்துக் கொண்டே ஒரு நாள் முழுதும் நின்றாலும்கூட சலிப்பேற்படாது. கோவிலினுள்ளே, உட்பிரகாரத்தில் சென்று கவனித்தாலோ, ராமாயணக் கதை முழுதும் அப்படியே கண்ணைக் கவரும் வர்ணங்களில் ஓவியங்களாகச் சுவர்களை அலங்கரித்திருக்கின்றன, மதுரை மீனாக்ஷியம்மன் கோவில் சுவர்களில் திருவிளையாடற் புராணம் சித்தரிக்கப் பட்டிருப்பதுபோல. ஆனால் கோவிலில் மூல விக்கிரகம்தான் காணப்படவில்லை!

இதற்கு இன்னும் சற்று தூரத்தில் இருக்கும் சிறு கோவிலிலும் மூல ஸ்தானம் காலியாகக் கிடக்கிறது. ஆனால் வாயிலில் 9 அடி நீளம் 6 அடி அகலத்தில் ஒரு பலகைக் கல்லில் ஹனுமானின் உருவம் செதுக்கப் பட்டிருக்கிறது. மூலஸ்தானத்திலிருந்த இந்த விக்கிரகத்தைப் படையெடுத்து வந்தவர்கள் வெளியே தூக்கி எறிந்தார்களா அல்லது இதை அங்கே கொண்டுபோய் வைத்துப் பிரதிஷ்டை செய்யுமுன்பே யுத்தம் ஆரம்பித்து விட்டதா என்பது தெரியவில்லை. துங்கபத்ரையின் வடகரையிலிருப்பதுதான் ஹனுமானின் ஜன்ம பூமியாகிய கிஷ்கிந்தை. ஆதலின் ஹனுமானின் உருவங்கள் ஹம்பியில் பல இடங்களிலும் தென் படுகின்றன — நம் ஊர்களில் விநாயகர் தென்படுவது போல.

சூரியன் உச்சிக்குவந்து விட்டான். வெயிலின் உக்கிரம் சகிக்க முடியாமலிருந்தது. சாப்பாட்டிற்கு அந்த 'ஹோட்ட'லுக்குப் போய் விட்டுத் திரும்புவதற்குள் நேரமாகி விடுமென்று கருதி, கையில் கொண்டு வந்திருந்த சில பழங்களைச் "சாப்பிட்டு, பசி

யைச் சற்று தணித்து இளைப்பா றிக் கொண்டு மறுபடியும் சுற்றிப் பார்க்கக் கிளம்பி விட்டேன்.

கோட்டைக்கு வெளியேயுள்ள சில முடிவு பெருத கட்டிடங்கள் நம் கவனத்தைக் கவர்கின்றன.

பொது மக்களின் ஸ்நான வசதிக்கென நிர்மாணிக்கப்பட்ட பெரிய தெப்பக்குளம் தண்ணீரே இல்லாமல் வரண்டு கிடக்கிறது. நான்கு பக்கங்களிலும் நீண்ட விசாலமான படிகளிருக்கின்றன. ஒரே சமயத்தில் ஆயிரம்பேர்கள் ஆனந்தமாய்க் குளிக்க வசதி செய்திருக்கிருர்கள்.

தெப்பக் குளத்திற்கு இரண்டு பர்லாங் தூரத்தில் பிரமாண்டமான கொலுமண்டபமிருக்கிறது. இது கட்டி முடிக்கப்படாததா, அல்லது கட்டிய பின்பு எதிரிகளால் நாசமாக்கப் பட்டதா என்பது தெரியவில்லை. எனினும் அரசன் வீற்றிருப்பதற்கெனத் தனியாய், உயரத்தில் கட்டப்பட்டிருக்கும் ஆசனத்தின்மேல் வந்து நின்று சுற்றிலும் நோக்கினல், மந்திரி பிரதானிகளும், மற்ற நகரப் பிரமுகர்களுமிருந்து அரசன் ஆட்சி செலுத்திய ஞாபகம் நம் மனக் கண் முன் வராமல் போக முடியாது.

அதையடுத்தாற்போல, வெகு சமீபத்தில், புதிய அரண்மனையொன்று கட்டுவதற்கென எழுப்பிய அஸ்திவாரம் அப்படியே பாதியோடு நின்றிருக்கிறது. அரண்மனை கட்டி முடிந்திருந்தால் தென் இந்தியாவிலும் ஒரு "தாஜ் மஹால்" ஏற்பட்டிருக்கும். ஆனல் நம் துரதிர்ஷ்டம், அதற்குள் விஜயநகரம் போருக்கு ஆயத்தமாகி விட்டதே!

விரோதிகள் நகரைக் கைப்பற்றியதும் இராஜ வம்சத்தவர்கள், முக்கியமாக ஸ்திரீகள், அரண்மனையை விட்டுத் தப்பி வெளியே செல்லுவதற்காக ஒரு இரகசியச் சுரங்கத்தை அரண்மனையை ஒட்டியே பூமிக்குள் கட்டியிருக்கிருர்கள். இதை எல்லோரும் பார்த்து ஆனந்திக்கும்படி உள்ளே செல்லும் வழியும், வெளியே வரும் வழியும் தெரியும்படி பலகைகள் நடப்பட்டிருக்கின்றன,

அரண்மனைக் குதிரைகளோ, யானைகளோ தண்ணீர் அருந்துவதற்கென 42 அடி நீளம், 3 அடி அகலத்தில் ஒரே கல்லில் வெட்டப்பட்டிருக்கும் தண்ணீர்த் தொட்டியொன்று தனியாகக் கிடக்கிறது. எங்கே கொண்டுபோய் வைப்பதற்கெனச் செய்தார்களோ தெரியவில்லை.

அதேபோல ஒரே கல்லில் வெட்டப்பட்ட, சித்திர வேலைப்பாடுகள் கொண்ட பெரிய கதவும் தனியாய்க் கிடக்கிறது. இது அரண்மனைக் கெனச் செய்தது போலிருக்கிறது.

சற்றுத் தொலைவில் ஒரு சிறு குன்றைப்போல ஒரு மண் திடர் தெரிந்தது. அதன்மேல் சற்று சிரமப்பட்டு ஏறி நாலாபக்கமும் நோக்கினேன். ஹம்பியிலுள்ள எல்லாச் சின்னங்களையும் ஒன்று விடாமல் பார்த்துவிட்டதாகத் தெரிந்தது. அப்போதுதான் ஆதவனும் மேற்கில், மலைகளுக்குப்பின்னல், தன் பொற் கிரணங்களை வாரி இறைத்து விட்டு மறையும் தருவாயிலிருந்தான். அவன் கிரணங்கள் பட்ட ஹம்பி நகரம் முழுதும் பொன்னகரம் போல் பிரகாசித்தது!

(அடுத்த இதழில் முடியும்)

ஒரு ரங்ரோட்டுக் கதை

[சி. ஆர். ராமசுவாமி]

ஸ்ரீனிவாசலு நாயுடு சேலத்தில் ஒரு பெரிய உத்தியோகஸ்தர். அவருடைய வேலை சண்டைக்கு ஆள் சேர்ப்பது. சண்டைக்கு ஆள் சேர்ப்பதற்கென்று தனி உத்தியோகஸ்தர்களை நியமிக்கும் அவசியமே யில்லை. சண்டை வருஷக் கணக்காக நடக்கும் விஷயம். சூரிய சந்திரகிரகணங்களைப்போல் சில ஆண்டுகளுக்கு ஒரு தடவையாகக் கட்டாயம் திரும்பத் திரும்ப வரும் சம்பவம். ஆங்கில நூலாசிரியர் ஒருவர் வேடிக்கையாகச் சொன்ன மாதிரி தங்கள் தங்கள் குடும்பத்தை இயற்கை முறையின்படி. விருத்தி செய்து வரும் சம்சாரிகள் எல்லாரும் ரங்ரோட்டு உத்தியோகஸ்தர்களே. பிறக்கும் பிள்ளைகள் படைச் சேனையில் அல்லது சண்டைக்குச் சம்பந்தப்பட்ட வேறு வேலைகளில் கட்டாயம் போய்ச் சேரத்தான் வேண்டும். ஆயினும் சீனிவாசலு நாயுடுவுக்கு சர்க்கார் மாதம் ஒன்றுக்கு நூறு ரூபாய் நோட்டுகள் நாலு கொடுத்து வந்தார்கள். அவர் மனைவி கௌரியம்மாளுக்கு அதை எப்படிச் செலவு செய்வது என்ற கவலைதான்.

இவர்களுக்கு இரண்டு வயதான சுந்தரம் என்ற ஒரு குழந்தையே இது வரையில் கிடைத்த புத்திர சம்பத்து. கௌரியம்மாளுக்கு வயது இருபத்து நான்கு. சீனிவாசலு நாயுடுவுக்கு நாற்பத்தைந்து வயது. கௌரி அவருடைய இரண்டாவது மனைவி. கிராமத்து ஏழைக் குடும்பத்து ஸ்திரீ. நகரச் சுகங்களை இப்போது தான் அனுபவிக்க ஆரம்பித்தவள். ஆகையால் அவள் மிகவும் சந்தோஷமாகவே வாழ்க்கை நடத்தினாள்.

அன்று ஞாயிற்றுக்கிழமை. சீனிவாசலு நாயுடு இன்னும் சோம்பேரிச் சாவடி (கிளப்பு)க்குப் புறப்படவில்லை. சாய்வு நாற்காலியில் உட்கார்ந்து கொண்டு ஏதோ பத்திரிகையைப் படித்துக் கொண்டிருந்தார்.

“இன்று நல்ல சினிமா. நீங்கள் மத்தியானம் படுத்திருந்த போது பையன் நோட்டீஸைப் போட்டு விட்டுப் போனான். பக்கத்து வீட்டு மீனாட்சி நேற்று அதற்குப் போயிருந்தாளாம். ரொம்ப நன்றாயிருந்ததென்று சொன்னாள். நான் முதல் நாள் கூட்டம் அதிகமாயிருக்குமென்று உங்களோடு ஒரு நாள் கழித்துப் போகலாம் என்று இருந்து விட்டேன். படத்தின் பெயர் ‘வேசிதாஸ’னும்” என்றாள் கௌரியம்மாள்.

சீனிவாசலு நாயுடு நோட்டீஸை வாங்கிப் பார்த்து, “சங்கோசமில்லாமல் ‘வேசி தாசன்’ என்று பெயர் வைத்தது ஒரு புதிசு தான். ஆபாசக் கதைகளுக்கு சதி அகல்யை, சதி இது, சதி அது என்று பெயர்களை வைப்பதை விட்டு இந்த மாதிரி பட்டவர்த்தனமாகப்பெயர் வைத்தது ஒரு பாராட்டத்தக்க சாகசம் தான். கட்டாயம் நாம் போய்ப் பார்த்தாக வேண்டும்” என்றார்.

"குழந்தையை யார் பார்த்துக் கொள்ளுகிறது?" என்றாள் கௌரி

"அதற்கென்ன? குப்பனிடம் விட்டு விட்டு நாம் வரும் வரையில் இருக்கச் சொல்லிப் போகலாம்" என்றார்.

வேலைக்காரக் குப்பனைக் கூப்பிட்டு, "நாங்கள் இப்பொழுது சினிமாவுக்குப் போகிறோம். குழந்தையை சாக்கிரதையாகப் பார்த்துக் கொள்" என்றார்.

குப்பன் "இன்று ஞாயிற்றுக் கிழமை. இப்பொழுது சாயந்திரக் காட்சி பாதி நடந்து கொண்டிருக்கும். 9-மணிக்கு இரண்டாவது காட்சி ஆரம்பிக்கும். அப்போது போகலாமே? நானும் சாப்பாட்டை முடித்துக்கொண்டு வந்து விடுகிறேன்" என்று சொன்னான்.

சீனிவாசலு நாயுடு "பார்த்தாயா, உன் ஆளுக்கு உன்னைவிட சினிமா 'அனுபவம் அதிகம்" என்று சொல்லிச் சிரித்து, சேவகனைப் பார்த்து "சரி, நீ சீக்கிரம் சாப்பிட்டுவிட்டு வா. நானும் கிளப்புக்குப் போய்விட்டு வருறேன்" என்றார்.

கௌரி, "நல்லதாகப் போச்சு. ராகு காலமும் கழிந்து போகும்" என்றாள்.

நாயுடு கிளப்புக்குச் சென்றார். அம்மாள் சமையலைச் சீக்கிரம் முடித்து வைக்க சமையலறைக்குள் சென்றாள்.

* * *

நாயுடு 8-மணிக்கு வீட்டுக்குத் திரும்பி வந்தார். சாப்பாடு தயாராயிருந்தது. சாப்பிட்டு உடுப்புகள் உடுத்தித் தயாரானார்கள்.

"வீட்டைச் சரியாகப் பார்த்துக் கொள்" என்று கௌரியம்மாள் குப்பனைப் பார்த்துச் சொன்னாள்.

"புகையிலைக் கடைக்குக் கம்பி நீட்டி விடாதே. குழந்தையை சரியாகப் பார்த்துக்கொள். எங்கேயும் போகாதே" என்று நாயுடு எச்சரிக்கை செய்து விட்டு வாசலிலிருந்த ஜட்கா வண்டியில் இருவரும் ஏறினார்கள். யுத்த காலத்தில் மோட்டார் கார் இல்லை. சம்பளம் இருந்தாலும் சுகம் இல்லை.

குப்பன் 'குழந்தைக்கு வெகு நேரம் வரையில் விளையாட்டுக் காட்டிக் கொண்டிருந்தான். பிறகு அது கண்ணை மூட ஆரம்பித்தபடியால் மரத்தொட்டிலில் படுக்கை போட்டு தூங்கச் செய்தான். குழந்தை "பப்பில்ஸ், பப்பில்ஸ்" என்று இரண்டு மூன்று தரம் சொல்லிக் கொண்டு தூங்கி விட்டது.

காலையில் நாயுடு வென்னீர் அறையில் சோப்புத் தண்ணீரில் காகிதக் குழாயால் குமிழிகள் செய்து ஊதி குழந்தைக்கு விளையாட்டுக் காட்டிக் கொண்டிருந்தார். அந்த ஞாபகத்திலேயே குழந்தை தூங்கிற்று. அந்த வீட்டில் வென்னீர் அறையில் ஒரு பெரிய குளிக்கிற தொட்டி இருந்தது. தினமும் சாயந்திரம் அதில் தண்ணீர் கொட்டி நிரப்பி விடுவது குப்பன் வழக்கம். இன்றும் அப்படியே செய்து விட்டு பக்கத்திலிருந்த லக்ஷ்மாயி பெட்டிக் கடையில் புகையிலை வாங்கலாமென்று புறப்பட்டான். 'கதவை வெளியில் தாளிட்டுப் புகையிலை வாங்கச் சென்றான். அந்தப் பெட்டிக் கடை சொந்தக்காரி லக்ஷ்மாயிடம் அவனுக்கு நல்ல பரிச்சயம்.

"வா! ஏது, யசமான் 'வீட்டில் இல்லையா?" என்று கேட்டாள்.

"சினிமாப் பார்க்க யசமானும் யசமானியும் போயிருக்கிறார்கள். 12-மணிக்குத்தான் திரும்பி வருவார்கள்" என்றான்.

லக்ஷ்மாயி, "நான் நிலக்கடலை வறுக்க வேண்டும். இந்தா, வீரா. இவருக்குக் கொஞ்சம் புகையிலை எடுத்துத் தா" என்று சொல்லி நிலக்கடலை வறுக்கப் போய் விட்டாள். அதற்குள் வீரன் என்பவன் புகையிலைச் சீசாவைத் திறந்தான். தனக்கு முதுகைக் காட்டி சீசாவிலிருந்து புகையிலையை எடுத்துக் கொண்டிருந்தவனைப் பார்த்து குப்பன், "நீ யார்? புதிதாயிருக்கிறாயே?" என்றான்.

அவன் திரும்பாமலே "நான் இந்த ஊர் அல்ல; என் ஊர் கிழக்குச் சீமை. இன்று தான் வந்தேன்" என்று சொல்லி புகையிலையைக் கொடுத்தான்.

குப்பன் "ரொம்ப நேரம் காக்க வைத்து விட்டாய்" என்று புகையிலையை வாங்கிக் கொண்டு வீட்டுக்கு விசையாகப் போனான். வீரனும் அப்போது கடைக்காரிக்குச் சொல்லி விட்டு அடுத்த கிராமம் கொண்டலாம்பட்டியில் தன் சினேகிதர்கள் காத்திருப்பார்கள் என்று போய் விட்டான்.

வாயில் கொஞ்சம் புகையிலை அடக்கிக்கொண்டு வீட்டுக்கு வந்த குப்பன் "இதென்ன, இன்று ஏதோ ஒரு மாதிரியான புகையிலையைக் கொடுத்து விட்டாள்" என்று முணகிக் கொண்டே கடித்து மென்றான். கொஞ்ச நேரம் மென்று விட்டு நன்றாயில்லை என்று துப்பி விட்டான். மறுபடியும் போட்டுப் பார்த்தான். அதுவும் பிடிக்கவில்லை, துப்பி விட்டான். பிறகு பத்து நிமிஷம் கழித்து தொட்டிலுக்கருகில் மெய் மறந்து தூங்கிப் போனான்.

சினிமாவுக்குப் போன தம்பதிகள் படத்தை ரசிக்கவில்லை. கதையில் புதிதாக ஒன்றுமில்லை. வழக்கம் போல் மதனக் காட்சிகள்! வழக்கம் போல் வலிந்து சேர்க்கப்பட்ட பரிகாச நிகழ்ச்சிகள். எல்லாரும் கைகொட்டி ஆரவாரித்து அனுபவித்தார்கள். நாயுடுவுக்குப் பிடிக்கவில்லை. குழந்தையைத் தனியாக விட்டு விட்டு வந்திருக்கிறோமே என்று கதாபாத்திரத்தை அந்தரத்தில் விட்டு விட்டு மனைவியையும் அழைத்துக் கொண்டு வெளியே வந்து விட்டார். சில நாட்களுக்கு முன் ஊரில் சில திருட்டுக்களும் நடந்திருந்தன. அதனால் வீட்டைப் பற்றிக் கொஞ்சம் கவலையும் இருந்தது. "போகலாம்" என்று இருவரும் கொஞ்ச தூரம் நடந்து சென்று, பிறகு ஒரு வண்டி கிடைத்தவுடன் அதில் ஏறிக் கொண்டு நேரத்துக்கு முந்தியே வீடு போய்ச் சேர்ந்தார்கள்.

மயக்கமாகத் தூங்கிப் போன குப்பன் விழித்துக் கொண்டான். ஏதோ சப்தம் கேட்டது போலிருந்தது. பிறகு வாசலில் கதவு தட்டும் சப்தம் கேட்டது. போய் கதவைத் திறக்க எஜமானரும் எஜமானியும் வாசலில் நின்று கொண்டிருந்தார்கள்.

"நன்றாய்த் தூங்கிப்போனாய் போலிருக்கிறது. எவ்வளவு நேரம் தட்டு தட்டு என்று தட்டினோம்!" என்று சொல்லிக் கொண்டே உள்ளே நுழைந்தார்.

"குழந்தை எங்கே? தூங்கவில்லையா?" என்றார் நாயுடு.

"சுந்தரம்! சுந்தரம்!" என்று சொல்லிக் கொண்டு கௌரியம்மாள் விளக்குப் போட்டாள்.

குப்பன் தொட்டிலைப் பார்த்து அது காலியாயிருப்பதைப் பார்த்துத் திகைத்து வென்னீர் வீட்டுப் பக்கம் பார்க்கச் சென்றான். புறக்கடைக் கதவு திறந்திருந்தது. அதைத் தாண்டித்தான் வென்னீர் அறை. யாரோ சிலர் ஓடும் சப்தம் கேட்டது. வென்னீர் வீட்டுக் கதவைத் திறந்தான். குழந்தை ஆடையெல்லாம் நனைந்து தொட்டிக்கு அருகில் கீழே நினைவற்றுக் கிடப்பதைப் பார்த்தான்.

"ஐயோ எசமான்! குழந்தை!" என்று கூச்சலிட்டான்.

நாயுடுவும் மனைவியும் ஓடிவந்தார்கள். குழந்தை மூச்சற்றுக் கீழே கிடப்பதைப் பார்த்து, கௌரியம்மாள் அதை வாரி எடுக்கப் போனதை நாயுடு தடுத்து தானே கால்களைப் பிடித்து எடுத்து தலைகீழாய் குழந்தையை இரண்டு மூன்று சுத்துச் சுற்றி தனக்குத் தெரிந்த உடனுதவிச் சிகிச்சை முறைப்படி கைகளை மேலே தூக்கி இறக்கி மார்போடு இடித்து பத்து நிமிஷம் உயிர்ப்பு மூட்டும் வேலை செய்தார். டாக்டரை அழைத்துவர குப்பனையும் துரத்தி யனுப்பினர்.

குழந்தைக்கு மூச்சு வர ஆரம்பித்தது. "தெய்வமே!" என்றாள் கௌரியம்மாள் ஆனந்த பரவசமாகி. குழந்தையின் உடம்பைத் துடைத்து துணிகளை மாற்றி படுக்க வைத்தார்கள்.

இதற்குள் டாக்டரும் வந்தார். குழந்தையை அவரிடம் ஒப்படைத்து விட்டு, குப்பனைப் போலீசுக்குப்போய் சமாசாரத்தைச் சொல்லச் சொன்னர்.

அடுத்த நாள் போலீஸ் இன்ஸ்பெக்டர் மூன்று ஆட்களைப் பிடித்துக்கொண்டு சீனிவாசலு நாயுடு வீட்டுக்கு வந்தார்.

இன்ஸ்பெக்டர் குப்பனைக் கூப்பிட்டு "நேற்று நீ பெட்டிக் கடையில் பார்த்த ஆள் இவன் தானா?" என்றார்.

"ஆமாம்" என்று வீரனைப் பார்த்தபடி குப்பன் மாலை நடந்த கதையை முழுதும் சொன்னன்.

"ஒளிக்காமல் எல்லாவற்றையும் உள்ளது உள்ளபடி சொல்லி விடு" என்று சீனிவாசலு நாயுடு அந்த ஆளைப் பார்த்துச் சொன்னர்.

வீரன் கொஞ்ச நேரம் தயங்கினன். பிறகு அவனுக்கு என்னவோ தோன்றிற்று. "சாமி! நீங்கள் தான் காப்பாற்ற வேண்டும். நான் ஆளுக்கு புகையிலையில் மருந்து கலந்து கொடுத்தது உண்மை. பிறகு என் கூட்டாளிகளுடன் கொண்டலாம் பட்டி கள்ளுக் கடைக்குப் போய் அங்கே அவர்களுக்குக் கொஞ்சம் கள் வாங்கி வார்த்து விட்டு இவ்விடம் விசையாக வந்தோம். இவர்களை வெளியே நிறுத்தி விட்டு நான் பின்புறம் சுவர் ஏறி உள்ளே குதித்தேன். பின் கதவும் வென்னீர் வீட்டுக் கதவும் திறந்திருப்பதைப் பார்த்தேன். ஏதோ குழந்தை அழுவதும் தண்ணீரில் மூழ்கும் சப்தமும் கேட்டது. பிறகு சத்தம் நின்று விட்டது. மெள்ள வென்னீர் வீட்டு விளக்கு சுவிச்சு போட்டுப் பார்த்தேன். தொட்டியில் தண்ணீருக்குள் குழந்தை விழுந்து கிடப்பதைக் கண்டேன். அதற்குள் வாசலில் கதவு தட்டும் சப்தம் கேட்டது. குழந்தையை அவசரமாகத் தொட்டியிலிருந்து எடுத்து வெளியே போட்டு விட்டு......

நாயுடு அவன் சொல்லுவதைத் தடுத்து "சற்று நிறுத்திச் சொல். நீ வாசலில் கதவு தட்டும் சப்தத்தைக் கேட்ட பின் குழந்தையை எடுத்தாயா? அல்லது குழந்தையை எடுத்த பின் சப்தத்தைக் கேட்டாயா?" என்றார்.

வீரன் "நன்றாய் ஞாபகம் இருக்கிறது ஐயா! சப்தம் கேட்டது. அதன்பின் தான் அவசரமாகக் குழந்தையை எடுத்துப் போட்டேன். அந்த கதியில் விட்டு விட்டு ஓடிப் போக எனக்கு மனம் வரவில்லை" என்றான்.

நாயுடு இன்ஸ்பெக்டரைப் பார்த்து "இன்ஸ்பெக்டர்வாள் நானே திருடனயிருந் திருந்தால் குழந்தையை எடுத்துப் போட நின்றிருக்க மாட்டேன். நல்ல பாம்பைக் கூட நம்முடைய தேசத்து ஜனங்கள் அடிக்க வேண்டாம் என்று இரக்கம் கொள்கிறார்கள். இவனைத் தயவு செய்து விட்டு விடுங்கள்; ஒன்றும் திருட வில்லை" என்றார்.

"திருட்டுப் பயல்கள் மேல் என்ன இரக்கம்? புகையிலைக் கடையில் பதுங்கியிருந்து நீங்கள் வீட்டில் இல்லை என்பதைத் தெரிந்து கொண்டு திருடப் போன இவர்களை விட்டு விடுவ்தாவது?" என்றார் இன்ஸ்பெக்டர்.

"இல்லை, இன்ஸ்பெக்டர்வாள், இந்தத் திருடன் வந்ததினல் தான் குழந்தை பிழைத்தது. இல்லாவிட்டால் நாம் வீட்டுக்கு வருவதற்கு முன் எல்லாம் முடிந்து போயிருக்குமல்லவா?" என்றார் நாயுடு.

கௌரியம்மாள் சுந்தரத்தைத் தூக்கி எடுத்துத் தழுவினள்.

"அடே பயல்களே! உங்களுக்கு ஏதோ நல்ல நாள், தப்பினீர்கள்" என்று இன்ஸ்பெக்டர் அதட்டினர்.

* * *

வீரனும் அவன் சகாக்களும் அன்று ரங்ரோட்டில் சேர்ந்து விட்டார்கள். கௌரியம்மாள் வீரனுக்குக் கொஞ்சம் பணியாரமும் கட்டிக் கொடுத்தாள்! குழந்தை சுந்தரம் சவுக்கிய மடைந்து முன் போல் விளையாட ஆரம்பித்தான். அதற்குப் பிறகு புருஷன் மனைவி இருவரும் எங்கேயாவது போனல் குழந்தையையும் கூட அழைத்துச் செல்வதென்று தீர்மானித்தார்கள்.

குப்பன் "புகையிலை போடுவதை, அதிலிருந்து நிறுத்தி விட்டேன்" என்றும் சொல்லிக் கொள்கிறன்.

7. கானல் வரி

(தொடர்ச்சி)

தலைவன் பிரிவாற்றாமையால் தலைவியின் வருத்தம் (31—36)

கடற்கரை யோரத்திலுள்ள சோலையில் தலைவி ஒரு நெய்தல் நிலத் தலைவனைச் சந்தித்தாள். களவு மணம் ஏற்பட்டு விட்டது. போன தலைவன் திரும்பி வரவில்லை. திரும்பி வராத காரணமும் தலைவிக்குப் புரியவில்லை. இந்த நிலைமையில் அதே கடற்கரைச் சோலைக்கு தலைவி தன் தோழியை அனுப்புகிறாள். சோலைக்குத் தலைவன் வருவானோ என்று எதிர் பார்த்துத் தோழியும் பல நாட்களாகச் சோலையில் காத்திருந்தாள். ஒரு நாள் தலைவன் அவ்விடம் வந்தான். ஆனால் தோழியிடம் அவன் ஒன்றும் பேசவில்லை. தோழி வீட்டிற்குத் திரும்பியவுடன் ஆவலோடு காத்துக்கொண்டிருந்த தலைவி என்ன நடந்ததென்று கேட்டாள். அந்தக் கேள்விக்குத் தோழி பதில் சொல்லுகின்றாள். "நீ ஆணையிட்டபடி நானும் சோலையின் அருகே காத்துக் கொண்டிருந்தேன். இன்று யாரோ ஒருவர் வந்தார். கடற்கரை யோரத்தில் கூடி விளையாடிக் கொண்டிருந்த நண்டுகளையும், பூக்கள் நிறைந்த சோலையில் நின்று கொண்டிருந்த என்னையும் கண்டார். ஆனால் என்னிடம் ஒன்றும் பேசவில்லை. தன் உணர்வு அழிந்தவர்போல் தோன்றினார். அவர் ஒன்றும் பேசாமலே கடைசியில் போய் விட்டார். அவரை நன்றாய்ப் பார்க்கவும்கூட இல்லை. அவருடைய நிறம் இன்னதென்றும்கூட நான் பார்க்கவில்லை" என்றிவ்வாறு தோழியின் வார்த்தைகளைக் கேட்டுத் தலைவியின் மனம் உடைந்து விட்டது. தனக்கு நேர்ந்த துன்பத்தைக் குறித்துச் சிந்தித்தாள்.

"என்னை மீண்டும் கூடிய சீக்கிரம் சந்திக்கிறேன் என்று சொல்லி விட்டுப் போனாரே, அவர்தான் என்னை மறந்து விட்ட போதிலும், அவருடைய தேரும் என்னை நாடிவர மறந்து விட்டதே. அன்னங்

களே, பூங்கொத்துக்கள் நிறைந்த கொடிகளே, என்னை அவர் மறந்தாலும் நான் ஒருக்காலும் அவரை மறவேன்''

மாலைப் பொழுது ஆகிவிட்டது. பறவைகளின் பாட்டும் அடங்கியது. சோலையிலுள்ள பூக்கள் அசையாமல் தூங்குவது போலத் தோன்றிற்று. ஒரு நெய்தற் பூவைப் பார்த்து தலைவி தனக்குள்ளே பேசுகிறாள். "இனிய தேன் நிறைந்த நெய்தற்பூவே! துன்பத்தை அதிகப்படுத்தும் இந்த மாலைக் காலத்தில் நான் தனித்து வருந்தி நிற்கின்றேன். நீயோ அசைவற்றுத் தூங்குகின்றாய். தூங்கும்போது உன்னுடைய கனவில் என் காதலன் இந்தக் கடற்கரைச் சோலையில் வருவதை நீ கண்டதுண்டோ?''

நெய்தல் பூவோ தலைவியின் கேள்விக்கு பதில் சொல்லவில்லை. கரையோரத்தில் தன் காதலன் ஏறி வந்த தேர்ச் சக்கரங்களின் அடையாளமாவது இருந்தால் அதைப் பார்க்கலாமென்று மணல் நிறைந்த கரையோரத்திற்குப் போனாள். சக்கரத்தின் சுவடுகள் ஒன்றையும் காணோம். கடல் அலைகளை நொந்து கொள்கின்றாள். "தெளிந்த நீரையுடைய அலையே, நீயும்கூட எனக்கு இந்தவிதமான பழியைச் செய்ய வேண்டுமா? என் காதலரின் தேர்ச் சக்கரங்கள் சென்ற வழிகளையெல்லாம் அழித்து விட்டாயே. நான் என்ன செய்வேன். என் துன்பத்தை உணராமல் அலர் தூற்றுவாரோடு சேர்ந்து நீயும் எனக்கு விரோதியாய் விட்டாயே''

தேர் அடையாளங்களைக் காணாமல் மனம் நொந்து அவ்விடமுள்ள குளிர்ந்த சோலையையும் அன்னப் பறவைகளையும் பார்த்து தலைவி முறையிடுகிறாள். "பூக்கள் நிறைந்த குளிர்ந்த சோலையே, கூடியாடி விளையாடுகின்ற அன்னங்களே, நீர்த்துறையே நீங்களாவது என்மேல் கருணை வைத்துத் தேர்ச்சுவடுகளை அழிக்க வேண்டாமென்று அலைகளுக்குச் சொல்லக் கூடாதா? உங்களுக்கும் என்னுடைய துன்பம் தெரியாதா?''

இவ்வாறு பலவிதமாக நொந்துகொண்டு வீட்டுக்குத் திரும்பும் சமயத்தில் கடல் அலைகளைப் பார்த்துச் சொல்லுகிறாள். "நானோ இந்த நெய்தல் நிலத்தில் பிறந்தவள். கடல் அலையில் தவழ்ந்து விளையாடி வளர்ந்தவள். கடல் அலைகளை என்னுடைய உறவினர் போல்க் கருதி வந்தேன். அப்படியிருந்தும் என்மேல் கருணை வைக்காமல் 'உறவாடிக் கெடுத்தது' போல் எனக்குத் துன்பம் விளைத்து விட்டீர்களே. கடல் அலையே! நீ சுகமாக வாழ்வாயாக'' என்று கடல் அலையை நொந்து கொண்டு மனவருத்தத்துடன் வீடு திரும்பினாள்.

31. **புணர் துணை யோடு ஆடும் பொறி அலவன் நோக்கி,**
இணர் ததையும் பூம் கானல் என்னையும் நோக்கி,
உணர்வு ஒழியப் போன ஒலி திரை நீர்ச் சேர்ப்பன்,
வணர்சுரி ஐம்பாலோய்! வண்ணம் உணரேனால்.

பதவுரை

[புணர் துணையோடு — தன்னோடுகூடிய பெட்டை நண்டோடு; ஆடும் — விளையாடுகின்ற; பொறி அலவன் நோக்கி — புள்ளிகளை

யுடைய ஆண் நண்டுகளைப் பார்த்து; இணர்ததையும் — பூங்கொத்துக் கள் நெருங்கியிருக்கின்ற; பூம் கானல் என்னையும் நோக்கி — பூக்கள் நிறைந்த கடற்கரைச் சோலையில் என்னையும் கண்டு; உணர்வு ஒழியப் போன — தன் உணர்வு அழியுமாறு போன; ஒலி திரை நீர்ச்சேர்ப் பன்—ஒலிக்கின்ற நீரையுடைய நெய்தல் நிலத் தலைவனின்; வண்ணம்— நிறத்தையும்; வணர் சுரி ஐம்பாலோய் — வளைந்து சுருண்ட ஐந்து வகையான கூந்தலையுடைய தோழி! உணரேன் — நான் அறியேன்.]

32. தம்முடைய தண்ணளியும், தாமும் தம் மான்தேரும்
எம்மை நினையாது விட்டாரோ! விட்டு அகல்க;
அம் என் இணர அடும்புகாள்! அன்னங்காள்!
நம்மை மறந்தாரை நாம் மறக்க மாட்டேமால்.

பதவுரை

[தம்முடைய தண்ணளியும் — தமது அருளும்; தாமும் —; தம் மான்தேரும் — தம்முடைய குதிரை பூட்டிய தேரும்; எம்மை நினை யாது விட்டாரோ —எம்மை நினையாமல் விட்டாரோ; விட்டு அகல்க— விட்டுப் பிரியட்டும்; அம் மென் இணர அடும்புகாள் — அழகிய மெல் லிய பூங்கொத்துக்களை யுடைய அடும்பங் கொடிகளே!; அன்னங் காள் —; நம்மை மறந்தாரை —; நாம் மறக்க மாட்டேமால் — நாம் ஒருக் காலும் மறக்க மாட்டோம்.]

33. புன் கண் கூர் மாலைப் புலம்பும் என் கண்ணே போல்,
துன்பம் உழவாய் துயிலப் பெறுதியால்;
இன் கள் வாய் நெய்தால்! நீ எய்தும் கனவினுள்,
வன் கணார் கானல் வரக்கண்டு அறிதியோ?

பதவுரை

[புன் கண் கூர்மாலை — துன்பம் அதிகமாகும் மாலைக் காலத்தில்; புலம்பும் — தனித்து வருந்துகின்ற; என் கண்ணே போல் — என் கண்களைப்போல; துன்பம் உழவாய் — துன்பத்தால் வருந்தாமல்; துயிலப் பெறுதியால் — நல்ல தூக்கத்தை நீ பெறுகிறாய்; இன் கள் வாய் நெய்தால் — இனிய தேன்வாய்ந்த நெய்தற் பூவே!; நீ எய்தும் கனவினுள் — நீ காணுகின்ற கனவினுள்; வன்கணார் — வன் கண் மையுடைய எனது தலைவர்; கானல் வர — இக்கடற் கரைச் சோலையில் வருவதை; கண்டு அறிதியோ — நீ கண்டதுண்டோ!]

34. புள் இயல் மான் தேர் ஆழி போன வழி எல்லாம்
தெள்ளுநீர் ஓதம் சிதைத்தாய்; மற்று என் செய்கோ?
தெள்ளுநீர் ஓதம் சிதைத்தாய்; மற்று எம்மோடு ஈங்கு
உள்ளார்ரோடு உள்ளாய், உணராய் மற்று என் செய்கோ!

பதவுரை

[புள் இயல் மான் — பறவை போல் விரைந்து செல்லக் கூடிய குதிரைகள் பூட்டிய; தேர் ஆழி — என் காதலனின் தேர் உருளை;

போன வழியெல்லாம் — சென்ற வழிகளையெல்லாம்; தெள்ளு நீர் ஓதம் — தெளிந்த நீரையுடைய அலையே ; சிதைத்தாய் — நீ அழித்தனை; என் செய்கோ — நான் என்ன செய்வேன்; தெள்ளு நீர் ஓதம் — தெளிந்த நீரையுடைய அலையே!; சிதைத்தாய் — நீ அழித்தனை ; எம்மோடு இங்குள்ளாரோடு — எனக்குத் (துன்பந்தருகின்ற) இங்குள்ள அலர் தூற்றுகிறவர்களோடு; உள்ளாய் — நீ சேர்ந்து உள்ளாய்; (என்றது, அவர்கள் சார்பாக இருக்கின்றாய்); உணராய் — என் துயரத்தை உணராய் ; என் செய்கோ — நான் என்ன செய்வேன்.]

தலைவனைப் பிரிந்து தலைவி வருந்த, தலைவன் நெடுநாள் வராது போனான். பல நாள் களவிலேயே கூடிச்சென்று, திருமணம் செய்து தலைவியைத் தன்னுடன் வைத்து இல்லறம் நடத்தவில்லை. இதனை எவ்வாறோ அறிந்த ஊரார், இவர் ஒழுக்கங்களைக் குறித்துப் பலபடப் பேசிக் கொண்டனர். இங்ஙனம் நடப்பதை அகப்பொருளில் 'அலர்' என்பர். மற்று — அசை.

35. **நேர்ந்த நம் காதலர் நேமி நெடும் திண்தேர்,**
ஊர்ந்த வழி சிதைய ஊர்கின்ற ஓதமே ;
பூம் தண் பொழிலே! புணர்ந்து ஆடும் அன்னமே!
ஈர்ம் தண் துறையே! 'இது தகாது' என்னீரே.

பதவுரை

[நேர்ந்த — அன்பு செய்த; நம் காதலர் — நமது காதலரின்; நெடும் திண் தேர் — நெடிய திண்ணிய தேர் ; ஊர்ந்த — சென்ற; வழி சிதைய — வழியிலுள்ள சுவடுகள் அழியும்படி: ஓதம் ஊர்கின்ற — அலைகள் மேல் ஏறி வருகின்ற; பூம் தண் பொழிலே — பூக்களையுடைய குளிர்ந்த சோலையே!; புணர்ந்து ஆடும் அன்னமே — கூடி ஆடுகின்ற அன்னமே!; ஈர்ம் தண் துறையே — மிக்க குளிர்ச்சியுடைய குளிர்ந்த நீர்த்துறையே; இது தகாது என்னீரே — இது தகாது என்று (அலைகளுக்குக்) கூறமாட்டீர்களா?]

நேர்ச்சி—அன்பு

36. **நேர்ந்த நம் காதலர் நேமி நெடும் திண்தேர்**
ஊர்ந்த வழி சிதைய ஊர்ந்தாய் வாழி! கடல் ஓதம்;
ஊர்ந்த வழி சிதைய ஊர்ந்தாய், மற்று எம்மோடு
தீர்ந்தாய் போல் தீர்ந்திலையால் வாழி கடல் ஓதம்.

பதவுரை

[நேர்ந்த நம் காதலர் — அன்பு செய்த நமது தலைவரின்; நேமி நெடும் திண்தேர் — உருளையை யுடைய நெடிய திண்ணிய தேர்; ஊர்ந்த வழி சிதைய — சென்ற வழி அழியும்படி ; கடல் ஓதம் — கடல் அலையே!; ஊர்ந்தாய் — நீ மேலேறி வந்தாய் ; வாழி —; ஊர்ந்த வழி சிதைய — தேர் ஊர்ந்த வழி சிதையும்படி; ஊர்ந்தாய் —; எம்மோடு தீர்ந்தாய் போல் — என்னோடு உறவாடிக் கூடியதுபோல் இருந்து; தீர்ந்து இலையால் — உண்மையில் எதிரியாய் இருந்து விட்டாய் ; வாழி கடல் ஓதம் — கடல் அலையே நீ வாழ்வாயாக!]

★

தலைவனை நொந்துகொள்வது

(37—39)

மாலைப் பொழுதை எல்லாம் சோலையில் கழித்து விட்டு மனவருத் தத்துடன் தலைவி தன் வீட்டிற்குத் திரும்பினாள். தன்னுடைய நிலைமையை அன்னை கண்டு உண்மையை அறிந்து கொண்டால் என்ன செய்வதென்று தெரியாமல் தலைவனை நினைத்து வருந்தினாள்.

"நெய்தல் நிலத்தலைவனே, உன்னுடைய வளப்பமான நாட்டில் நெல்விளைகின்ற நன்செய் நிலமான வயல்கள், எங்கும் பரவி இருக்கின் றன. கடல் அலைகள் வெண் முத்துக்களான ஆபரணங்களை அணிந்து சிவந்த பவளங்களான ஆடையை உடுத்து வயல்களில் மோதி உலாவு கின்றன. உன்னுடைய நாட்டில், கடல் அலையும் இவ்வளவு அழகாகத் திரியும் போது என்னுடைய நிலைமையோவென்றால் காம நோயால் உண்டான புண்கள் என் உடலையே மறைத்து விட்டன. புன்னைமரச் சோலையில் உன்னை நினைத்து வருந்தும்போது மன்மதன் என்மேல் ஏவிய பாணங்களால் உண்டான புண்கள்தான் இவை. இந்தக் கோலத்தில் என்னைத் தாய் கண்டால் நான் என்ன செய்வேன்"

"உன்னுடைய நாட்டின் கடற்கரையோரத்திலுள்ள, வலைஞர் களின் வீட்டு வாயிலில் அலைகள் முத்துக்களாகிய பற்களால் நகைத்து பவளங்களாகிய சிவந்த வாயைத் திறந்து திரிகின்றன. உன்னுடைய நாட்டில் அலைகளும்கூட இவ்வளவு களிப்புடன் திரியும்போது என் னுடைய நிலைமையோவென்றால் என் உடல் பீர்க்கம் பூவைப்போல் வெளுத்து விட்டது. உன்னால் எனக்கு உண்டான காம நோய்தான் இதற்குக் காரணம். இந்தக் கோலத்தை என் தாய் கண்டு குறி கேட் டுக் காரணத்தை அறிந்து கொண்டால், நான் என்ன செய்வேன்"

"உன்னுடைய நாட்டில் கடல்க்கரையில் வலைஞர்கள் கொண்டு வந்து சேர்த்த மீன்களால் புலால் நாற்றம் வீசுகின்றது. ஆனால் அலை கள் பூஞ்சோலைகளில் வீழ்ந்து அங்கேயுள்ள பல பூக்களைக் கரையோரத் தில் சேர்ப்பதால் புலால் நாற்றம் நீங்கி நறுமணம் எங்கும் கமழ்கின் றது. பூக்களின் நறுமணத்தால் புலால் நாற்றமும் நீங்கி விட்ட போதி லும் எந்த மருந்தாலும் என் காம நோய் நீங்காது. பிறர் அறியக் கூடாத இந்த நோயின் காரணத்தை அன்னை அறிந்தால் நான் என்ன செய்வேன்"

37. **நன் நித்திலத்தின் பூண் அணிந்து,**
நலம் சார் பவளக்கலை உடுத்துச்
செந் நெல் பழனக் கழனி தொறும்
திரை உலாவுகடல் சேர்ப்ப
புன்னைப் பொதும்பர் மகரத்தின்
கொடியோன் எய்த புதுப் புண்கள்
என்னைக் காணு வகை மறைத்தால்,
அன்னை காணின்என் செய்கோ ?

பதவுரை

[நன் நித்திலத்தின் பூண் அணிந்து — நல்ல முத்துக்களான பூண் களை அணிந்து; நலம் சார் பவளக் கலை உடுத்து — அழகு பொருந்திய பவளம் போலச் சிவந்த உடையினை உடுத்து; செந் நெல் பழனம் — செந்நெல் விளைகின்ற நன் செய் நிலமாகிய; கழனி தொறும் — வயல் கள் தோறும்; திரை உலாவு கடல் சேர்ப்ப — அலை வந்து மோது கின்ற கடற்கரையை யுடைய தலைவ!; புன்னைப் பொதும்பர் — புன்னை மரச் சோலையில்: மகரத் திண் கொடியோன் எய்த — மீன் எழுதிய வலிய கொடியினையுடைய மன்மதனால் எய்யப்பட்ட; புதுப் புண்கள் — புதிய புண்கள்; என்னைக் காணுவகை மறைத்தால் — என் உருவைக் காணாதபடி மறைத்தால்; அன்னை காணின் — அதை என் அன்னை கண்டால்; என் செய்கோ — நான் என் செய்வேன்]

புண்களாவது உடல் காமநோயால் மாறுபடுதல்.

38. **வாரித் தரள நகை செய்து,**
வண் செம்பவள வாய் மலர்ந்து,
சேரிப் பரதர் வலை முன்றில்
திரை உலாவு கடல் சேர்ப்ப!
மாரிப் பீரத்து அலர் வண்ணம்
மடவாள் கொள்ளக் கடவுள் வரைந்து
ஆர் இக்கொடுமை செய்தார்? என்று
அன்னை அறியின் என் செய்கோ!

பதவுரை

[வாரித் தரள நகை செய்து — கடலில் விளையும் முத்துக்களாகிய சிரிப்பைச் செய்து; வண் செம்பவள வாய் மலர்ந்து — வளப்பமான சிவந்த பவளமாகிய வாயைத் திறந்து; சேரிப் பரதர் வலை முன்றில் — சேரியில் வாழும் வலைஞர்களின் வலை கிடக்கும் வீட்டு வாயிலில்; திரை உலாவு — அலைகள் வீசுகின்ற; கடல் சேர்ப்ப — கடற் கரை யையுடைய தலைவ!; மாரிப் பீரத்து அலர் வண்ணம் — மாரிக் காலத் துப் பூத்த பீர்க்கு மலர் போன்ற நிறத்தினை; மடவாள் கொள்ள — என் மகள் இங்ஙனம் கொள்ளும்படி; கடவுள் வரைந்து — தெய் வத்தை வழிபட்டு; ஆர் இக் கொடுமை செய்தார் — இக் கொடுமை செய்தவர் யார்?; என்று —; அன்னை அறியின் — அன்னை ஆராய்ந்து அறிந்து விட்டாளாயின்; என் செய்கோ — யான்என்ன செய்வேன்]

அலைகள் முத்துக்களாகிய பற்களால் நகைத்து, பவளங்களாகிய வாயைத்திறந்து, வீட்டு வாயிலில் வந்து திரிகின்றன. பீர்க்க மலரின் நிறம், அதாவது மகளிர் கணவரைப் பிரிந்து வருந்தும்போது உண்டா கின்ற ஒரு வகை வெளுப்பு நிறம். கடவுளைக் குறி கேட்டு களவுக் கணவன் இன்னான் என்று அன்னை தெரிந்து கொள்வாளென்று தலைவி அஞ்சுகின்றாள்.

தரளம் — முத்து. பீரம் — பீர்க்கு. அலர் — பூ.

39. புலவு உற்று இரங்கி அது நீங்கப்
பொழில் தண் தலையில் புகுந்து உதிர்ந்த
கலவைச் செம்மல் மணம் கமழ
திரை உலாவு கடற் சேர்ப்ப!
பல உற்று ஒரு நோய் துணியாத,
படர் நோய் மடவாள் தனி உழப்ப,
அலவு உற்று இரங்கி அறியா நோய்,
அன்னை அறியின் என் செய்கோ!

பதவுரை

[புலவு உற்று இரங்கி — புலால் நாற்றம் பெற்று வருந்தி; அது நீங்க — அந்த நாற்றம் நீங்கும்படி; பொழில் தண் தலையில் புகுந்து — சோலையில் குளிர்ந்த இடத்தில் நுழைந்து; உதிர்ந்த கலவை செம்மல்— (அங்கு) உதிர்ந்து கிடக்கும் பலவும் ஒன்றாகக் கலந்த பழைய பூக்களின்; மணம் கமழ — நறு மணம் கமழும்படி; திரை உலாவு — அலைகள் வீசுகின்ற; கடற் சேர்ப்ப — கடற்கரையை யுடையவனே!; பல உற்று — பலவாகிய வருத்தங்களைப் பொருந்தி; ஒரு நோய் துணியாத— ஒரு நோயாகவும் துணிய முடியாத; படர் நோய் — நினைவாகிய காம நோயினால் (என்றது, நினைவு விட்டு நீங்காத காம நோயினால்); மடவாள் தனி உழப்ப — தலைவி தனித்து வருந்த; அலவு உற்று இரங்கி — துன்ப முற்று வருந்தி; அறியா நோய் — பிறர் ஒருவர் அறிய முடியாத இந் நோயை; அன்னை அறியின் — அன்னை அறிவாளானால்; என் செய் கோ — யான் என்ன செய்வேன்.]

செம்மல் — உதிர்ந்த பழைய பூ. அலவு—துன்பம். ஒரு நோயாகத் துணியப் படாத நோய் என்றது, பல காரணங்களால், பல விதமாக வந்து, ஒரு மருந்திலும் பிடிபடாமல் வருத்துகின்ற காம நோய். படர் — நினைவுத் துன்பம்.

★

இரவில் தலைவியின் வருத்தம்

40—42

மாலைப் பொழுதில் தன் வீட்டில் தன்னந்தனியாய் உட்கார்ந்து கொண்டு இவ்விதமாய்த் தன் காதலனை நினைத்துத் தலைவி நொந்துகொண் டிருக்கும் போது, மாலைப் பொழுது நீங்கி, இருள் சூழ்ந்து விட்டது. தலைவி என்ன செய்து கொண்டிருக்கிறாளென்று பார்க்கத் தோழியும் அங்கே வந்தாள். தோழியைக் கண்டவுடன் தலைவியின் துக்கம் அதிக மாய் விட்டது. தோழியிடம் தலைவி முறையிடுகிறாள். "நறு மலர் அணிந்த கூந்தலையுடைய என் தோழியே! சூரியனும் மறைந்து விட் டான்; கரிய இருள் எங்கும் பரவி விட்டது; பறவைகளின் பாட்டும் அடங்கி விட்டது. மையுண்ட கண்களிலிருந்து நீர் பெருகுகின்றது; மயக்கம் தருகின்ற மாலைப் பொழுதும், காம நோயை மிகப்படுத்தும்

முழு நிலாவும் என்னைப் பிரிந்து போனவருடைய நாட்டிலும் உண்டோ?"

மாலைப் பொழுதிலும், முழுநிலாக் காலத்திலுமாவது தலைவன் தன்னை நினைக்க மாட்டானா என்று தலைவி வருந்துகிறாள்.

40. இளை இருள் பரந்ததுவே;
எல் செய்வான் மறைந்தனனே;
களைவு அரும் புலம்பு நீர்
கண் பொழீஇ உகுத்தனவே;
தளை அவிழ் மலர்க் குழலாய்!
தணந்தார் நாட்டுஉளதாம் கொல்?
வளைநெகிழ எரிசிந்தி
வந்த இம் மருள் மாலை.

41. கதிரவன் மறைந்தனனே;
கார் இருள் பரந்ததுவே;
எதிர் மலர் புரை உண் கண்
எவ்வ நீர் உகுத்தனவே;
புதுமதி புரை முகத்தாய்!
போனார் நாட்டு உளதாங்கொல்?
மதி உமிழ்ந்து கதிர் விழுங்கி
வந்த இம் மருள் மாலை

42. பறவை பாட்டு அடங்கினவே;
பகல் செய்வான் மறைந் தனனே;
நிறை நிலா நோய்கூர
நெடுங்கண் நீர் உகுத்தனவே;
துறு மலர் அவிழ் குழலாய்!
துறந்தார் நாட்டு உளதாங்கொல்?
மறவையாய் என்னுயிர் மேல்
வந்த இம் மருள் மாலை.

பதவுரை

(40) [இளை இருள் — இளைய இருள்; பரந்ததுவே — எங்கும் நிறைந்தது; எல் செய்வான் — பகற் பொழுதைச் செய்கிற சூரியனும்; மறைந்தனனே — மறைந்தனன்; களைவு அரும் புலம்பு நீர் — களைதற் கரிய வருத்தத்தால் உண்டான நீரை; கண் பொழீஇ உகுத்தனவே — கண்கள் சிந்திச் சிதறின; தளை அவிழ் மலர்க் குழலாய் — கட்டு அவிழ்கின்ற மலரணிந்த கூந்தலையுடைய தோழீ; தணந்தார் நாட்டு — நம்மைப் பிரிந்து போனவர் நாட்டில்; வளை நெகிழ — கை வளைகள் கழலும்படி; எரி சிந்தி — காமத் தீயைச் சிதறி; வந்த — வந்தடைந்த; இம் மருள் மாலை — இந்த மயக்கந்தரும் மாலைப் போது; உளதாங் கொல்? — உண்டாகி இருக்குமோ.]

(41) [கதிரவன் மறைந்தனனே — சூரியன் மறைந்தான்; கார் இருள் பரந்ததுவே — கரிய இருள் எங்கும் பரவியது; எதிர் மலர் புரை உண் கண்—ஒன்றற்கொன்று எதிரெதிராக இருக்கும் மலர்களைப்

போன்ற மையுண்ட கண்கள்; எவ்வ நீர் உகுத்தனவே—துன்பமாகிய கண்ணீரைச் சிந்தின; புது மதி புரை முகத்தாய் — புதிய நிலாப் போன்ற அழகிய முகத்தினை உடையவளே; போனார் நாட்டு — என்னைப் பிரிந்து போனவருடைய நாட்டில்; மதி உமிழ்ந்து — நிலாவை வெளிப்படுத்தி; கதிர் விழுங்கி — கதிரவனை மறைத்து; வந்த — தோன்றிய; இம் மருள் மாலை — இம் மயக்கந்தருகின்ற மாலைப் போது; உளதாங்கொல் — உண்டாகி இருக்குமோ?]

(42) [பறவை பாட்டு அடங்கினவே — பறவைகளின் பாட்டுக்கள் அடங்கின; பகல் செய்வான் மறைந்தனனே — பகற் பொழுதைச் செய்கின்ற கதிரவன் மறைந்தனனே; நிறை நிலா நோய்கூர — முழு நிலா காம நோயை மிக வைத்தலால்; நெடும் கண்ணீர் உகுத்தனவே — நீண்ட கண்கள் நீரைச் சிந்தின; துறு மலர் அவிர் குழலாய் — நெருங்கிய மலர்கள் விரிந்த கூந்தலை உடைய தோழி!; மறவையாய் — கொடுமையை உடையதாய்; என் உயிர் மேல் வந்த — எனது உயிரைப் பற்றித் தோன்றிய; இம் மருள் மாலை— இந்த மாலைப் பொழுது; துறந்தார் நாட்டு — என்னைத் துறந்து சென்றவர் நாட்டில்; உளதாம் கொல்? — உண்டாகி இருக்குமோ.]

கூர்தல் — மிகுதல்; துறு — நெருங்கிய; மறம் — கொடுமை.

(தொடரும்)

தூது

இந்திர வில்லதன் உயிர்க் கனவாய்
எழிலுற வந்த பசு மயிலே
சுந்திரத் தமிழ் தந்த கந்தனை நின்
தோகையின் கண் களால்க் கண்டதுண்டோ?
குன்று தோறும் விளை யாடுகின்றான்
குறு நகை இதழாடக் குமரன் என
மின்னிடும் கார் மழைப் பாட்டினிலே
மெல்லவே என்னிடம் சொன்னதுண்டு
நெற்றியில் குங்குமம் வைத்தால் அவன்
நினைவே விரிந்துயிர் அணைவதற்கு
கற்றைச் சடைமுடிக் கடவுள் நுதல்
கண்ணிலே வந்ததும் காரணமோ?
வேடமான் நாடிய வேல் முருகன்
விம்மிடும் நெஞ்சுடைக் கன்னிகையாம்
மாடப் புரு எனைக் கொள்வதற்கே
மார்க்கமே சொல்லி அழைத்து வாராய்.

— சி. எஸ். ஆர்.

இதுவும் வேண்டும்!

"வில்லன்"

1. விஞ்ஞானமும் விவசாயமும்

அண்மையில் நாட்டின் பல பாகங்களிலும் ஏற்பட்ட கொடிய பஞ்சங்களும் பட்டினிச் சாவுகளும், இன்றுங்கூட உணவு தானியங்களின் குறைவால் நாம் அனுபவித்து வரும் பல இன்னல்களும், நமது விவசாயம் எவ்வளவு சீர்கேடான நிலையிலுள்ளது என்பதைப் போதிய அளவு உணர்த்தியுள்ளன. இப் படுமோசமான நிலைமையிலிருந்து வெளியேற வேண்டுமானால், காலந் தாழ்த்தாமல் விவசாயத்துடன் தொடர்புள்ள எல்லா விஷயங்களிலும் சீர்திருத்தங்கள் செய்வதும், விவசாய உற்பத்தி விஷயமாக விஞ்ஞான சாத்திரம் நமக்குத் தெரியப்படுத்தும் யாவற்றையும், மேலை நாட்டு விஞ்ஞானிகளும் இந்திய விஞ்ஞானிகளும் தத்தம் ஆராய்ச்சிகளில் உற்பத்தியைப் பெருக்கும் விஷயமாகக் கண்டு பிடித்துள்ள நூதன உண்மைகள் யாவற்றையும் நமது விவசாயத் தொழிலில் பிரயோகித்து விளைவைப் பெருக்குவது இன்றியமையாதனவாகும்.

நமது சமூக, பொருளாதார நிலைமைகளில் விவசாய அபிவிருத்திக்கு இடையூறுகளுள்ள பிரச்னைகளை முற்போக்கான வழியிலும் தைரியமாகவும் சமாளிக்க வேண்டும். விவசாயத்திற்கு நிலமே பிரதானமாதலால், அதைப் பண்படுத்தி உழுது பயிரிடும் குடியானவன் அதன் செழுமையைக் கருத்துடன் பாதுகாத்துத் தன் தொழிலைச் செவ்வனே நடத்துவதற்கு நிலத்தில் போதிய உரிமையுடையவனும், அந்நிலத்தை அபிவிருத்தி செய்வதற்குரிய வசதிகள் யாவற்றையும் உடையவனும் இருத்தல் வேண்டும். அவன் பயிரிடும் பண்ணையானது, சீர்திருத்தமான முறைகளைக் கையாண்டு உற்பத்தியை அதிகரிக்கப் போதுமான அளவுடையதாக இருக்க வேண்டும். பண்ணையைச் சார்ந்த நிலங்கள் கூடிய வரையில் ஒருங்கே சேர்ந்திருக்க வேண்டும். பயிர்ச் செலவுக்குப் போதுமான பண வசதிகள் அவனுக்கு எளிதில் கிடைக்க வேண்டும். விளை பொருள் சாதாரண மார்க்கெட்டுகளில் விற்பனை செய்வதற் குரிய வசதிகளும், விற்பனை விலையில் நியாயமான பங்கும் அவனுக்குக் கிடைக்க வேண்டும். இவ்விஷயங்களைப் பற்றி நாம் இங்கே விவரிக்கப் போவதில்லை. விஞ்ஞானத்தைப் பிரயோகித்து எங்ஙனம் உற்பத்தியைப் பெருக்கலாம்.

என்பதே இக்கட்டுரையின் அடிப்படையான விஷயம்.

விஞ்ஞானி பயிர் பச்சைகளின் இயல்பையும் வளர்ச்சியையும் உற்று நோக்கினன். பயிர் பச்சைகள் தமக்குரிய ஊட்டத்தை மண்ணினின்று எங்ஙனம் பெறுகின்றன? அவற்றின் வளர்ச்சிக்குரியன யாவை? அவற்றின் வளர்ச்சியைத் தடை செய்வன யாவை? ஒவ்வொரு பயிருக்கும் உரிய வெட்ப தட்ப நிலை என்ன? ஒரு வெப்ப தட்ப நிலைக்குரிய பயிரை வேறொரு வெப்ப தட்ப நிலையில் பயிராக்க என்ன செய்ய வேண்டும்? ஓரிடத்தில் விளைவு குறைவாகவும் மற்றோரிடத்தில் விளைவு அதிகமாயும் இருப்பதேன்? விளைவை அதிகரிக்க என்ன செய்ய வேண்டும்? தனியியல்புடைய இரு வகையான செடிகளை ஒன்றோடொன்று சேரச் செய்து ஒரு புது இனத்தைச் சிருஷ்டிப்பதெப்படி? இப்படிப் பல விஷயங்களைப் பிரத்யட்சமாக ஆராய்ந்தும் சோதனைகள் பல செய்தும் பல புது உண்மைகளைக் கண்டு பிடித்திருக்கிறன். அரசாங்கத்தார் இவ்வுண்மைகளை மக்களுக்கு அறிவுறுத்தி விவசாயத்தை அபிவிருத்தி செய்யுமாறு செய்கின்றனர். அன்றியும் அந்தந்த நாட்டு அரசாங்கத்தார் தத்தம் நாட்டிற்குரிய தனிப் பிரச்சனைகளைத் தீர்ப்பதற்குரிய வழிகளை ஆராய்ந்து கூற விஞ்ஞானிகளை அமர்த்தி, அவர்கள் ஆராய்ச்சிகளில்க் கண்ட புது விஷயங்களை ஆதாரமாகக் கொண்டு தேசீய விவசாய அபிவிருத்தித் திட்டமொன்றும் அமைத்து நடத்துகின்றனர். இன்று முற்போக்கடைந்த நாடுகளில் இப்படி நடந்துள்ளது. சோவியத் ருஷ்யாவில் இப்படித்தான் நடந்தது. நமது நாட்டிலும் இப்படி நடக்க வேண்டும்.

நமது விவசாய உற்பத்தி வேறெந்த நாட்டையும் விட மிகக் குறைவாக இருக்கிறது. உதாரணமாக, நெற்பயிரை எடுத்துக் கொள்வோம். நமது நாட்டில் ஒரு ஏகரா நிலத்தில் 828 ராத்தல் தானியமே விளைகிறது. இது இஸ்பானிய நாட்டில் விளைவதில் ஆறில் ஒரு பங்கும், எகிப்தில் விளைவதில் நான்கில் ஒரு பங்குமேயாகும். இதற்குப் பல காரணங்கள் உள்ளன. அவற்றுள் முக்கியமான காரணங்கள் மூன்று. முதலாவது நமது நாட்டில் பயிர்கள் பெரும்பாலும் வளங்குன்றிய மட்ட ரகங்களாகவே யுள்ளன. அவை நோய் நொடிகளை எதிர்த்து நிற்கும் ஆற்றலுடையன வாகவுமில்லை. இரண்டாவது, சாகுபடி செய்யும் முறை அவ்வளவு திருப்திகரமாக இல்லை. குடியானவர்கள் பெரும்பாலும் வழிவழியாக வரும் சில கெட்ட பழக்கங்களையும் மாமூல் முறைகளையும் ஒட்டியே சாகுபடி செய்கின்றனர். விவசாயத்தைப் பற்றிய விஞ்ஞான அறிவோ இக்காலத்தைச் சார்ந்த நவீன அறிவோ அவர்களுக்குக் கிடையாது. மூன்றாவதாக குடியானவர்கள் நிலத்திற்குப் போதுமான உரமிடுவதில்லை. நிலத்தின் இயல்புக்கும் மண்ணின் தன்மைக்கும் பயிரின் தேவைக்கும் உரிய எரு என்ன என்பதை அவர் அறியார். விஞ்ஞானத்தின் மூலமாகவே இக்குறைகளைப் போக்க முடியும்.

நமது நாட்டில் பயிர்கள் பெரும்பாலும் மட்டரகமானவை யாயிருக்கின்றன வென்று கூறினேன். உயர்ந்த சாதிப் பயிர்களே மாசூல் அதிகமாகத் தருவதாலும்,

19728

அவையே நோய் நொடிகளை
எதிர்த்து நிற்கும் ஆற்றலுடையன
வாக இருப்பதாலும், மட்ட சாதிப்
பயிர்களைத் தள்ளி விட்டு உயர்ந்த
சாதிப் பயிர்களைப் பொறுக்கி
யெடுத்து நாடெங்கும் பெருவாரி
யாகப் பயிர் செய்ய வேண்டும்.
நமது நாட்டில் ஆங்காங்கு காணப்
படும் உயர்ந்த சாதிப் பயிர்களையும்
விஞ்ஞானிகள் பரிசீலனை செய்து,
அவற்றிலிருந்து நமது நாட்டில்
நன்கு பயிராகக் கூடிய இனங்
களைத் தேர்ந்தெடுத்துப் பயிராக்க
வழிகாட்ட வேண்டும். இதை
மூன்று வழிகளில் செய்யலாம்.

நமது நாட்டிற்கே புதியனவான
பயிர்களைக் கொணர்ந்து அவற்றை
இங்குள்ள வெப்ப தட்ப நிலைக
ளுக்கு மெல்ல மெல்லப் பழக்கப்
படுத்தி விடலாம். உயர்ந்த சாதிச்
செடியின் கொப்பொன்றை வெட்
டிச் சாதாரணமாகக் கிடைக்கக்
கூடிய மற்றொன்றின் கொப்
புடன் ஒட்டிக் கட்டி, புதுச்
சாதியை யுண்டாக்கி வளர்க்க
லாம். அல்லது ஒரு உயர்ந்த
சாதிச் செடியின் பூந்தாதுவின்
மகரந்தத்தைத் தாழ்ந்த சாதிச்
செடியின் பூவிலுள்ள கர்ப்பப்
பையில் சேர்ப்பித்து ஒரு புதுக்கலப்
பினத்தை உண்டாக்கிப் பெருக்க
லாம். நமது நாட்டில் அரசாங்க
விவசாய ஆராய்ச்சி இலாகாக்கள்
நெல், கோதுமை, பருத்தி, கரும்பு
முதலிய பயிர்களின் உயர்ந்த ரகங்
களைக் கண்டு பிடித்துத் தத்தம்
சோதனைப் பண்ணைகளில் பயிரிட்டு
வருகின்றன. உயர்ந்த ரக நெற்
பயிரானது ஆடுதுறை, கோயமுத்
தூர், பட்டாம்பி, முதலிய இடங்
களிலுள்ள சர்க்கார் பண்ணைகளில்
வளர்க்கப் படுகின்றன. இப்
பயிர்கள் சாதாரணப் பயிர்களை
விட 8 சதம் முதல் 28 சதம் வரை
யில் அதிக விளைச்சல் தருகின்றன.
பூசாவில் உயர்ந்த ரகக் கோது
மையும், கோயமுத்தூரில் உயர்ந்த
ரகக் கரும்பும் கண்டு பிடிக்கப்
பட்டு பயிராக்கப்பட்டிருக்கின்
றன. சென்னை விவசாய இலாக்கா
உயர்ந்த ரகக் கம்போடியா பருத்
தியைக் கண்டு பிடித்துள்ளது.

ஆனால் இந்த உயர்ந்த சாதிப்
பயிர்கள் இன்னும் பெருவாரி
யாகப் பரவவில்லை. கரும்பு,
பருத்தி போன்ற வியாபாரப்
பயிர்களே இதுகாறும் பெருவாரி
யாகப் பரவியுள்ளன. விவசாய
இலாக்காக்கள் இன்னும் நெற்
பயிர் விஷயத்திலும் ஏழை மக்க
ளின் பயிர்களான ராகி, கம்பு,
சோளம் ஆகியவற்றிலும் போதிய
கவனம் செலுத்தவில்லை. நமது
நாட்டில் நெற்பயிரை மட்டும்
எடுத்துக் கொண்டால், ஆயிரக்
கணக்கான ரகங்கள் உள்ளன.
ஆனால் அவை பெரும்பாலும்
மட்ட ரகங்கள். அவற்றின் விளை
வும் குறைவு. அவற்றில் 95 சதம்
பயிரிடுவதற்கு லாயக்கற்றவை
எனலாம். நெற்பயிர் சாகுபடி
யாகும் மொத்த விஸ்தீரணத்தில்
4 சதவிகிதம் விஸ்தீரணத்தில் தான்
உயர்ந்த ரகமான நெற்பயிர் விளை
கிறது. ஆனால் ஜப்பானிலோ
நெல் சாகுபடியாகும் நிலத்தில்
90 சதவீதம் உயர்ந்த ரகங்களே
பயிராகின்றன. ஜப்பானில் ஒரு
ஏகராவில் 3000 ராத்தல் நெல் விளை
வதும் நமது நாட்டில் 828 ராத்
தலே விளைவதும் இது காரணம்
பற்றியே யாகும்.

விளைவைப் பெருக்குவதற்கு,
பொறுக்கியெடுத்த உயர்ந்த ரக
மான விதைகளைப் பெருவாரியா
கப் பயிர் செய்து குடியானவர்
களுக்கு வழங்குவதும் இன்றிய
மையாததாகும். உயர்ந்த ரக
விதைகள் நமது நாட்டில் சர்க்கார்

பண்ணைகளில் பயிராகின்றன. ஆனால் அவற்றை விநியோகிக்கும் விஷயத்தில் போதிய கவனஞ் செலுத்தப்படுவதில்லை. அறியாமையும், வறுமையும் அதிகமாயுள்ள மக்களிடையே அரசாங்கத்தார் போதிய பிரசாரஞ் செய்வதும், உயர்ந்த சாதிப் பயிர்களையும், நன்கு சோதிக்கப்பட்ட உயர்ந்த ரக விதைகளையும், குடியானவர்களுக்கு எளிய முறையில் பெருவாரியாக வழங்கி அவர்கள் அவற்றையே பயன் படுத்துமாறு தூண்டுவதும் இன்றியமையாதனவாகும்.

சாகுபடி செய்யும் முறைகளிலும் அபிவிருத்தி யேற்பட வேண்டுமென்று கூறினோம். விஞ்ஞானம் இங்கும் பயன்படுகிறது. நிலத்தில் அடுத்தடுத்து ஒரே விதப் பயிரைப் பயிரிடுவதைவிட பல வகைப் பயிர்களை மாற்றி மாற்றிப் பயிரிடுவதே சாலவும் சிறந்ததென நம் முன்னோர்கள் கண்டுள்ளனர். ஆனால் பழக்கத்தில் பலவிடங்களில் இதைப் பயிலுவதில்லை. விஞ்ஞானம் இதன் அவசியத்தை நமக்கு வலியுறுத்துகின்றது. இம்முறையினால் நிலத்தின் செழுமை நன்கு பாதுகாக்கப் படுகின்றது. எப்படி என்பதைப் பார்ப்போம். ஒவ்வொரு பயிரும் நிலத்திலிருந்து தன் பூசாரத்தைக் கிரகிக்கும் போது ஒரு குறித்த பூசாரத்தையே மற்றெல்லாவற்றையும்விட அதிகமாகக் கிரகிக்கின்றது. ஆகவே, ஒரே விதமான பயிரை ஆண்டுதோறும் அடுத்தடுத்துப் பயிரிட்டால், நிலத்திலுள்ள அக்குறித்த பூசாரம் மென்மேலும் குறைந்து கொண்டே வந்து, உற்பத்தியும் மெல்ல மெல்லக் குறைகின்றது. இந்த நிலையைத் தவிர்க்கப் பலவிதமான பயிர்களை மாற்றி மாற்றிப் பயிர் செய்வது நலமுடையதாகும். ஒரு குறித்த பயிருக்குப் பின் மற்றொரு வகைப் பயிரைப் பயிர் செய்தால், பின் சொன்னது முன் சென்ற பயிர் கிரகித்த பூசாரத்தைக் கிரகிக்காது. அப்போது அந்த நிலமானது தான் இழந்த பூசாரத்தை மெல்ல மெல்லத் திரும்பப் பெற்றுவிடும். இம்முறையால் நிலத்தின் பூசாரம் பாதுகாக்கப் படுகின்றது. இரண்டாவதாக, இம்முறையினால் அந்தந்தப் பயிர்களுக்கு வேண்டிய உணவு விடுவிக்கப் பட்டு அவைகளுக்குக் கிடைக்குமாறு செய்யப் படுகின்றது. உதாரணமாக, நெல் அறுவடையானவுடனேயோ அல்லது அறுவடையின்போது நிலம் ஈரமாயிருக்கும்போதோ நிலத்தில் பயறு அல்லது மாட்டுத் தீவனத்திற்குரிய பயிரொன்றை விதைத்து விட்டால் அப்பயிர்களின் தழைகள் உதிர்ந்து அடுத்துவரும் நெற்பயிருக்குத் தேவையான நைட்ரோஜன் அல்லது தழைச் சத்தையளித்து விடுகின்றன.

விளைவைப் பெருக்குவதற்கு நிலத்தின் இயல்புக்கும் பயிரின் தன்மைக்கும் உரிய உரமிடுதலும் இன்றியமையாததாகும். இவ்விஷயத்திலும் விஞ்ஞான ஆராய்ச்சி நமக்குப் பெரிதும் பயன்படுகின்றது. பயிர்கள் தம் வளர்ச்சிக்குத் தேவையான உணவைப் பெரும்பாலும் பூமியிலிருந்தே கிரகித்துக் கொள்ளுகின்றன. ஒரு நிலம் இயல்பாகவே எவ்வளவுதான் செழிப்புடையதாயினும், அதில் போதிய எருவிடாமல் வருடா வருடம் பயிரிட்டு சாகுபடி செய்து வந்தால், நாளடைவில் அதன் வளம் குன்றுவதோடு விளைவும் குன்றும். ஒரு பயிரின் மூலமாக நிலத்தினின்று சென்று விடும் பூசாரத்தைப் பயிர் அறுவடையானதும் ஈடு செய்துவிட வேண்

டும். இதுவே வேளாண்மைக்குரிய பிரதான விதியாகும். ஆயினும், இன்று குடியானவர்கள் பூசாரத்தைப் பெரிதும் உறிஞ்சி விடும் கோதுமை, பருத்தி, மணிலா ஆகிய சனப் பயிர்கள் அறுவடையான பின் நிலத்திற்கு ஏற்படும் நஷ்டத்தை ஈடு செய்வதில் கவனஞ்செலுத்துவதில்லை. இப்படிச் செய்வதால் நிலத்தின் செழுமையும் விளைவும் குறைந்து விடுகின்றது. இதன் காரணமாகவே நம் நாட்டு விவசாயம் மிகக் கீழ்ப்பட்ட நிலையிலுள்ளது.

டிய அவசிய மேற்படுகின்றது. எரு வானது இயற்கை எருவென்றும் செயற்கை எருவென்றும் இரு வகைப்படும். குடியானவனின் பண்ணையில் தாவரங்களிலிருந்தும், கால்நடைகளிலிருந்தும் கிடைக்கப் பெறும் உரமே இயற்கையுரம். இதுவே இந்திரிய சத்துள்ள உரம். அமோனியம் சல்பேட், பாஸ்பேட், பொட்டாஸியம் சல்பேட், இவை செயற்கை யுரங்கள். இவ்வுப்புக்கள் சுரங்கங்களில் அகப்படுகின்றன. ஆனல் போதிய அளவு கிடைக்காததால், இயந்

நமது நாட்டில் பயிர்கள் செழிப்பாக வளர்வதற்கு உதவியாயிருக்கும் பூசாரங்கள் மூன்று: முதலாவது நைட்ரோஜன் எனப்படும் தழைச் சத்து. மிக முக்கியமாகிய இச் சத்து நமது நாட்டில் குறைவாகவே இருக்கிறது. இரண்டாவது பாஸ்பரஸ் எனப்படும் தானிய சத்து. இதை எலும்பிலிருந்து பெறலாம். மூன்ருவது பொட்டாஷ் என்னும் காரம். இது சாம்பலில் கிடைக்கிறது. இப் பூசாரங்கள் நிலத்தில் குறைவாக இருப்பதால் நிலத்திற்கு எருவிட வேண்

திர சாதனங்களைக் கொண்டு காற்றிலிருந்து செயற்கையாக உற்பத்தி செய்யப் படுகின்றன. நிலக் கரியிலிருந்து நைட்ரோஜன் சத்து சிறிதளவு கிடைக்கின்றது. நமது நாட்டில் இயற்கை உரங்களையே பெருவாரியாக உபயோகிக்க வேண்டுமென்றும், போதாக் குறைக்கு மட்டுமே செயற்கை யுரங்களை உபயோகிக்க வேண்டுமென்றும் ஆராய்ச்சியாளர் கூறுகின்றனர்.

நமது விவசாயப் பண்ணையில் அகப்படும் சாணம் மிகச் சிறந்த

ருவாகும். அதில் நாம் மேலே கூறிய சற்றேறக்குறைய எல்லா சத்துக்களும் உள்ளன. கால் நடைகளின் சிறுநீர் சிறந்த எருவாகும். சாணத்தை விட இச் சிறுநீரில் நைட்ரோஜன் சத்து அதிகமாயிருப்பதாகக் கண்டு பிடித்துள்ளனர். ஆயினும், விஞ்ஞான அறிவு சிறிது மற்ற குடியானவன் இவ்வெருக்களைப் பாதுகாத்து வைக்கத் தெரியாமல் வீணாக்குகிறான். சாணத்தை முட்டையாகத் தட்டி எரிக்கிறான். வெளியிடங்களில் கொட்டி வைத்து அதன் சத்து போய் விடும்படி செய்கிறான். சாணத்தைத் திரட்டி குழியில் தோண்டிப் புதைத்து மூடி வைத்து ஆறுமாதத்திற்குப் பின் திறந்து எடுத்தால், பதமான எருவாகும். வீட்டுக் குப்பை, தோட்டக் குப்பை, உலர்ந்த தழைகள் முதலியவற்றையும் குழியில் போட்டு மக்க வைத்துப் பின்னர் உபயோகிக்கலாம். இத்தகைய இயற்கை எருக்களில் குணபம் மடிசல் என்னும் சத்துள்ளது. இந்த சத்து நிலத்திற்குக் கிடைத்தால் என்றும் வளம் குன்றுவதில்லை. ரசாயன— செயற்கை எருக்கள் முதலில் விளைவை அதிகரித்தாலும், அவற்றிடம் இந்த மடிசல் சத்து இராததால், வர வர வளம் குன்றிக் கொண்டே வரும். மக்கள் கழியும் மல ஜலத்திலும் நைட்ரோஜன் சத்துள்ளது. இவற்றை வீணாக்காமல் முனிசிபாலிடிகள் சேகரித்துக் குழியில் போட்டு மூடி, சிறந்த எருவாக்கலாம். புண்ணாக்கில் நல்ல உரச் சத்துள்ளது. எலும்பில் பாஸ்பேட் உரமுள்ளது. இவற்றையும் முறைப்படி பயன்படுத்தலாம். போதிய எருவின்றி விவசாயம்சீரழிகின்றது. எருவின் முக்கியத்தையும், இயற்கையுரங்களைப்பாதுகாத்து நிலத்திற்களிக்கும் வழிகளையும் செயற்கையுரங்களை உபயோகிக்கும் முறைகளையும் மக்களுக்குப் போதிப்பது அரசாங்கத்தின் கடமையாகும்.

இப்படிப் பல வழிகளிலும் விஞ்ஞானிகள் கண்டு பிடிக்கும் விஷயங்கள் விவசாய உற்பத்தியைப் பெருக்கப் பெரிதும் பயன் படுகின்றன. ஆனால் இவ்விஞ்ஞானம் மக்களுக்கு எட்ட வேண்டும். விஞ்ஞான ஆராய்ச்சி சாலைகளிலும் புத்தக ஏடுகளிலும் இருந்தால் பயனில்லை. எழுத்தறிவற்ற மக்களிடையே இந்த ஞானம் பரவ வேண்டும். விஞ்ஞானத்தைத் தம் தொழிலில் பிரயோகிப்பதற்குரிய எல்லா வசதிகளையும் அரசாங்கத்தார் செய்து தரவேண்டும்.

விஞ்ஞானம் விவசாயத் தொழிலில் நன்கு பிரயோகிக்கப் படுவதன் மூலமாக உற்பத்தி பெருகி செல்வம் மிகுந்தால், நாடும் மக்களும் நலமுறுவது திண்ணம்.

புத்தக ஆராய்ச்சி

●

மெய்கண்டான் சித்தாந்த மகாநாடு, திருமுறைத் திருநாள் நிகழ்ச்சிகள் :

தருமபுர ஆதீன வெளியீடு. விலை: ரூ. 1—0—0

"வேத நெறி தழைத்தோங்க, மிகுசைவத் துறை விளங்க" அன்று திருஞானசம்பந்தர் காரணமாய் இருந்ததுபோல், தருமபுர ஆதீனம் 24-வது மகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சண்முகதேசிக ஞானசம்பந்த சுவாமிகள் இன்று சைவமும் தமிழும் தழைத்தோங்கப் பெரிதும் காரணமாயிருக்கிறார். அவரது திருவுளப் பாங்கின்படி தருமை ஆதீனத்தில் 28, 29, 30, 31—8—41 தேதிகளில் மெய்கண்டான் சித்தாந்த மகாநாடும், திருமுறைத் திருநாளும் மிகச் சிறப்பாய் நடைபெற்றன. அந்த நிகழ்ச்சிகளையும், அது போது அறிஞர் பலர் நிகழ்த்திய சொற்பொழிவுகளையும் திரட்டி, நிறைந்த பக்கங்களுடன், குறைந்த விலையில், அழகான புத்தகமாக வெளியிட்டிருக்கிறார்கள்.

●

சிவஞான போதக் கட்டுரை: தருமபுர ஆதீன வெளியீடு. விலை அணா எட்டு.

மெய்கண்டான் சித்தாந்த மகாநாட்டுக்கு அறிஞர் பலர் அனுப்பிய சிவஞான போதக் கட்டுரைகளின் தொகுப்பே இப் புத்தகம்.

மேற்குறித்த புத்தகங்களிரண்டும் தருமபுர ஆதீனம், தருமபுரம், மாயவரம் என்ற விலாசத்தில் கிடைக்கும்.

●

பூரணயோகம். ஆசிரியர்: ஸ்ரீசுவாமி சுத்தானந்த பாரதியார், பிரசுரம்: பாரதசக்தி நிலையம். புதுச்சேரி. விலை: அணா-10.

யோகம், யோக மார்க்கங்கள், யோக வகைகள், யோகத்தோடு தொடர்புகொண்டவை ஆகியவைகளைப்பற்றியெல்லாம் மிகச்சுருக்கமாகவும், தெளிவாகவும் தமக்கே அமைந்த தனிப்பட்ட பாணியில் சுவாமிகள் எழுதியிருக்கிறார்கள்.

●

கந்தபுராணத் திரட்டு. தொகுத்தவர்: ரா. பி. சேதுப்பிள்ளை; வெளியீடு: அல்லயன்ஸ் கம்பெனி, மைலாப்பூர், சென்னை

விலை: ரூ. 1—4—0

கந்தபுராணத்தை ஒரே மூச்சாகப் படிக்க இயலாதவர்களுக்கும் பயன்படும் முறையில் தமிழன்பர் ஸ்ரீ ரா. பி. சேதுப்பிள்ளை, கந்த புராணத்தில் உற்பத்தி காண்டத்திலுள்ள 352 பாடல்களைத் தொகுத்து, விளக்கமான பொழிப்புரைக் குறிப்புகளோடு வெளியிட்டிருக்கிறார்.

●

மகாகவி பாரதியார். ஆசிரியர் வ. ரா. வெளியீடு: சக்தி காரியாலயம், மைலாப்பூர், சென்னை. விலை: ரூ 3—0—0

பாரதியார் ஒரு மகா கவி என்ற மறுக்க முடியாத உண்மையை பாரதியாரோடு நெருங்கிப் பழகியிருக்கும் தமிழ்ப் பெரியார் ஸ்ரீ வ. ரா.

புத்தகத்தில் தமக்கே உரிய தனி முறையில் அடித்துச் சொல்கிறார். பாரதியாரைப் பற்றியும், அவர் வாழ்க்கையைப் பற்றியும், 'ஜயந்திரி பறத்' தெரிந்துகொள்ள விரும்புபவர்களுக்கு இப் புத்தகத்தை சிபார்சு செய்கிறோம்.

●

திரு ஆனைக்கா உலா. பாடியவர்: காளமேகப்புலவர். பதிப்பாசிரியர்: ஸ்ரீ.மு. அருணாசலம், எம். ஏ. வெளியீடு: செந்தமிழ்க்கழகம், சொக்கநாதபுரம். விலை: ரூ 2—8—0

காளமேகப் புலவர் காலத்தியதும், அவர் பாடியதுமான திரு ஆனைக்கா உலாவை, இந்தப் பாரதி சகாப்தத்திலே ஸ்ரீ மு. அருணாசலத்தின் அரிய குறிப்புரை, விளக்கவுரைகளுடன் கழகத்தார் வெளியிட்டிருப்பது, அவர்களது நல்ல நோக்கத்தையும், துணிவையும் காட்டுகிறது. பழமையில் பற்றுள்ளவர்களின் பாராட்டுதலுக்கு இப் புத்தகம் தக்க பாத்திரம்.

●

வித்துவான் தியாகராச செட்டியார். எழுதியவர்: டாக்டர் உ. வே. சாமிநாதஐயர். விலை: ரூ 2—0—0

வாழ்க்கை வரலாறுகளைப் படிப்பது என்றாலே சாதாரணமாக ஒருவித அலுப்பு ஏற்படுவது இயல்பு. ஆனால் டாக்டர் உ. வே. சாமிநாதையர் எழுதும் வாழ்க்கை வரலாறுகள் இதற்கு விதி விலக்கு. சொல்ல வேண்டிய விஷயங்களை முறையாகவும், ரஸமாகவும் சொல்வதில் டாக்டர் ஐயரவர்கள் வல்லவர்கள். அந்த முறையில் தம்முடன் நெருங்கிப் பழகியவரும், தமது வாழ்க்கையின் வழிகாட்டியுமாகிய ஸ்ரீ செட்டியாருடைய வாழ்க்கை வரலாற்றை இப் புத்தகத்தில் சுவைததும்ப எழுதியிருக்கிறார்.

●

நினைவு மஞ்சரி. (பாகம் 2) எழுதியவர்: டாக்டர் உ. வே. சாமிநாதஐயர். விலை: ரூ 2—8—0 (இரண்டாம் பதிப்பு)

டாக்டர் ஐயரவர்கள் பல சந்தர்ப்பங்களில் பேசியதும் அவ்வப்போது பத்திரிகைகளில் எழுதியதுமாகிய இருபத்தைந்து கட்டுரைகளின் தொகுப்பே இப்புத்தகம்.

●

நாடக ராணி. ஆசிரியர்: பிரேம் சந்த். மொழிபெயர்ப்பு: கா. ஸ்ரீ. ஸ்ரீ. விலை: ரூ 1—4—0

மிஸ் பத்மாவின் மன நிலையையோ அல்லது நாடக ராணியின் ரகசியத்தையோ அறியாத ரஸிகர்கள் அதை உண்மையில் ஜால வித்தை என்று தான் நினைக்கக் கூடும். ஆனால் பிரேம்சந்தின் ஏழு சிறு கதைகள் அடங்கியதும் அழகாக மொழி பெயர்க்கப் பட்டதுமான இப் புத்தகத்தைப் படித்தால் உண்மை விளங்கி விடும்.

●

தமிழ் நாட்டில் காந்தி. எழுதியவர்: டாக்டர் தி. சே. சௌ. ராஜன்; விலை: ரூ 1—12—0

பத்து வருஷங்களுக்கு முன் மகாத்மா காந்தி தமிழ் நாட்டில் சுற்றுப் பிரயாணம் செய்த போது அவருடன் சென்ற டாக்டர் தி. சே. சௌ. ராஜன் பிரயாணத்தின் போது தாம் கண்டு, கேட்டு, அனுபவித்த பல விஷயங்களைப் பற்றியும் இப் புத்தகத்தில் ரஸமாக எழுதியிருக்கிறார்.

மேலே குறிப்பிட்டிருக்கும் நான்கு புத்தகங்களும் கலைமகள் காரியாலய வெளியீடுகள்.

— "உமாபதி"

ஆசிரியர்
சரத் சந்திரசட்டர்ஜி

சாவித்திரி

மொழிபெயர்ப்பு.
ஆர். ஷண்முகசுந்தரம்.

சாவித்திரி குளித்து விட்டு சதீஷின் வெளுத்த வேஷ்டியைக் கட்டிக் கொண்டு மனதிற்குள் சிரித்துக் கொண்டாள். அவன் வீட்டிலேயே அவன் வேஷ்டியை உடுத்திக் கொண்டு, பிஹாரி கடையிலிருந்து வாங்கி வந்த மிட்டாயைச் சாப்பிட்டுக் களைப் பாறினாள்.

சாப்பாட்டிற்குப் பிறகு வெற்றிலை பாக்குப் போடும் கெட்ட வழக்கம் உண்டு. அவள் பீடா போடமாட்டாள் என்பதும் பிஹாரிக்குத் தெரியும். ஆகையால் அவன் கையோடு வெற்றிலை பாக்கும் வாங்கி வந்திருந்தான். ஒரு தட்டில் வெற்றிலை பாக்கு வைத்து சாவித்திரிக்குக் கொடுக்கப் போனான். இதைப் பார்த்துச் சாவித்திரி சிரித்துக் கொண்டு, “பிஹாரி! என்னை நீ கொஞ்சம் கூட மறக்கவில்லை எனத் தெரிகிறது!” என்றாள்.

“நானும் மனிதன் தானே அம்மா? உன்னை ஒருதரம் பார்த்த பசு, பக்ஷி கூட மறக்காது” எனக் கூறிவிட்டு மேஜைமீது இருந்த விளக்கை எடுத்து கதவருகில் கொண்டு வந்து வைத்துவிட்டு சமையல்காரனிடம் சென்று விட்டான்.

சாவித்திரி விளக்கு வெளிச்சத்தில் வெற்றிலை பாக்குப் போட ஆரம்பித்தாள். தலை மேல் துணி கிடையாது. ஈரக் கூந்தல் பின்புறத்தில் தரையை முத்தமிட்டுக் கொண்டிருந்தது. இரண்டொரு கூந்தல் தோளின் மேல் தொங்கிக் கொண்டிருந்தது. நோயுற்றிருந்தாலும் சௌந்தர்யம் அவளிடம் ஒளிந்து கொண்டிருப்பது நன்கு தெரிந்தது. அவள் ஏதோ சிந்தனையில் ஆழ்ந்திருந்தாள். ஏதோ காலடி ஓசை வெளியில் கேட்ட தொன்றும் அவளுக்குத் தெரியாது. அவள் தலை தூக்கிப் பார்த்தபோது உபேந்திரனும், சதீஷும் வாயிற்படியருகில் நின்று கொண்டிருந்தார்கள். அவர்களைக் கண்டதும் அவள் மிகுந்த பரபரப்படைந்துவிட்டாள். திடீரென அவர்களைக் கண்டதும் ஜன்ம ஜன்மாந்திரங்களாக பெண்களுக்கே இயற்கையாக உண்டான நாணத்தால் அவள் உடல் குன்றிப் போனாள்.

சதீஷ் கனவில் பேசுபவன் போல "சாவித்திரி! நீயா?" என்ருன்.

இதற்குள் சுரபாலாவும், திவாகர், பிஹாரி இவர்களுடன் மேலே படிக்கட்டேறி வந்தாள். உபேந்திரன் திரும்பி "இரு, அங்கேயே இரு! இங்கே வரவேண்டாம் சுரபாலா!" என்ருன்.

சுரபாலா திடுக்கிட்டு "ஏன்?" என்ருள்.

உபேந்திரன் இந்தக் கேள்விக்குப் பதில் அளிக்காமல் "திவாகர், நீ மன்னியை வண்டிக்குக் கூட்டிக் கொண்டு போ. சதீஷ், நானும் போகிறேன்" எனக் கூறி விட்டு உபேந்திரன் மெதுவாகக் கீழே போய் விட்டான்.

அத்தியாயம் இருபத்தொன்று

உபேந்திரனது காலடி ஓசை மெத்தைப் படிக்கட்டிலிருந்து கொஞ்சங் கொஞ்சமாக மறைந்தது. அவர் பசியால் களைத்துப் போயிருந்தார். உடம்புக்கு வேறு சரியில்லை. மழை இருட்டு. இருந்தாலும் சந்தேகம் ஏற்பட்ட பிறகு அவரால் அங்கு தங்க முடியவில்லை. சதீஷ் வீட்டில் உட்கார்ந்து கொண்டு இருந்த அந்த யுவதி, வெட்கத்தாலும் மயக்கத்தாலும் இது சம்பந்தமாக ஏதாவது கேட்கலாம் என்று கூட நினையாமல் முகத்தை மறைத்து உட்கார்ந்து கொண்டாள். அவர் வெறுப்போடுதான் திரும்பிப் போனர்; ஆனல் அவள் கண்ணெடுத்துக் கூடப் பார்க்கச் சக்தியற்று இருந்தாள்.

அப்படி என்னதான் நடந்து விட்டது? சிறிது நேரத்திற்கப்புறம் சாவித்திரி நடந்ததை எண்ணி நடுங்கினுள். ஆயிரம் பேருக்கு முன்னல் கூட வெட்கப் படுவதற்கு அவளுக்கு உரிமை கிடையாது. இருந்தாலும் முன் பின் தெரியாதவர்கள் முன்னிலையில் பெரிய தவறு செய்து விட்டாள். இந்தப் பரந்த உலகின் முன் அவள் ஒரு அருவெறுப்பான வஸ்துவாகி விட்டது போன்ற உணர்ச்சி அவ்ளுக்கு ஏற்பட்டது. கொஞ்ச நேரத்திற்கு முன் இவ்வளவு பெரிய அவமானகரமான காரியம் நடக்கப் போவதை யார் கண்டார்கள்?

மூச்சு அடங்கும் போதோ அல்லது மூச்சுத் தடுமாறும் போதோ மனிதன் எவ்வாறு முகத்தை வெளியில் நீட்ட முயற்சிக்கிருனே அம்மாதிரி சாவித்திரியும் முக்காட்டைக் களைந்து விட்டு நிமிர்ந்து உட்கார்ந்தாள். பிறகு, "அவர்களெல்லாம் யார்?" என்று கேட்டாள்.

சதீஷ் மௌனமாகக் கதவருகில் நின்று கொண்டிருந்தான். அந்நிலையில் அவன், "உபேந்திர அண்ணவும், மன்னியும்" என்ருன்.

"ஐயோ! இவர் உபேந்திர பாபுவா? அது மனைவியா? அவர்கள் தானு?" எனக் கூறி விட்டு சாவித்திரி எழுந்து நின்று கொண்டு, "அவர்களைக் கூட்டி வருகிறேன். ச்சீ, ச்சீ! நான் யாருமல்ல! வழி விடுங்கள். வீட்டு வேலைக்காரிதானே நான்? விலகுங்கள்" என்ருள்.

உபேந்திரன் யார் என்பது சாவித்திரிக்கு நன்கு தெரியும். சதீஷ் அவரைப் பற்றிப் பல தடவை கூறியிருக்கிருன்.

சதீஷ் சுய நினைவிற்கு வந்தான். அவளுடைய பேச்சு அவனைப் பூர்வ நிலைக்குக் கொண்டு வந்தது. அவன் நன்கு நின்று கொண்டு இரு கரங்களையும் விரித்து வழியை அடைத்துக் கொண்டு, "வேண்டாம்" என்றான்.

சாவித்திரி துக்கத்துடன், "ஏன் வேண்டாம்? வீணாகக் கெடுக்காதீர்கள் சதீஷ் பாபு, வழி விடுங்கள். நான் யார் என்பது அவர்களுக்குத் தெரியட்டும்" என்றாள்.

சதீஷ் வழி விடவில்லை. அவன் கொஞ்சம் சிரிப்பது போலிருந்தது. "ஓ! நீ கெடுவதா? முடியாது. இந்த விஷயத்தைப் பற்றிக் கவலைப் படாதே. முதலில் நீ யார் என்பதை எனக்குச் சொல்லு!" என்றான்.

சாவித்திரியால் உடனே பதில் அளிக்க முடியவில்லை. பார்த்துக் கொண்டே இருந்தாள். இம்மாதிரி பதில் பேசாமல் பார்த்துக் கொண்டிருப்பதை சதீஷ் இதற்கு முன் பல தடவைகளில் பார்த்திருக்கிறான். ஆனால் இதற்கும் அவைகளுக்கும் எவ்வளவோ வித்தியாசம்! பெரியகாயம் பட்டும் இந்தப் பார்வையிலே ஏன் நெருப்புக் கிளம்பவில்லை? ஆச்சரியத்துடன் கருணை வழியும் இரு விழிகள் நோக்கிக் கொண்டிருந்தன. என்ன, இவைகள் சாவித்திரி யுடையவை தானா?

சிறிது நேரத்திற்குப் பிறகு அவள் மெள்ள மெள்ள, "என்னைப் பற்றியா? வேலைக்காரி என்று தான் சொன்னேன். சதீஷ் பாபு, தயவு வையுங்கள். நான் அவர்களைத் திருப்பி அழைத்து வருகிறேன். இந்த இருளில் அவர்கள் தெருத் தெருவாக எங்கு அலைவார்கள்? இது என்ன நல்லதாயிருக்குமா?" என்றாள்.

சதீஷ் கொஞ்சமும் மாறாமல், "அவர்கள் என்ன நினைத்துக் கொண்டாலும் சரி. இந்த வீட்டிற்கு மறுபடியும் வருவதை விட தெருத் தெருவாக அலைவது நல்லது. நான் மன்னியை ஒருக்காலும் இவ் வீட்டிற்குள் வருவதற்கு விடமாட்டேன்" என்றான்.

"ஏன் வீட்டிற்குள் வருவதற்கு விடமாட்டீர்கள்? நான் இந்த வீட்டிற்கு வந்து விட்டதாலா? சதீஷ் பாபு, இயற்கை கூட எனது ஸ்பர்சத்தால் தீட்டாகி விடுமா?"

சதீஷ் சிறிது நேரம் பேசாமலிருந்து விட்டு, "நீ இந்த வீட்டிற்குள் ஏன் வந்தாய்?" என்றான்.

"நீ........."

"நானா? நான் என்ன?"

சாவித்திரி அதிக நேரம் வரையிலும் சதீஷைப் பார்த்துக்கொண்டிருக்க முடியவில்லை. தரையைப் பார்த்துக் கொண்டு அழுது கொண்டே, "நீங்கள் எனது பழைய எஜமானர். ஆகையினால் இந்த நேரம் கெட்ட நேரத்திலே ஏதாவது பிச்சை வாங்கிப் போகலாமென வந்தேன்." என்றாள்.

சதீஷ் கேலிச் சிரிப்புடன், "நேரம் கெட்ட நேரத்திலே பிச்சை கேட்கவா? உனக்குத்தான் எத்தனையோ எஜமானர்கள் உண்டே, சாவித்திரி! இத்தனை நாளும் ஒவ்வொருவர் வீடாகப் போய் வந்திருப்பாய் என்று நினைக்கிறேன்." என்றான்.

சாவித்திரியின் முகத்தில் மின்னல் போல் கோபம் தெரித்தோடியது.

சதீஷின் இந்த இரக்க மற்ற பேச்சுக்கள் சாவித்திரியின் இதயத்தைச் சுக்கு நூறுக்கின. இருந்தாலும் அவள் தலையை உயர்த்திப் பார்க்கவில்லை. ஒன்றும் பேசக் கூட இல்லை. வாயை இறுக மூடிக் கொண்டிருந்தாள்.

சதீஷ் மறுபடியும், "விபின் பாபு உன்னை ஏன் விரட்டி விட்டான்? அவனது கோபம் தணிந்து விட்டதா?" என்றான்.

சாவித்திரி இதற்கும் ஒன்றும் பேசவில்லை.

திடீரென சதீஷிற்கு, பிஹாரியின் வேண்டுகோள், ஞாபகத்திற்கு வந்தது. "என்ன, பிச்சை வேண்டுமா? முப்பது ரூபாய் தானே?" என்றான்.

சாவித்திரி குனிந்திருந்த தலையை ஆம் என்பதற்கு அடையாளமாக அசைத்தாள். வாய் திறந்து ஒன்றும் கூறவில்லை.

"சரி" எனக் கூறிவிட்டு பெட்டியருகில் போய் நின்று கொண்டு நாற்புறமும் பார்த்தான்.

இதற்கு முன் ஆனந்தத்தை அளித்த அந்த வீட்டின் அலங்காரங்களெல்லாம் இப்போது வேதனையை அளித்தன. அருகிலிருந்த படுக்கை கூட அவள் கையால் விரித்ததுதான். ஸ்டேஷன் போவதற்குமுன் இதன் மேல் படுத்து சிறிது நேரம் இளைப்பாறிக் கொண்டிருந்தான். இது நினைவிற்கு வரவே மிகுந்த அருவெறுப்பாக இருந்தது. அவசர அவசரமாகப் பெட்டியைத் திறந்து கை நிறைய நோட்டுகளை எடுத்து அவள் காலடியில் வீசி எறிந்து விட்டு, "போ, இதை எடுத்துக் கொண்டு போ. இனி எப்போதும் வரக் கூடாது!" என்றான் சதீஷ்.

சாவித்திரி அவைகளில் மூன்று நோட்டுக்களை மட்டும் எடுத்துக் கொண்டாள். இது வரையிலும் சதீஷ் மௌனமாகப் பார்த்துக் கொண்டிருந்தான். சாவித்திரி எழுந்து நின்றதும் அவளிடம் என்னமோ சொல்ல வேண்டும் போலிருந்தது. ஆனால் திடீரென அவனது தொண்டை அடைத்துக் கொண்டது. வாயிலிருந்து வார்த்தைகள் வெளி வரவில்லை.

ஐயோ பாவம்! இவளைப் பற்றி அவனுக்கு ஒன்றுமே தெரியாது. கோடை காலத்திலே மிக்க கடூரமாக அடிக்கும் வெயிலால் கண்ணுக்குத் தெரியாமல் நீராவி ஆகாயத்தில் மேகமாக மாறி குளிர்ந்த மழைத் தாரையாகப் பூமியில் பொழிந்து தள்ளுகிறது. அம்மாதிரியே அவனுடைய கொடூரமான கோபம் அவளைத் தகித்துக் கொண்டிருந்தது. ஆனால் அந்த மேகம் அவனை இம்மாதிரி சூழ்ந்து கொள்ளும் என்பது அவனுக்கே தெரியாது. இவ்விஷயத்தை சதீஷ் நினைத்தது கூட இல்லை. அவனுடைய தொண்டையும், முகமும் கண்களும் எதனாலோ மறைக்கப் பட்டாற்போலிருந்தது. திடீரென அவன், "சாவித்திரி" எனக் கூவினான்.

"ஐயா"

"சகோதர மனிதன் சகோதர மனிதனை வெறுத்தான் என்று கதைகளில் படித்திருக்கிறேன். அப்போதெல்லாம் அவைகளை நான் நம்பியதில்லை. இது வெறும் பொய் என்று தான் எண்ணி வந்தேன். மனிதன் தன் சகோதர மனிதனை எப்படி வெறுக்கக் கூடும்? இதை நான் சிந்தித்ததே யில்லை. ஆனால் இப்போதோ, மனிதனை மனிதன் வெறுக்கக் கூடும் என்பதை உணர்கிறேன்.

சாவித்திரி! நான் சத்தியமாகச் சொல்கிறேன்; நான் இறக்கும் வரையிலும் நீ என் அருகில் வரக் கூடாது.''

சாவித்திரி மௌனமாக இருந்தாள்.

"சரி, சாவித்திரி, நீயே சொல்லு. உலகத்திலே உங்களுக்கெல்லாம் பணத்தை விட மேலானது ஒன்றுமே கிடையாதா? அப்படி ஏதாவது இருந்தால் நீ இந்த நோட்டுகளை ஒருக்காலும் கையால் கூட தொட்டிருக்க மாட்டாய்! இன்று என்னிடம் உள்ள அனைத்தையும் உனக்கே கொடுத்து விடுவேன்; ஆனால் ஒரு விஷயத்தை மட்டும் மறைக்காமல் சொல்லி விடு.''

"கேளுங்கள்.''

"கேட்கிறேன்'' என்று கூறி விட்டு சதீஷ் நிறுத்திக் கொண்டான். சாவித்திரி பொம்மை போல நின்று கொண்டிருந்தாள்.

"கேட்பதற்கே வெட்கமாக இருக்கிறது. இருந்தாலும் கேட்கிறேன்.........சரி, சாவித்திரி! நீ எப்போதாவது யாரையாவது நேசித்ததில்லையா?''

கண நேரம் சாவித்திரி மௌனமாக இருந்தாள். பிறகு, "பிறருடைய விஷயத்தைத் தெரிவதால் உங்களுக்கு என்ன பிரயோசனம்?'' என்றாள்.

"சரி, பிறர் பேச்சை விடு. சொந்த விஷயத்தையே தெரிந்து கொள்ள விரும்பினால்?''

"சொந்த விஷயத்தைத்தான் தெரிந்து என்ன செய்யப் போகிறீர்கள்?''

"என்? சொந்த விஷயத்தைத் தெரியத்தான் வேண்டும்.''

"மனிதனுக்குத் தன்னைப் பற்றி எவ்வளவு தெரியும்? நாளை என்ன நடக்கப் போகிற தென்பது எத்தனை பேருக்குத் தெரியும்?''

"இது உண்மை தான். இருந்தாலும் அனைவரும் அறிந்து கொள்ளத் தான் விரும்புகிறார்கள்.''

சாவித்திரி கதவோரத்தில் போய் நின்று கொண்டு, "விரும்பட்டும். உலகத்தில் உங்களுக்குத் தெரியாமல் எத்தனையோ விஷயங்கள் இருக்கின்றன. இவைகளைத் தெரியாமலேயே உங்கள் வாழ்க்கை கழிந்து போகும்'' என்றாள்.

"ஆம், கழிந்து தான் போகும்'' எனக் கூறிவிட்டு ஒரு பெருமூச்சு விட்டான்.

சாவித்திரி இதைப் பார்த்து நடுங்கினாள். தன் முகத்தை வேறு பக்கம் திருப்பிக் கொண்டாள். அப்போது சதீஷ் நோயில் விழுந்து வாடிப் போன அவள் முகத்தை நன்கு பார்த்தான். உடனே அவன், "உனக்கு உடம்புக்குச் சரியில்லையா, சாவித்திரி?'' என்று கேட்டான்.

"இல்லையே!''

"ரொம்ப துர்பலமாக இருக்கிறாயே?''

ஒன்றும் பேசாமல் சாவித்திரி போவதற்கு அடி எடுத்து வைத்தாள். அவள் மௌனமாகக் கதவுக்கு வெளியில் வந்தாள். ஆனால் அறைக்குள்ளிருந்து ஒரு வேதனை மிகுந்த குரல், "சாவித்திரி என்னை ஒரு நாள் கூட அன்புக் கண்ணால் பார்க்கவில்லை!'' எனப் பிரலாபித்தது.

சாவித்திரி வாசற்படிநிலவில் அப்படியே சாய்ந்து கொண்டாள்.

அவளால் திரும்பிக் கூடப் பார்க்க முடியவில்லை.

உள்ளிருந்து மீண்டும் அக்குரல் ஒலித்தது. "சாவித்திரி! இதைச் சொல்லி விட்டுப் போ! நான் இத்தனை நாளும் தூக்கத் திரையிலா இத்துக்கமனைத்தையும் மறைத்து வருகிறேன்? என் தலைவிதியில் வெறும் தவறுகள் தான் நிறைந்திருக்கின்றனவா? என் இதயத்தில் நிறைந்திருக்கும் வேதனையும் தவறு தானா? பொய் தானா? ஏமாற்றுத் தானா?"

சாவித்திரி கொஞ்ச நேரம் யோசித்துக் கொண்டிருந்தாள். பிறகு திரும்பி வந்து "சதீஷ் பாபு, நீங்கள் என்ன சொல்லுகிறீர்கள்? நான் பெரிய துன்பத்திற்காளாகி பிஹாரியிடம் கடன் கேட்க வந்தேன். இம்மாதிரி சண்டையில் வந்து மாட்டிக் கொள்வேன் என்று தெரிந்திருந்தால் நான் வந்திருக்க மாட்டேன்" என்றாள்.

சதீஷ் பேசாமலிருந்தான். சாவித்திரியின் குரல் மிருதுவாகத் தானிருந்தது. ஆனால் அதில் இனிமையில்லை. சிறிது நேரத்திற்கு முன்பும் இந்த இனிய குரலில் எஜமானனிடம் யாசிக்கவில்லை.

"என்னை வெறுக்கிறேன் என்று நீங்கள் சத்தியம் செய்கிறீர்கள். அப்புறம் நான் என்ன செய்யட்டும்? நீங்களே சொல்லுங்கள். உங்களுக்கு மகிழ்ச்சி ஏற்பட்டால் மறுபடியும் காதலித்தாலும் காதலிப்பீர்கள். கோபம் ஏற்பட்டால் வெறுக்கக் கூடும். நீங்களெல்லாம் அப்படித்தான் செய்து வருகிறீர்கள். ஆனால் எங்கள் கைகால்கள் எல்லாம் கட்டப்பட்டிருக்கின்றன. அடிமைத் தொழில் புரிந்தாலும் வயிறு நிறைவதில்லை. ஆகையால் வயிறு நிரப்பும் தொழிலெல்லாம் செய்ய வேண்டியிருக்கிறது. எப்போது இந்த வழியில் அடி எடுத்து வைத்து விட்டேனோ, பிறகு இந்த வழியில் செல்வதை விட வேறு உபாயம் கிடையாது."

சதீஷின் உள்ளக் கொதிப்பை சாவித்திரியின் ஒவ்வொரு பேச்சும் ஆற்றிக் கொண்டு வந்தது. அவன் கண்களை நன்கு திறந்து சாவித்திரியைப் பார்த்தான். அவள் பேசியதனைத்தையும் புரிந்து கொண்டானா இல்லையா என்பது கூட சாவித்திரிக்குத் தெரியாது.

சாவித்திரிக்கு இந்நிலை சற்றும் சகிக்கக் கூடியதாயில்லை. அவள் வேறு பக்கம் முகத்தைத் திருப்பிக் கொண்டாள். அவள் பேசிய பேச்சுக்களே அவள் இதயத்தைத் துளைத்தன. இருந்தாலும் கீழே சாயும் முன் சதீஷைப் பார்த்து, "ஒரு நாள் உங்களைக் காதலித்தது உண்டா இல்லையா என்று கேட்கிறீர்கள். நீங்களே சொல்லுங்கள்; அந்த விடுதியிலிருக்கும் போது நீங்கள் பல விதத்தில் எனக்குப் பணம் கொடுக்கலையா? நானும் எல்லோரைக் காட்டிலும் உங்களுக்கு அதிகமாகப் பணிவிடை செய்யவில்லையா? நீங்கள் இதை ஒத்துக்கொள்ளாமல் போகலாம். நீங்கள் மறந்து கூட இருக்கலாம். ஆனால் பிஹாரி இருக்கிறான், இதற்குச் சாக்ஷியாக. வேலைக்கு வைத்துக் கொள்பவர்களுக்கு நாங்கள் சேவை செய்வோம். நீங்கள் இங்கு இடம் கொடுத்தால் அப்படியே செய்வேன். நானும் இப்போது வேலையில்லாமல்தான் இருக்கிறேன். உங்களுக்கு விருப்பமானால் நாளையிலிருந்தே இங்கு வேலைக்கு வருகிறேன். நீங்கள் இடம் கொடுத்தால் உங்களைப்

பழையபடியே நேசிப்பேன்." என்ருள்.

சதீஷின் இரு காதுகளிலும் இவ்வார்த்தைகள் ஒலித்துக் கொண்டிருந்தன. அவளை ஒரு முறை நன்கு பார்க்க முயற்சித்தான். ஆனால் கண்களுக்குத் திரையிட்டது போலிருந்தது. சாவித்திரி கதவருகில் வெளிச்சத்தில் நின்று கொண்டிருந்தாள். அவளுடைய உடல் பூதாகாரமாகத் தோற்றமளித்தது. அவன் முகத்தை வேறு பக்கம் திருப்பிக் கொண்டு, "போ" என்ருன்.

சாவித்திரி வாயற்படியில் சிரம் வைத்து வணங்கி விட்டு மௌனமாகச் சென்று விட்டாள். சதீஷ் இதைப் பார்க்கவில்லை. அவன் அவளுடைய மிருதுவான கடைசிக் காலடி ஓசையைத் தான் கேட்டான்.

ஃ ஃ ஃ

கீழே பிஹாரி அறையில் ஒரு விளக்கு மங்கலாக எரிந்துகொண்டிருந்தது. அந்த அறைக்குள் சாவித்திரி தள்ளாடிக் கொண்டே வந்து சேர்ந்தாள். எதையோ பிடிப்பவள் போல் இரு கைகளையும் நீட்டினள். ஆனல் ஒன்றும் அகப்படவில்லை. முகத்தை மறைத்துக்கொண்டு மூர்ச்சை அடைந்து தரையில் திடீரென வீழ்ந்தாள்.

பிஹாரி, உபேந்திரனுடன் சிறிது தூரம் சென்று ஜோதிஷ் வீட்டிற்கு வழி காண்பித்து விட்டு திரும்பினன். அவனுக்குச் சாவித்திரியின் கடைசி வார்த்தைகள் தான் காதில் விழுந்தன. இன்று முழுதும் அவ்விடம் பிஹாரி எவ்வளவு பேசியிருக்கிருள்! இதயமற்ற ஒருவன் வீட்டிற்கு வேலைக்குப்போய் தான் பட்ட கஷ்டங்கள், நோய் வந்ததால் அவள் அடைந்த துன்பங்கள் முதலியவைகளை எல்லாம் அவள் சொல்லக் கேட்டு பிஹாரி மிகுந்த வருத்தப்பட்டான். ஆனல் சதீஷிடம் அவள் உண்மையை மறைத்தாள் என்பது அவனுக்குப் புரியவில்லை. சாவித்திரி கீழே இறங்கியதும் பிஹாரியும் யார் கண்ணிலும் படாமல் கீழே வந்தான். கீழே சாவித்திரியைக் காணமல் தெருவிற்கு ஓடிப் போய்ப் பார்த்தான். அவளை அங்கேயும் காணமல் வீட்டிற்குள் நுழைந்ததும் திடுக்கிட்டு நின்று விட்டான். மிகுந்த ஜாக்கிரதையுடன் அருகில் சென்று விளக்கை உயர்த்திப் பிடித்துப் பார்த்தான். சாவித்திரியின் முகத்தருகில் உட்காந்து கொண்டு, "அம்மா, சாவித்திரி! வெறுந் தரையில் ஏன் படுத்துக் கொண்டிருக்கிருய்?" என்று கேட்டான்.

பதில் வராமல்ப் போகவே மிகுந்த வூஞ்சையுடன், "உடம்புக்கே சரியில்லையே. ஈரத்தரை உடம்புக்கு இன்னும் ஏதாவது செய்து விடும்! எழுந்து உட்கார்; பாய் விரித்துத் தருகிறேன்." என்ருன்.

சாவித்திரி அப்படியே படுத்துக் கொண்டிருந்தாள்.

பிஹாரி திகிலடைந்தான். அவனுக்கு என்னமோ ஒன்றும் படவில்லை. தீபத்தை எடுத்து முகத்தருகில் பிடித்துப் பார்த்ததும் கூக்குரலிட்டான், "ஐயோ! அம்மா நீ இப்படியா செய்து கொள்வது?" என்ருன். சாவித்திரியின் கண்கள் மூடியிருந்தன; முகம் கறுத்துப் போயிருந்தது. இந்தக் கூச்சலுக்கும் அவள் அசையாமல் படுத்துக் கொண்டிருந்தாள்.

மேல் அறையில் சதீஷ் கற்சிலை போல உட்கார்ந்துகொண்டிருந்

தான். அவனும் இந்தச் சத்தத்தைக் கேட்டுத் திடுக்கிட்டான். சமையல்க்காரனும் ஓடி வந்தான். பிஹாரி அழுது கொண்டே, "நின்று கொண்டிருக்காதே. ஐயாவுக்குத் தகவல் கொடு" என்ருன்.

அவன் ஓடிப் போய் சதீஷிடம், "அம்மா இறந்து விட்டாள்......" என்ருன்.

"இறந்து விட்டாளா? என்னடா?"

"ஆமாம்."

சதீஷ், பிஹாரி அறைக்குள் நுழைந்து முழங்காலை ஊன்றி உட்கார்ந்து கொண்டான். முகத்தருகில் விளக்கைப் பிடித்துப் பார்த்த பிறகு தான் அவனுக்கு உயிர் வந்தது. அவள் மூர்ச்சை அடைந்திருக்கிருள் என்பதைத் தெரிந்து கொண்டான். அவன் சற்று விலகி, "கூச்சல் போடாதே பிஹாரி! முகத்தில் தண்ணீரைத் தெளித்து ஒரு விசிறி கொண்டு வந்து வீசு." என்ருன்.

பிஹாரி தண்ணீரைத் தெளித்தான். சமையல்காரன் வீசினுன்.

சிறிது நேரத்திற்குள் சாவித்திரி கண் விழித்துப் பார்த்து எழுந்து உட்கார்ந்து கொண்டாள்.

சதீஷ், "கொஞ்சம் சூடான பால் கொண்டுவா, பிஹாரி! ஈரத் துணிகளை மாற்றச் சொல்லு." என்ருன்.

சமையல்காரன் பால் கொண்டு வரப் போய்விட்டான். பிஹாரி மெதுவாகச் சாவித்திரியை ஈரத் துணிகளை மாற்றச் சொன்னுன்.

சிறிது நேரம் பேசாமலிருந்து விட்டு, மறுபடியும் சதீஷ், "உடம்பு குணமானதற் கப்புறம் எங்கே போக வேண்டுமென்று கேட்டு ஒரு வண்டி வைத்து அனுப்பிவிடு. இனி நடந்து போக வேண்டாம்." என்ருன்.

சாவித்திரியின் உடல் நடுங்கியது. அந்த மங்கிய வெளிச்சத்தில் யாரும் அதைக் கவனிக்கவில்லை. அவள் தன்னைத் தேற்றிக் கொள்ளப் பெரிதும் முயன்ருள்.

சிறிது நேரம் கழித்து சதீஷ் மறுபடியும், "உடம்புக்கு நன்ருயில்லாவிட்டல் என் படுக்கையில் படுத்துக்கொள்ளச் சொல்லு. நான் வேறு இடத்திற்குப் போகிறேன்." என்ருன்.

சாவித்திரி மறுபடியும் நடுங்கினுள். என்னமோ விவரிக்க முடியாத ஒரு உணர்ச்சி, உள்ளத்திலே எழுந்தது.

சதீஷ் ஒரு சிறிய சாவியை பிஹாரிக்கு முன் வீசி விட்டு, "இதோ பார், பெட்டிச் சாவியைக் கொடுத்து விடு. போகும் போது தேவையான பணத்தை எடுத்துக் கொண்டு போகச் சொல்லு." என்ருன்.

சாவித்திரியின் தேகம் நோயால் மிகவும் மெலிந்து போயிருந்தது. அதோடு சதீஷின் வார்த்தைகள் வேறு அவளைத் தாக்கி திக்கு முக்காடச் செய்தன. அவள் பதுமை போல உட்கார்ந்து கொண்டிருந்தாள். சதீஷ் மீண்டும், "நான் பதரியா கட்டத்திற்குச் செல்கிறேன். பிஹாரி! நாளை கொஞ்சம் நேரங்கழித்துத் தான் வருவேன்." என்று கூறி விட்டு ஒரு அடி எடுத்து முன் வைத்த பின், "ஒன்றும் வெட்கப் படவேண்டியதில்லை. வேண்டியதை எடுத்துக் கொண்டு போகச் சொல்லு" என்ருன்.

சதீஷ் சென்று விட்டான்.

சாவித்திரி தலையை மேலே உயர்த்திப் பார்த்து விட்டு மூர்ச்சித்துக் கீழே சாய்ந்தாள். பிறகு மனம் திறந்து, "ஐயோ! இந்தப் பாவியை ஏன் இப்படிக் காதலித்தாய்? இப்போது தானே உன்னை வெறுக்கிறேன் என்று சத்தியம் செய்தாயே! இது தான் வெறுப்பதா? எனக்கு விளைவித்த துக்கமும், அபத்தச் சொல்லும் உனது அன்பு நீர் பட்டு புனித மடைந்து விட்டதா? என்ன செய்தால் உனது வெறுப்பைச் சம்பாதிக்கலாம் என்று யார் எனக்குச் சொல்லுவார்கள்?" என்று புலம்பினாள்.

பிஹாரிக்கு இது ஒன்றும் புரியவில்லை. சிறிது அருகில் வந்து ஆறுதலாக "அம்மா, நீ ஐயாவிடம் இவ்வளவு பொய் எதற்காகச் சொன்னாய்? போகாத இடத்திற்குப் போனதாகவும், செய்யாத குற்றத்தைச் செய்ததாகவும் நீ ஏன் ஒத்துக் கொண்டாய்?" என்றான்.

சாவித்திரி அழுது கொண்டு "தர்மத்திற்குத் தெரியும் பிஹாரி, நான் சொல்லியதெல்லாம் பொய் என்று. சொல்லும்போதே என் நெஞ்சு பிளந்து விடும் போலிருந்தது. இருந்தாலும் சொல்லி விட்டேன். பொய் சொல்லியதால் ஒன்றும் கெட்டுவிடவில்லை பிஹாரி" என்றாள்.

பிஹாரி ஆச்சரியத்துடன் "பொய் சொல்வதால் என்ன காரியம் ஆகும்?" என்றான்.

சாவித்திரி, "உனக்கு நன்றாகத் தெரியுமா, பிஹாரி, பொய் கூறுவதால் ஒரு காரியமும் ஆகாதென்று?" என்றாள்.

பிஹாரி சிறிது நேரம் யோசித்து விட்டு "ஆகாமல் என்ன? கச்சேரியில் பொய் சொன்னால்தான் காரியம் ஆகும். அங்கு பொய் தான் வெற்றி யளிக்கும்." என்றான்.

சாவித்திரி ஒன்றும் பேசவில்லை. வெகு நேரம் வரையிலும் பேசாமலிருந்துவிட்டு "நான் ஏன் பொய் சொன்னேன் என்பது ஒரு நாளைக்கு உனக்கு விளங்கும். சரி, அது போகட்டும் பிஹாரி, நான் சொல்வதைக் கேட்பாயா?" என்றாள்.

"கேட்கிறேன், என்ன விஷயம்?"

"நான் போன பிறகும் நீ ஐயாவிடம் நான் கூறியதெல்லாம் பொய் என்பதைத் தெரிவிக்கக் கூடாது."

பிஹாரி மௌனமாக இருந்தான். சாவித்திரி "இன்னொரு விஷயம் கேள். எனது விலாசத்தை உனக்கு எழுதுகிறேன். என்றைக்காவது நான் வேண்டியிருந்தால் எழுது. உன்னிடம் கூறுவதில் எனக்கு ஒன்றும் வெட்கம் இல்லை பிஹாரி! என்னைத் தவிர இந்த உலகத்தில் வேறு யாருமே இவரை வசத்திற்குக் கொண்டுவர முடியாது. ஆபத்துக் காலத்தில் என்னைத் தவிர வேறு யாரும் இவருக்குப் பணிவிடை செய்ய முடியாது." என்றாள்.

பிஹாரி அழத் தொடங்கினான். அவன் கண்ணைத் துடைத்துக் கொண்டு "எனக்கு எல்லாம் தெரிகிறது" என்றான்.

சாவித்திரி எழுந்து நின்று கொண்டாள். "சரி, நான் போகிறேன். அவரை உன் கையில்

ஒப்படைத்துப் போகிறேன். பார் பிஹாரி! இந்த இரண்டு விஷயத்தையும் ஞாபகத்தில் வைத்துக் கொள். ஆண்டவன் உன்னைக் கைவிட மாட்டார். இந்த முகத்தை வைத்துக் கொண்டு இனி எப்போதும் உங்கள் முன்னால் வராமலிருக்க வேண்டும்'' என்று கூறிவிட்டுக் கண்ணீரைத் துடைத்துக் கொண்டே நடந்தாள்.

தெருவிற்கு வந்து ஒரு வாடகை வண்டியில் சாவித்திரியை உட்கார வைத்துவிட்டு பிஹாரி வணங்கினான். பிறகு கண்ணீரைத் துடைத்துக் கொண்டு "அம்மா, நானும் உன்னை ஒன்று கேட்டுக் கொள்கிறேன். இன்று எப்படி என்னைத் தேடி வந்தாயோ, அப்படியே அவசியம் ஏற்படும் போது என்னை நினைத்துக் கொள்.'' என்றான்.

"அவசியம் அப்படியே செய்வேன்.'' என்றாள் சாவித்திரி.

வண்டி வேகமாகச் சென்றது. பிஹாரிக்குத் துக்கம் தொண்டையை அடைத்துக் கொண்டது. அவன் மறுபடியும் ஒரு முறை அவள் போன திசையை நோக்கி வணங்கினான். பிறகு மேல் வேஷ்டியால் கண்ணீரைத் துடைத்துக் கொண்டு அவசர அவசரமாக வீடு திரும்பினான்.

அத்தியாயம் இருபத்திரண்டு

"பதரியா கட்டத்திற்குப் போகிறேன்'' என்று கூறி விட்டு சதீஷ் இரவு பதினோரு மணிக்கு வீட்டிற்கு வெளியில் வந்து நின்று கொண்டான். சிறிது தூரம் சென்ற பிறகு அவனுக்குத் திடீரென ஒரு யோசனை உதித்தது. எங்காவது சிறிது உட்கார்ந்தாலோ அல்லது படுத்தாலோ சிறிது நிம்மதி ஏற்படும் என்று பட்டது. அடி எடுத்து வைப்பது சிரமமாயிருந்தது. உடம்பைத் தூக்கிக் கொண்டு அவனால் நடக்க முடியவில்லை. இன்று இவ்வளவு களைப்பு எங்கிருந்து வந்தது என்பதே அவனுக்குத் தெரியவில்லை.

ரொம்ப நாளைக்கு முன் ஒரு இரவில் இதே மாதிரி ஒரு சம்பவம் நடந்தது ஞாபகத்திற்கு வந்தது. பிஹாரி, சாவித்திரியைத் தேடிக் கொண்டு மோக்ஷதா வீட்டிற்குப் போய் வந்து 'அவள் விபின்பாபு வீட்டிற்குப் போய் விட்டாள்' என்று சொல்லிய அன்று இரவும் சதீஷ் இம்மாதிரியே கலவர மடைந்தான். அவனது உடலை எரித்துக் கொண்டிருக்கும் இந்த நெருப்பு, நக்ஷத்திரங்கள் பதித்த வானக் கண்ணாடிக்குக் கீழ் நிசப்தமான இந்தக் குளிர்ச்சியான இரவிலே தணியாமல் பின் எப்போது தான் தணியப் போகிறது?

சாவித்திரி இன்று சதீஷ் வீட்டில் இருக்கிறாள். இவன் வசம் இருக்கிறாள். அவளை யாரும் வைத்துக் கொள்வார் இல்லை. வேறு வழியின்றி இருக்கிறாள். இன்று இஷ்டப்படி நடக்கலாம். ஆனால் ஒன்றும் செய்ய முடியவில்லை. அவனுடைய உள்ளம் ஏன் இப்படி வெம்பி வெதும்புகிறது?

ஒரு வாடகை வண்டி போய்க் கொண்டிருந்தது. வண்டியைக் கூப்பிட்டு "பதரியா கட்டத்திற்கு வருகிறாயா?'' என்றான்.

"சரி போகலாம்" எனக் கூறி விட்டு வண்டியை நிறுத்தி சதீஷ் முகத்தைப் பார்த்தான். உடனே அவன் குடித்திருக்கிருன் என்று நினைத்துக் கொண்டு "ரொம்ப தூரம் போக வேண்டும். மூன்று ரூபாய் தர வேண்டும்" என்ருன்.

"சரி" என்று வண்டியில் ஏறி ஒரு மூலையில் உட்கார்ந்து கொண்டு கண்ணை மூடிக் கொண்டான். அவனுடைய களைப்பிஞல் வண்டிக்காரன் கேட்ட வாடகையைப் பற்றிக்கூட ஆச்சரியப் பட முடியவில்லை.

இந்தக் களைப்பு மனக் களைப்பு. இத்தனை நாளும் இதயத்தில் நிறைந்து பருத்திருந்த வேதனையை சாவித்திரி நேரில் வந்து கீறி விட்டு விட்டாள். அதனுல் வேதனை, வெள்ளம்போல் உள்ளத்தில் ஓடிக்கொண்டிருந்தது. சதீஷால் தூங்கவும் முடியவில்லை. சாவித்திரியின் வார்த்தைகள் நினைவிற்கு வந்தன. அது வாஸ்தவம் தான். அவளுடைய புலன்கள் எல்லாம் அடக்கப்பட்டிருந்தன. இது அவளுடைய தொழில்—பிழைக்கும் வழி. நம்மைப்போல வெறுக்கவோ நேசிக்கவோ அவர்களுக்கு உரிமை எது? சுகபோகங்களை முக்கியமாகக் கொண்டு திரியும் இந்த வெளி உலகத்திடமிருந்து சோறு, துணி, பசி, தாகம் முதலியவைகளைப் பெற்றுக் கொண்டு அதனிடமே எப்படி அதிருப்தியை வெளிக்குக் காட்ட முடியும்? வாழ்வதற்கு ஏதாவது செய்துதானே ஆகவேண்டும்? எனது அன்பு வெள்ளத்திலே சாவித்திரி என் ஆசை அபிலாஷைகளுடன் மூழ்க வேண்டும்? விபினுடைய நிலைமை அவளுக்கு நன்கு தெரியும். அவளைப் போன்ற பெண்களின் பொறுப்பை ஏற்பதற்குத் தகுந்த யோக்யதை அவனிடம் நிறைந்திருக்கிறது. இது சாவித்திரிக்கு நன்கு தெரியும்.

"இந்த வழியில் எப்போது அடி எடுத்து வைத்து விட்டார்களோ, பின் நல்லதோ கெட்டதோ எப்படியானுலும் இதே வழியில் தானே போயாக வேண்டும்? இனி அவளுக்கு வேறு வழி இல்லை" என்று சொல்லிக் கொண்டான். ஆமாம்! என்னிட மிருந்து இரண்டு காசு அதிகமாகக் கிடைத்த வரையிலும் என்னிடமிருந்தாள். இந்த விஷயத்தை மறந்துவிட முடியாது. இதை அவளும் ஒளிக்க மாட்டாள். பிஹாரி இதற்கு சாக்ஷி.

ஒவ்வொன்ருக எல்லா விஷயங்களும் பளிங்கு போல நன்கு தெரிந்தது. அவன் காதில் யாரோ "இது சரிதான்! இது சரிதான்" என்று சொல்வது போலிருந்தது. இதைத்தவிர வேறு விதமாக நினைப்பதற்கு வழியேயில்லை.

அதற்கப்புறம் அவனுடைய அபூர்வ மூளையிலே அவளைப் பற்றி எத்தனையோ யோசனைகள் உதித்தன.

நாடகத்திலே ஒரு நாள் ஒரு மனிதன் சீதையின் நடிப்பை உண்மை என நம்பி கூக்குரலிட்டான். இதைக் கண்டு எவ்வளவு பேர் சிரித்தார்கள்! ஒரு நாள் 'மேஜிக்' பார்க்கச் சென்றிருந்தான். அங்கு வித்தைக்காரன் சர்க்கரை என்று சொல்லி ஒருவனுக்கு மணலைக் கொடுத்தான். தின்றவனைப் பார்த்து எல்லோரும் சிரித்தார்கள். இவைகள் எல்லாம் ஞாபகத்திற்கு வந்தன. வெறுப்பிஞல் அவனது உடம்பு சிலிர்த்தது. அவன் நேராக நிமிர்ந்து உட்கார்ந்து கொண்டு, "ச்சீ, ச்சீ!

எனது கெட்ட காலத்தைக் குறித்து விபினும், சாவித்திரியும் பக்கம் பக்கமாக உட்கார்ந்து எப்படியெல்லாம் சிரிப்பார்களோ!'' என்றான்.

காதலர்களுக்குள் சச்சரவு உண்டானல் சிறிது காலம் பிரிந்திருந்தால் காதல் பலப்படும் என்று எங்கோ படித்திருந்தான். சாவித்திரி இன்று அதே காரணத்தால் தான் வந்தாள். இதில் அவளுக்குத் துளிகூடச் சந்தேகமில்லை. ஆனல் சதீஷிற்கோ, தனது தோளின் மேல் காலை வைத்து சாவித்திரி விபினிடம் இன்னும் ஒரு அடி உயரப் போய் விட்டாள் என்று தோன்றியது.

“ஐயா, வீட்டு நெம்பர் என்ன?'' என்று வண்டிக்காரன் கேட்டான்.

சதீஷ் கண்ணைத் திறந்து எழுந்து உட்கார்ந்தான். பிறகு படுத்துக் கொண்டு, “கங்கைக் கரைக்கு விடு'' என்றான்.

வண்டிக்காரன் வண்டியை நிறுத்தி இறங்கிக் கொண்டு, “எஜமான்! நீங்கள் போதையில் இருக்கிறீர்கள். என் பேச்சைக் கேளுங்கள். வீட்டிற்குப் போங்கள்'' என்றான்.

சதீஷ் எழுந்து உட்கார்ந்து கொண்டு, “ போதையாக இருக்கிறேன? சரி, சாராயம் எங்கு கிடைக்கும், உனக்குத் தெரியுமா? '' என்றான்.

வண்டிக்காரன் பிறகு சிறிது நேரம் பார்த்துக் கொண்டிருந்தான். கடைசியாக, “எங்கு போக வேண்டும்? ஆனல் விலை அதிகமாகக் கொடுக்க வேண்டும். மணி பனிரண்டாகி விட்டது'' என்றான்.

சதீஷ் பேசாமல் அவனிடம் ஒரு நோட்டைக் கொடுத்து விட்டு வண்டியில் உட்கார்ந்து கொண்டான். சிறிது நேரத்திற்குள் வண்டிக்காரன் ஒரு பாட்டலுடன் திரும்பி வந்தான். மீதி ரூபாயையும் பாட்டலையும் கொடுத்து விட்டு, “எங்கே போக வேண்டும்? '' என்றான்.

“எங்கு போகட்டும்? நீயே சொல்'' என்றான் சதீஷ்.

இந்தத் தடவை வண்டிக்காரன் காதருகில் வந்து, “எஜமான் நீங்கள் பெரிய மனிதர். பணமெல்லாம் பாழாகி விடும். வீட்டிற்குத் திரும்பிப் போங்கள்'' என்றான்.

“சரி'' என்று அவன் கூறியதற்கு இணங்கி விட்டான். பாட்டலை மடியில் வைத்துக் கொண்டு வண்டியில் படுத்துக்கொண்டான்.

ஒரு அபலை இன்னும் தெருவில் நின்று எதிர் பார்த்துக் கொண்டிருந்தாள். வண்டி திரும்பும் போது அவள் மேல் சதீஷின் பார்வை பட்டது. பார்வை பட்டதும் அவன் தேகம் நடுங்கியது.

ஒரு மனிதனைப் பார்த்து இன்னெரு மனிதன் தேகம் வெறுப்பால் நடுங்கியது. இதற்கு முன் சதீஷிற்கு இம்மாதிரி அனுபவம் ஏற்பட்டதே கிடையாது.

வண்டிக்காரன் பாட்டலைத் திறந்து கொடுத்தான். சாராய வாசனை 'கம்' மென எழுந்தது. வண்டியிலேயே குடித்து விடலாம் என விரும்பினன். ஆனல் இம்மாதிரி வண்டியில் சாராயம் குடித்த ஒருவன் இறந்து விட்டதாகக் கேள்விப் பட்டிருந்தான். ஆகையால் சீக்கிரமாக வீடு சேருவதற்கு வண்டிக் காரனிடம் வண்டியை வேகமாக ஓட்டச் சொன்னன்.

(தொடரும்)

பிரயாணம்

[கௌசல்யா]

1

கோவை
15—8...

அன்புள்ள கனகம்,

உன் அளவு கடந்த அன்புப் பெருக்கால் உருப்பெற்ற கடிதம் கிடைத்தது. கடிதத்தை இது வரைக்கும் குறைந்தது பத்துத் தடவையாவது படித்திருப்பேன். இன்னும் படிக்கப் போகிறேன்.

'அவரை' ப்பற்றிக் கேட்டிருக்கிருய். நீ கேட்க வேண்டியது தான். அப்படி உரிமையுடன் கேட்கக் கூடியவர்கள் உன்னைத்தவிர எனக்கு வேறு யார் இருக்கிருர்கள்? உயிர்த் தோழி நீ ஒருவள் இருப்பதனல்த்தான் என் இன்ப துன்பங்களையெல்லாம் நேரடியாக வாய் விட்டுச் சொல்ல முடியாவிட்டாலும், கடிதத்திலாவது எழுதியனுப்பி மன நிம்மதியடைய முடிகிறது. இதோ விஷயத்திற்கு வந்து விடுகிறேன். 'அவர்'பிரதி தினமும் நாங்கள் குடியிருக்கும் வீட்டிற்கு வருவது என்னவோ தவறுவதில்லை. ஆனல் வந்து என்ன பலன்? இரவு பனிரெண்டு ஒருமணி வரையிலும் நண்பர்களுடன் பேசிக்கொண்டிருப்பார். அரிசி ரேஷனிலிருந்து அஹிம்சை வரை எல்லா விஷயங்களும் அடிபடுகின்றன. ஆனல் என் மனத்துடிப்பு அவர்களுக்கு எப்படித் தெரியும்? ஏன்? அவருக்குக் கூட நான் ஒருத்தி இங்கே இருக்கிறேன் என்பது நினைவில் இருக்கிறதோ என்னவோ?...

இந்த நிலைமையில் நானும் என் பெற்ருேரும் அவரைப் பற்றி எண்ணுவதில் என்ன பயன்? முடவன் கொம்புத்தேனுக்கு ஆசைப்பட்ட கதை தான். ஆயினும் நான் அவரைக் காணும் போதும், அவர் காலடிச் சத்தத்தைக் கேட்கும் போதும், 'கல கல' வென்று வாய் விட்டுச் சிரிக்கும் போதும், என் மனத்தில் எழும் இன்ப வேட்கையைத் தணிக்க முடிவதில்லை.

இரவில், இழுத்துக் கட்டிய திரைக்குப் பின்னல் நான் படுத்துக் கொண்டிருப்பேன், தூங்குவதற்காகத்தான்! ஆனல் தூக்கம் ஏது? அவரும் அவருடைய நண்பர்களும் எதிர்ப்பக்கமுள்ள கூடத்தில் வழக்கம் போலப் பேசிக் கொண்டிருப்பார்கள். அவர் எழுந்து போகும் வரையிலும் நான் மது வுண்ட வண்டு போல் மயங்கிக் கிடப்பேன்.

சில சமயங்களில் என் தங்கை ஜயம் அவர் உட்காருவதைப் போலவும், பேசுவதைப் போலவும் நடித்துக் காட்டுவாள். ஆர்வம் நிறைந்த கண்களுடன் நான் பார்ப்பேன். என் தாய்க்கும் வெகு ஆசை தான்.

"என் மகளுக்கு இதுபோல் ஒரு புருஷன் கிடைத்தால் எவ்வளவு நன்ருக இருக்கும்" என்று சொல்லிக்கொள்வாள்.

திங்கட்கிழமை இரவு, ஜயம் அவரிடம் தைரியமாகப் போனுள்.

தன்னுடைய பாட்டு நோட்டுப் புஸ்தகத்தில் ஒரு நல்ல பாட்டு எழுதிக் கொடுக்கும்படி கேட்டாள். அவர் எழுதிக் கொடுத்தார்.

ஜயம் நான் பூ வேலை செய்த கைக்குட்டையைக் கையில் வைத்திருந்தாள். "இது யார் செய்தது?" என்று அவர் கேட்டார். என் தங்கை என்ன சொன்னளோ என் காதில் விழவில்லை. ஆம்! அவர் எவ்வளவு சமீபத்திலிருக்கிருர். ஆயினும் எனக்கோ அவர் ஆயிரம் மைலுக்கு அப்பாலிருப்பதாகத்தான் தோன்றுகிறது.

நான் பத்து நாளாகப் பள்ளிக்கூடம் போகவில்லை. மற்றபடி என் வாழ்க்கையில் என்ன உண்டு எழுதுவதற்கு?

சுந்தரம் நடக்கிருனு? அவனைப் பார்க்க எனக்கு வெகு ஆவலாக இருக்கிறது. நீ எப்போது இந்தப் பக்கம் வருவாய்?

இப்படிக்கு,
உன் அன்புள்ள லீலா.

2

கோவை
18—8...'

அன்பார்ந்த தோழி,

இந்தக் கடிதம் உனக்கு ஒரு சந்தோஷமான விஷயத்தை ஏந்திக் கொண்டு வருகிறது. எது நான் கை கூடாதென்று ஏங்கினேனே, அது கை கூடுமென்று தோன்றுகிறது. பாலைவனம்போல் வறண்டிருந்த என் வாழ்க்கையில் கடைசியாக இன்ப வெள்ளம் பாயும் காலம் நெருங்குகிறது. என்னுடைய ஆனந்தக் கனவு பூர்த்தியாகப் போகிறது. உரோமபாதரின் வருகையைக் கண்டு "யான் செய்த மாதவமோ?" என்று உள்ளம் பூரித்த தசரதனைப் போல, நான் இன்பவெறி பிடித்து நிற்கிறேன்.

எனக்கே முதலில் நம்ப முடியவில்லை. என் விஷயமாக ஆலோசனை செய்வதாகவும், தமக்குத் தெரிந்த வரையில் ஆட்சேபணை எதுவும் இருக்க முடியாதென்றும் அவர் கூறினராம். நிச்சயம் ஒத்துக் கொள்வார்! அவர் சம்மதித்து விட்டால் அடுத்த மாதமே.........

முதலில் நாங்கள் அவருடைய மனப்பான்மையை நன்ருக உணர்ந்து கொள்ள வில்லை. கல்லூரியிற் படித்துப் பட்டம் பெற்ற ஒருவர் நல்ல பணக்காரர் வீட்டைத்தான் தேடிக்கொண்டிருப்பார் என்று எண்ணினேம். எங்களைப் போன்ற பரம ஏழையின் வீட்டில் மணம் செய்து கொள்ள அவர் இணங்குவாரென்று யார் தான் நினைத்திருப்பார்கள்?

அவர், தம் நண்பர்களுடன் பேசுகையில் அடிக்கடி ஏழை—பணக்காரர் விவகாரத்தைக் குறிப்பிடுவார். உலகத்திலுள்ள தீமைகளுக்கெல்லாம் இந்தத்தவறு பாடே காரணம் என்று அவர் வாதாடுவார். இன்னும்சமூகம் தற்போது அமைந்திருக்கும் நிலைமையில்,பணத்திமிர் பிடித்தவர்கள் வீட்டில் பக்குவ மடைந்த இதயங்களைப் பார்க்க முடியாதென்று அவர் உறுதிகட்டுவார். வறுமைத் தீயில் குளித்துப் புடம் போடப் பெற்ற உள்ளத்தில் தான் அன்பும் ஆதரவும் முழு வளர்ச்சி யடைந்து விகசித மடைதல் சாத்திய மென்று அவர் அடிக்கடி எடுத்துக்காட்டுவார். ஆனல் இது போன்ற பேச்செல்லாம் வெறும் வாயளவில் தான் என்று நாங்கள் நம்பி விட்டோம்.

இன்று காலையில் நான் பள்ளிக்கூடம் போகும் போது அவர் திடீ

ரென்று எதிரில் வந்து சேர்ந்தார். எனக்கு என்ன செய்வதென்று தோன்றவில்லை. ஒரே பாய்ச்சலாக வீட்டிற்குள் ஓடி விடலாமா என்று எண்ணினேன். ஆனால் கால் இணங்கவில்லை. மனம் துடித்தது. என் கைகள் நடுங்கின. பிடித்திருந்த புஸ்தகங்களும் கீழே விழுந்து விடுமோ என்று அச்சமடைந்தேன். வீதியின் ஓரத்தில் ஒதுங்க ஆரம்பித்தவள் திடீரென்று சாக்கடைக்குப் பக்கத்தில் போய் விட்டேன். அதற்குள் அவரும் அருகில் வந்து விட்டார்.

"ஜாக்கிரதை ஜலதாரையில் விழுந்து விடாதே." என்று சொல்லுவார் என்று நினைத்தேன். என் காதுகளில் அந்த வேளை இன்பத் தேன் வந்து பாயுமென்று ஆசை கொண்டேன். ஆனால் பொல்லாதவர் வாயே திறக்கவில்லை. கொஞ்ச தூரம் போனதும் திரும்பிப் பார்க்கலாமென்று ஆசைப் பட்டேன். ஆனால் வெட்கம் என்னை அடிமை கொண்டு விட்டது. குனிந்த தலையுடன் பாடசாலை போய்ச் சேர்ந்தேன்.

பள்ளிக்கூடத்தில் வேலையின் மேல் எண்ணம் செல்லவில்லை. யாருடனாவது விஷயத்தைச் சொல்லாவிட்டால் என் மனம் சந்தோஷத்தினால் உடைந்து விடும் போலிருந்தது. ருக்மணியைத் தேடிச்சென்றேன். ஆனால் விஷயம் அவ்வளவு விரைவில் பரவிவிடும் என்று நான் எதிர்பார்க்கவில்லை. என் சக ஆசிரியையான கமலம் ஏனோ என்னை

வெறித்து வெறித்துப் பார்க்கிருள். என்றுமில்லாத விதத்தில் இன்று அவள் என்னிடம் வந்து கொஞ்சுகிருள். வெளிக்கு அவள் முகம் சிரிப்பைக் காட்டினுலும் அவள் சிந்தையில் கொழுந்து விட்டெரியும் பொருமைத் தீயை நான் அறியாமலில்லை. மரகதமும் அப்படியே. எப்போதும் இவர்கள் இருவரும் ஒரு கட்சியல்லவா? எனக்கு அதிர்ஷ்டம் வந்தால் இவர்களுக்கு என்ன நஷ்டம் வந்து விட்டது? இவர்கள் மனம் கொதித்து என்ன சம்பத்து அடையப்போகிருர்கள்? எவர் எப்படி இருந்தாலும் இனி எனக்கென்ன? நான் செய்த பூஜா பலன் கனவிலும் நினைக்காத பாக்யம் என் வீட்டுத் தலைவாசலுக்கு வந்து நிற்கிறது!

ஜன்னலுக்குப் பக்கத்தில் மங்கிய விளக்கு வெளிச்சத்தில் நான் உனக்கு இந்தக் கடிதத்தை எழுதிக் கொண்டிருக்கிறேன். இதோ அருகில் ஐயம் தூங்குகிருள். நீயும் இந்த நேரம் தோட்டத்து வேப்பங் காற்றை நுகர்ந்து கொண்டு ஆனந்தமாகக் கட்டிலின் மீது நித்ரா தேவிக்கு அடிமையாகிக் கிடப்பாய்.

கடிதத்தை மேலும் எழுத முடியவில்லை. அவர் வந்து விட்டார். அதோ, அவருடைய குரல் கேட்கிறது!

இப்படிக்கு
லீலா

3

அன்புள்ள கனகா,

கைக்கெட்டியது வாய்க்கெட்டவில்லை என்று பழமொழி சொல்லுவார்கள். என்னுடைய கதையும் அந்த ரீதியில் வந்து முடியுமோ என்று நான் கவலைப்படுகிறேன்.

என்னைக் கல்யாணம் செய்து கொள்வதில் அவருக்குத் தடையில்லை யென்பது நிச்சயமாகத் தெரிந்து விட்டது.

ஆனல் அவர் வீட்டில் பெரிய ஆட்சேபம் கிளம்புவதாகத் தோன்றுகிறது. அவருடைய பெற்ருேருக்கு எங்கள் வீடு கொஞ்சமும் பிடிக்கவில்லையாம். ஆயிரக் கணக்கில் பணம் கொடுத்துப் பெண்ணும் கொடுக்க எத்தனையோ பேர் காத்துக்கொண்டிருக்கும் போது இந்தப் பெண்ணை ஏன் விரும்புகிருய் என்று தடை பண்ணுகிருர்களாம். நான் அழகில்லையாம். எங்கள் குடும்பம் ஏழையாம். எங்களுக்குக் கஞ்சிக்கும் வழியில்லையாம். எனக்கு ஒரு பித்தளை நகையும் போட மார்க்கமில்லையாம். இது போல் என்னென்னவோ சொல்லி அவர் மனதை மாற்றப் பார்க்கிருர்கள். என் படிப்பைப் பற்றியும் குணத்தைப்பற்றியும் யார் கவனிக்கிருர்கள்?......

நான் தற்பெருமை பேசவில்லை. அவருடைய குடும்பத்தார் நினைத்துள்ள பெண்களைக் காட்டிலும் சிறந்தவள் என்று சொல்லிக் கொள்ள முடியா விட்டாலும், நிச்சயமாய் அவர்களுக்குச் சமமானவள் என்று சொல்ல முடியும். அவர் வேலை தீர்ந்து மாலையில் வீடு திரும்பும்போது புன்னகை பூத்த இன்முகத்துடன் வரவேற்று என் இன்னிசையால் அவர் இதயத்தை இன்ப ஊற்று ஆக்குவேன்.

அவர் விரும்பிக் கேட்கும் கவிகளைப் பாடி மகிழ வைப்பேன். கம்பனுடைய கங்கைப் படலத்தை வீணையுடன் இணைத்துக் கொஞ்சி அவருக்கு ஆனந்த வெறியூட்டுவேன். இரவு முழுவதும் பேசுவேன். என் மனரதத்தில்

ாண்டு அகில
வருவேன்.
ன இந்த வீண்
ண வேண்டும்?

வர் வழக்கம் போல
பாடம் வந்தார். ஆனல்
முகத்தில் தாண்டவமாடும்
த நல்ல மலர்ச்சியைக்
ணும். வாடிய வதனத்துடன்
ள்ளே நுழைந்தார். பிறகு
வகு நேரம் அவரும் நண்பரும்
னிமையில் பேசிக்கொண்டிருந்
தார்கள். என் விஷயம் தான்
அடிபட்டிருக்க வேண்டும்.

நிற்க, இந்தக் கமலமும், மரகதமும் அவர் மீது இல்லாத பரிதாபம் கொண்டு வருந்துவதுதான் எனக்கு மிகவும் ஆச்சரியத்தைக் கொடுக்கிறது. பொருமையென்ருலோ அதற்கும் காரணமில்லை. அவர் யார்? இவர்கள் யார்? என் மீதுள்ள வெறுப்பே அவர் மீது அனுதாபமாக மாறியிருக்கக் கூடும். அவர்கள் செய்யும் பிரசாரத்துக்கு அளவில்லை. என் மீது வீண் கதைகளை யெல்லாம் கட்டிவிட்டு வேடிக்கை பார்க்கிருர்கள். ஒருக்கால் இதையெல்லாம் கேட்டு அவர் மனம் மாறி விடுவாரோ என்ற பயமும் என்னை வாட்டுகிறது.

கலியாணம் நடக்காவிட்டாலும் போகட்டும். வீண் அபவாதங்களுக்கெல்லாம் நான் ஆளாகாமலிருந்தால் போதும், என்று தான் இப்போது நினைக்கவேண்டியிருக்கிறது.

இந்தக் கடிதத்தைக் கண்டு நீ வருந்துவாய் என்பதை நான் அறியாமலில்லை. ஆயினும் என்ன செய்வது? உன்னைத் தவிர வேறு யாரிடம் நான் இவ்வளவு பகிரங்கமாக என் எண்ணத்தை எடுத்துச் சொல்வேன். நீ மட்டும் எ அருகிலிருந்தால் என் கண்ணீ ஞல் உன்னை நனைத்து உன் அன்புக் கைளின் ஆலிங்கனத்தில் ஆறுதல் பெற்றிருப்பேன்.

வருவது வரட்டும். துக்கத்துக்கும் ஒரு எல்லை யுண்டல்லவா?

இப்படிக்கு
லீலா

4

கோவை
15–9–...'

கனகவல்லி,

* * * நீ கல்யாணத்துக்கு வந்திருந்தால் எவ்வளவு குதூகலமாயிருந்திருப்போம். ஆனல் உனக்கு நேரிட்ட அசந்தர்ப்பங்களை எண்ணியே நான் உன்னை அதிகம் வற்புறுத்த முடியவில்லை.

பழைய விவகாரங்களை ம லாம் நான் மறந்துவிட்டே ஆயினும் கல்யாணத்துக்கு மு ஐந்தாறு தினங்களில் விவாகத்தை எப்படியாவது தடுத்து விட வேண்டுமென்று பலர் பலவிதத்தில் செய்த சூழ்ச்சிகள் மட்டும் அடிக்கடி என் ஞாபகத்துக்கு வருகின்றன. அவர் மாத்திர திட சித்தம் பெற்றிராதிருந்தால், பெரிய விபரீதம் நேர்ந்திருக்கும். எதிர்ப்புகளை யெல்லாம் சகித்தார்; என் மீது சொன்ன எண்ணற்ற பழிகளையும் அவர் லட்சியம் செய்யவில்லை. கல்யாணத்திற்குக் கூட அவர் உறவினர்கள் பலர் வரவில்லை. எங்கள் வீட்டுக்கு வந்தால் அவர்களின் அந்தஸ்து குறைந்து போகுமாம். இதற்கெல்லாம் காரணம் நாங்கள் ஏழை என்பதுதானே! சமூக பொல்லாதது, பணத்துக்

...ிப்புக் கொடுக்கும் மனப்பான் ...மை மாறும் போதுதான் மனித வாழ்க்கை உன்னதமடையு மென்று நீ அடிக்கடி கூறுவதன் உண்மை இப்போதுதான் எனக்கு நன்முக விளங்குகிறது.

தேனில் விஷத்தைக் கலப்பது போல் நான் ஏன் உனக்கு இதை யெல்லாம் இப்போது எழுத வேண்டும்?

"நந்தவனத்தில் மலர் பறித்துக் கொண்டிருந்த போது உன் திரு மணக் கடிதம் கிடைத்தது. மட் டற்ற மகிழ்ச்சி கொண்டேன். மலர் மணம் போல் உன் வாழ்க் கை முழுதும் இன்ப மணம் பரவி அன்பு ஒளி வீசட்டும்" என்று எழுதியிருந்தாயல்லவா? அப்பகுதி யை அப்படியேஎடுத்துக்கண்ணடி போட்டு சுவற்றில் மாட்டியிருக் கிருேம். பிரதி தினமும் ஒரு தர ...து நானும் அவரும் அதைப் ...க்காமல் இருப்பதில்லை.

...ன்புக் கனகா,

மங்கிய நிலவில் மொட்டை மாடியில், நான் இது வரையிலும் 'லைலா மஜ்னூன்' படித்துக் கொண் டிருந்தேன். முன்பே அந்தக் கதையைப்படித்திருக்கிறேன். ஆனால் இப்போது என் அந்த லைலா எனக்கு நவ நவமான உணர்ச்சி யைத் தருகிருள்? எங்கு பார்த்தா லும் இப்போது என் என்புலன்கள் புதுமையைக் காணுகின்றன? மங் கிய நிலவு, மெல்லெனத் தவழ்ந்து வரும் தென்றல், என் கூந்தலி லுள்ள மல்லி... அதோ அந்த... ஊர்ந்து செல்லு... மின்னி மிளிரும்... டம்—எல்லாம் என்... இப்படித் தொடுகின்ற... றலைப் போல், மேகத்தைப்... சர்வ உலகத்தையும் சுற்றி... நான் ஆசைப் படுகிறேன். எ... கூந்தலின் மல்லிகையைப் போ... அவருடைய இதயத்திலே ந... மணம் வீச நான் இச்சை கொ... கிறேன். விண் மீனைப் போல் அவருடைய எண்ணத்திலே ஒளி செய்து நிற்க நான் விரும்பு கிறேன். காதற் சோலையிலே தன்னை மறந்து இன்னிசை பாடும் குயிலைப் போல நான் இன்று இயங்குகிறேன்.

கல்யாணத்துக்குப் பின், நேற் றுத் தான் பள்ளிக்கூடம் போக முடிந்தது. என் மாணவிகள் அனைவரும் என்னிடம் நடந்து கொள்வதே புது மாதிரியாக இருக் கிறது. முன்னெல்லாம் யாராவது பதில் சொல்லத் தயங்கினல், "என்னடி, புதுப் பெண் போலக் குலுங்குகிருய்," என்று நான் வேடிக்கை செய்வேன் அல்லவா? அது போல இப்போது பேச முடி யுமா? மற்றபடி என் பிரயாணம், வாழ்க்கையைத் தான் குறிப்பிடு கிறேன் ஒரே இன்பகரமாய்த் தான் இருக்கிறது.

இப்படிக்கு
உன் அன்புள்ள,
லீலாவதி

★

திருடன்

எம். எஸ். விசாலம்

...யும் நேரம். காத் ...கூ...ம், மிளகாயும், வாங் ...கொண்டு கையில் கொஞ்சம் ...றையுடன் வீடு வந்து சேர்ந் ... அம்மாவின் முந்தானையில் ... முடியைப் பார்த்தான் குப் ... அவளிடம் நெருங்கி வந்து, ...அம்மா அந்தப் பசங்கெல்லாம் ...ாலியாடராங்கம்மா. கோலி ...ங்கத் துட்டுக்கொடம்மா'' என் ...ன். காத்தாயி "நாளைக்கு வாங்க ...ாம்'' என்று சொல்லி விட்டு, அரிசியைத் தண்ணீரில் கொட்டி களைய ஆரம்பித்தாள். குப்பன் அதற்கு மேல் தன் தாயைத் தொந் தரவு செய்யவில்லை. மறு நாள் கொடுப்பதாகச் சொன்னதை நம்பி பேசாமல் இருந்து விட்டான். அன்று இரவு கிழிந்த கோரைப் பாயில் படுத்தவாறு காத்தாயி யோசனையில் ஆழ்ந்தாள்.

மறு நாள் காத்தாயி வேலைக்குப் புறப்படும் பொழுது, அவள் நினை த்த படியே, குப்பன் "எங்கேம்மா துட்டு? இண்ணைக்கு கோலி வாங் கித்தாரேண்ணு சொன்னையே!'' என்று கேட்டான். அவள் மனம் கலங்கிற்று. எதற்காகப் பொய் சொல்லி அவனை ஏமாற்ற வேண்டும்? என்று நினைத்துக் கொண்டவளாய், "குப்பையா'' என்று கூப்பிட்டாள். தாயின் குரலைக் கேட்டு துட்டுத்தான் கொடுக்கப் போகிறுள், என்று சந் தோஷத்தோடு குதித்துக்கொண்டு தாயின் அருகே ஓடி வந்தான் குப் பன். தாயின் பேச்சு அவனைத் திடுக்கிடச் செய்தது. "இப்பொழு தே சொல்லி விடுகிறேன். அந்தப் பணத்துக்கு உப்பும் புளியும் வாங் கணும். சும்மா என்னைத் தொந்த ரவு பண்ணதே'' என்று கூறி விட்டு, மின்னல் வேகத்தில் வெளி யே போய் விட்டாள்.

குப்பனுடைய குழந்தை உள்ளம் எண்ணாத எண்ணமெல்லாம எண் ணிற்று. திடீரென்று அவனுக்கு ஒரு எண்ணம் வந்தது. தனக்குள் ஏதோ முடிவு செய்து கொண்டு விளையாடப் போய் விட்டான். சூரியன் அஸ்தமித்த பிறகு காத்தாயி மெதுவாக உள்ளே வந் தாள். என்றும் போல் அவள் முகம் குதூகலத்தோடு இருக்க வில்லை. மகனிடம் சொன்ன வார்த் தை அவள் மனதை உறுத்திக் கொண்டே இருந்தது. குடிசை யின் வாயிலிலே மகன் நின் கொண்டிருந்தான். என்று போலவே அவன் முகம் இருப்ப தைக் கண்டு, திருப்தி யடைந்தவ ளாய் குடிசைக்குள் சென்றுள்.

நடு நிசி இருக்கும். காத்தாயி வேலை செய்த அலுப்பினுல் குறட் டை விட்டுத் தூங்கிக் கொண்டிருந் தாள். அகல் விளக்கு மங்கலாக எரிந்து கொண்டிருந்தது. ஓசைப் படாமல் எழுந்த குப்பன் முந்தா ணியைத் தேடி முடிச்சைக் கண்டு பிடித்தான். முடிச்சு இறுக்க மாகவே இருந்தது. கஷ்டப்பட்டு வேலை செய்த துட்டு அல்லவா? எவ்வளவோ முயன்று பார்த்தும் குப்பனல் அந்த சிறு முடிச்சை அவிழ்க்க முடிய வில்லை. பளிச் சென்று அவன் மனதில் ஒரு யோ சனை தோன்றியது. கைகளால் அவிழ்ப்பதை விட்டு, பற்களால்

டியை லேசாகக் கடிக்க ஆரம் பித்தான். அவன் தலை காத்தாயின் மீது கொஞ்சம் உராய்ந்தது. காத் தாயி திடுக்கிட்டு விழித்து மகனு டைய செய்கையைக் கண்டாள். அவள் முகம் சி வ ந் து விட்டது. ஒன்றும் சொல்லாமல் திரும்பிப் படுத்துக்கொண்டாள். மகனுக்கு ஒன்றும் தோன்றவில்லை. தான் செய்தது பிசகு என்று அவனுக் குத் தெரிந்தது. ஆனால், அவள் ஒன்றும் சொல்ல வில்லை. தன் படுக்கையில் போய்ப் படுத்துக் கொண்டான் குப்பன்.

மறு நாள் மகன் கையிலிருந்த கோலியைப்பார்த்து, "இது உன க்கு ஏது? எங்கு கிடைத்தது?" என்றாள். குப்பன் சொல்ல கொஞ்சம் கூச்சப் பட்டான். பிறகு உண்மையை சொல்லி விட் டான். அவனுடைய சகா ஒரு வன் ஏமாந்திருந்த சமயம் பார்த்து அதைத் தூக்கிக்கொண்டு வந்து ட்டான். இதைக் கேட்டதும் ாத்தாயி சிரித்தாள்.

"குப்பையா என்னிடமே நீ திருட வந்தாயே! அப்பொழுது, நீ இதில் கூட முட்டாளாய் இருக் கிறாயே என்று வருத்தப்பட்டேன். ஆனால் இப்பொழுது நீ கெட்டிக் காரன் தான்" என்று மகிழ்ச்சி யோடு கூறினாள். குப்பன் காத் தாயின் அணைப்பிலே அடைக்கலம் புகுந்தான்.

●

ஒரு நாள் கோலி விளையாடிக் கொண்டிருந்த குப்பன் தன் தாய் இறந்து விட்டாள் என்ற செய்தி கேட்டு, கோலியைத் தூக்கி எறி ந்து விட்டு குடிசைக்குள் ஓடினான். மழையில் நனைந்ததால் இரண்டு நாளாய் அவளுக்கு சுரம். மருந்து எதுவும் அ... ரில்லை. அ...

குப்பன் வ... அவளைச் சுற்றி... துடன் பேசிக்... தளும்பிய கண்ண... துக்கொண்டு வெ... விட்டான். எல்லா விஷ... தான் அவன் தாய் அவனு... சகிப்புத் தன்மையைக் கொ... விட்டாளே!

நாளடைவில் அவன் ஒரு பெ... திருடனாகி விட்டான். அவ... எங்கு போனான் எதற்காகப் ே... னான் என்று யாரும் கவலைப்ப... வில்லை. ஆனால் அடிக்கடி அவ... திருட்டுச் செய்திகள் அவர்க... காதில் விழுந்து கொண்டு தானி... ந்தன. போலீஸ்காரர்கள் அவனை ஊர் ஊராகத் தேடி அலைந்தார்கள் அவன் யார் கண்ணிலும் பட வில்லை. அவனுக்காக யாரும் வருந்தா விட்டாலும், போலீசாரி டம், அவன் அகப்படாமல் தப்பித் துக் கொண்டு வருவதைக் கேட்டு ஊர் ஜனங்கள் தங்களுக்குள் அவ னைப் புகழ்ந்து பேசிக் கொள்வார் கள்.

நாட்கள் செல்லச் செல்ல அவ னைப் பற்றிய தகவலே கிடைக்க வில்லை. வரவர அவனைப் பற்றியும் ஜனங்கள் மறந்து விட்டார்கள்.

●

ஒரு நாள் இளந்தம்பதிகளிரு வர் கையில் ஒரு குழந்தை, மூட் டை முடிச்சுகளுடன் ஒரு கட் டை வண்டியில் அந்தக் கிராமத் திற்கு வந்தனர். கிராம வாசிகள் அவர்களைப் பார்த்து ஆச்சரியப் பட்டார்கள். அநேக வருஷங்க ளுக்கு முன் ஓடிப்போன குப்பன் முகம் அவர்களுக்கு ஞாபகம் வந் தது. அவன் இப்பொழுது மனைவி

சகிதம் வந்திருக்கிருன் என்று பெரிதும் ஆச்சரியப்பட்டார்கள்.

குப்பன் முன்னேக்கு இப்போது வெகுவாக மாறிப் போயிருந்தான். நல்ல கருப்பு நிறம் மங்கி மானு ...ம்பு வந்திருந்தது. முகத்தில் ஒரு வுலாதியான களை சொட்டிக் கொண்டிருந்தது. அவன் சம்சா ...ம் அழகாகவே இருந்தாள். ...ள் இடுப்பிலிருந்த குழந்தை ... கரிய விழிகளை நாற்புரமும் ... தன்போக்காய் இதை ... வேடிக்கை பார்த்துக் ...து.

கொஞ்ச நேரத்திற் கெல்லாம், கிராமமே அவனைச் சுற்றிக்கொண்டது. ஒரே சமயத்தில் பலர் பல கேள்விகள் கேட்டார்கள். அவர்களுக்குத் தனித் தனியாகப் பதில் சொல்ல முடியாமல் திணறிப் போனான் குப்பன். அவன் சொன்ன வரலாறு இதுதான்:

தாயார் இறந்த பிறகு குப்பன் தூரத்திலிருந்த ஒரு கிராமத்திற்குச் சென்று அவ்வப்போது திருடி ஜீவித்து வந்ததாகவும், சில காலத்திற்குப் பிறகு ஒரு நாள் ஜ...ரத்தில் விழு...து ஒரு

பெரியவரின் ஆதரவில் சில நாள் இருந்த தாகவும், அவருக்குத் தன் மேல் பற்றும், அபிமானமும் ஏற்படவே அவரது ஒரே பேத்தியைத் தனக்குக் கல்யாணம் செய்து கொடுத்ததாகவும், அங்கேயே அது வரையில் இருந்ததாகவும், பெரியவர் காலமாகி விட்டதால் சொந்த ஊருக்கே குடும்ப சகிதமாய் வந்து விட்டதாகவும் சொன்னான்.

●

ஒரு பௌர்ணமி இரவு. பத்துமணி இருக்கும். நல்ல நிலாக் காய்ந்து கொண்டிருந்தது. உலகமே ஒளி வெள்ளத்தில் மயங்கிக் கிடந்தது போலிருந்தது. எங்கேயோ சிறுமிகள் பாடிக் கொண்டு கும்மியடித்த இன்னிசை காற்றில் லேசாய் மிதந்து வந்தது. குடிசைக்குள் குப்பனின் குழந்தை சுரத்தினால் சிணுங்கிக் கொண்டிருந்தது. தலைமாட்டிலிருந்த குப்பனின் மனைவி குழந்தையை விநாடிக்கொருதரம் தொட்டுப் பார்த்துக் கொண்டேயிருந்தாள். அவள் முகத்தில் கவலை நிறைந்திருந்தது. குப்பன் வைத்தியர் வீட்டுக்குப் போயிருந்தான்.

விடிய ஒரு ஜாமம் இருக்கும். காலடி ஓசையைக் கேட்டு காத்தாயி நிமிர்ந்துபார்த்தாள்; குப்பன் கையில் ஒரு முடிச்சுடன் உள்ளே நுழைந்தான் தயங்கியபடி.

"வைத்தியர் எங்கே? அவரை இட்டுக்கொண்டு வரவில்லையா" என்றாள். குப்பன் பதிலே சொல்லவில்லை. அவன் செய்கை அவளுக்குப்புரிந்து விட்டது. வெறுப்புடன் "இன்னுமா இந்த புத்தி?" என்றாள். குப்பன் பேசாமல் குழந்தையருகில் சென்று தன் முகத்தை குழந்தையின் முகத்தோடு வைத்து முத்தமி[illegible]டான். பிறகு நிதானமாக "வைத்தியர் வந்திட்டிருக்கிறாரு'' என்றான். அவன் குரல் என்றுமில்லாதபடி நடுங்கினதைக் கண்டு அவன் மனைவி பயமடைந்தாள். உணர்ச்சியற்ற கட்டைக்கு இன்று என்ன உயிர் வந்து விட்டது? அவள் குப்பன் முகத்தை ஏறிட்டுப் பார்த்தாள். அவன் முகம் விகாரமடைந்திருந்தது.

இதற்குள் நாலைந்து ஜவ[illegible] குடிசைக்குள் புகுந்தா[illegible] பன் கையில் விலங்கு [illegible] டது. "நட ஸ்டே[illegible]" என்று ஒரு ஜவான் கு[illegible] யே உந்தினான். குப்ப[illegible] ஓவென்று அழ ஆரம்[illegible] அவன் போகும் பொழுது [illegible] தையை ஒரு தரம் ஆர்வத்துட[illegible] உற்றுப்பார்த்துவிட்டு ஜவான்களுடன் நடந்தான். வெகு தூரத்திற்கு வந்த பிறகும் குழந்தையின் முனகலும் மனைவியின் அழுகையும், அவன் காதில் ஒலித்துக் கொண்டே இருந்தது.

"நாலு மாதம் வெறுங்காவல்" என்ற மாஜிஸ்டிரேட் கூறின தீர்ப்பை கேட்டுக் கூட அவன் திடுக்கிட வில்லை. லேசாய்ச் சிரித்தான். "இதற்குள் வைத்தியர் வந்து குழந்தைக்கு மருந்து கொடுத்திருப்பார் மூட்டையிலும் எப்படியும் அறு பது ரூபாயுக்குக் கொறை வில்லை, கொழந்தையும் அவளும் கொஞ்ச நாளைக்காவது நிம்மதியாயிருக்கலாம்'' என்று தனக்குத் தானே சொல்லிக் கொண்டான்.

அவன் உள்ளத்தில் ஏற்பட்[illegible] நிம்மதி, முகத்திலும் பிர[illegible] பலித்தது. ஆனால் அன்று விடிய காலையிலேயே குழந்தை இற[illegible] விட்டது என்பதும், துக்கத்[illegible] தாங்க முடியாமல் அவன் [illegible] யும் கிணற்றில் விழுந்து [illegible] செய்து கொண்டாள் [illegible] அவ[illegible]க்கு எப்படித்[illegible]

தமிழ் இலக்கியம்

வித்வான் அ. கிருஷ்ணமூர்த்தி

தமிழில் ஏராளமான இலக்கியங்கள் இருக்கின்றன. நண்பர்கள் பலவற்றைக் கேள்விப்பட்டிருப்பார்கள். அதாவது ஒரு இருபது முப்பது நூல்கள். இவைகளில் சிலவற்றைப் படித்துமிருப்பார்கள். ஆனால் பலபேருக்கு இந்த நூல்களின் காலம் இன்னதென்று தெரிவதற்குப் போதிய நூல்கள் இல்லை. சில நூல்கள் இருந்தாலும், அவை தமிழில் அதிகம் படித்தவர்களுக்கே பயன்படும். ஆதலால் முக்கியமான நூல்களின் காலத்தையும், வளர்ச்சியையும் பற்றி இக்கட்டுரையில் மேலோட்டமாக எழுதுவது பயன்தரும்.

நமக்கு இப்பொழுது கிடைக்கும் தமிழ் நூல்களில் மிகவும் பழமையானது தொல்காப்பியம். அது ஒரு இலக்கண நூல். இலக்கணமென்றால், அது எழுதப்படுவதற்கு முன்பு இலக்கியங்கள் இருந்திருக்க வேண்டும். தொல்காப்பியத்தில் உள்ள இலக்கண விதி முறைகளைப் படித்தால், ஒரு மொழி அவ்வளவு வளர்ச்சியடைவதற்கு, அதற்கு முன் ஏராளமான தமிழ் இலக்கியங்கள் இருந்திருக்க வேண்டும் என்று நிச்சயமாகிறது. தொல் காப்பியத்தின் காலமோ, இப்பொழுதிருந்து ஏறத்தாழ 2500 ஆண்டுகளுக்கு முற்பட்டது. அப்படியானால், தமிழ் இலக்கியம் அதற்கு முன் எவ்வளவு ஆயிரம் ஆண்டுகளாக வளர்ச்சியடைந்திருக்க வேண்டும் என்பதை நாம் முடிவு செய்து கொள்ளலாம். ஆனால் அந்த நூல்கள் நமக்குக் கிடைக்காமல் அழிந்து போனதற்குப் பல காரணங்கள் உண்டு.

தொல்காப்பியத்திற்கு அடுத்த படியாகச் சங்க இலக்கியங்கள்; அதாவது தமிழ்ச் சங்கங்கள் மதுரையில் இருந்ததாகச் சொல்லப்படும் காலத்தில் எழுதப்பட்ட நூல்கள். இந்தக் காலத்தை கி. மு. ஆறாம் நூற்றாண்டு முதல் கி. பி. மூன்றாம் நூற்றாண்டு வரையில் என்று சொல்லலாம். சங்க இலக்கியங்கள் இன்னின்னவை என்று நான் இங்கு அட்டவணை எழுத விரும்பவில்லை. உதாரணமாக, அகநானூறு, புறநானூறு கலித்தொகை, திருமுருகாற்றுப்படை, குறிஞ்சிப் பாட்டு, பட்டினப்பாலை என்ற சில நூல்களைச் சொல்ல விரும்புகிறேன். இவ்விதமுள்ள எல்லா நூல்களையும் தொகுத்துப் பத்துப் பாட்டு, எட்டுத் தொகை என்று இரண்டு பெரும் பிரிவாகப் பிரித்தார்கள். இவையல்லாமல், சிலப்பதிகாரம் மணிமேகலை, திருக்குறள் முதலிய நூல்களும் சங்ககாலத்து நூல்களே.

இந்தச் சங்ககாலத்து நூல்களின், சிறப்பான இயல்புகளைப் பார்க்கலாம். பிற்காலத்துக் கவிகளின் ஆகாயக் கோட்டை போன்ற மனதுக்கெட்டாத கற்பனைகளை அங்கு பார்க்க முடியாது. இயற்கையோடு ஒட்டிய வாழ்வு அழகாகச் சித்திரிக்கப்பட்டுள்ளது. இயற்கையின் இனிமை, இயற்கையாகப் பாடப்பட்டிருக்கிறது. காதலும் வீரமுந்தான் அந்த நூல்களின்

கியமான கருத்து. அந்த நூல்களில் ஒரு சாதிக்கு ஒரு நீதி; தீண்டாமை; மதத்தின் பேரால் செய்யும் பித்தலாட்டங்கள் ஆகியவை இல்லை. ஆதலால் அந்த நூல்களைப் படிப்பதில் தற்காலத்தில் ஒரு எழுச்சிகூட ஏற்பட்டிருக்கிறது.

வட நாட்டிலிருந்து பௌத்தம் சமணம் என்ற இரண்டு மதங்களும் தமிழ்நாட்டில் அப்பொழுது செல்வாக்குப் பெற்றிருந்தன. அதற்கு முன்பு சைவம் வைணவம் என்ற வைதிக மதங்களும் இங்கும் பரவியிருந்தன. இந்த நான்கு மதமும், நாட்டின் பல பாகத்தில் பரவியிருந்தாலும் மதப்போர் கிடையாது. ஆனால் மதக் கொள்கைகளைப்பற்றிய வாதங்கள் மட்டும் நடந்து வந்தன.

சங்கப் புலவர் பலர் சமணராகவும், புத்தராகவும் இருந்தனர். பிறகு சமணமும் புத்த மதமும் தலையெடுத்தன. சிலப்பதிகாரத்தில், சமணமதக் கொள்கைகள் நூல் முழுதும் பலவிடங்களில் விளக்கப்பட்டுள்ளன. பௌத்த மதத்திற்காகவே எழுதப்பட்ட கதை மணிமேகலை. இந்த இரண்டு நூல்களுக்கும் முன்பாகவே திருக்குறள் எழுதப்பட்டது. திருக்குறளில் சாதியினால் உயர்வு தாழ்வு, யாகம் செய்வது, உயிர்க்கொலை, பல கடவுளை வணங்குவது ஆகியவை கண்டிக்கப் படுகின்றன.

இதுவரையில் தமிழ் நாட்டில் மதப்போர் என்பது இல்லை. இனிச் சிறிது சிறிதாக மதப்போர் வளரத் தொடங்கிற்று. இதில் சைவம் வைணவம் இரண்டும் ஒருபக்கம், பௌத்தம் சமணம் இரண்டும் இன்னொரு பக்கம். இந பாரில் கி. பி. 4. 5, 6 ஆம் நூற்றாண்டுகளில் சமண பௌத்த மதங்களே ஓங்கி நின்றன. இந்த இரண்டு மதங்களும் பிறகு தமக்குள் ஒன்றுக்கொன்று எதிராக வேலை செய்தன. அதில் பௌத்த மதம் ஒடுங்கி, சமணம் ஒன்று மட்டும் நிலைத்து நின்றது.

சமண மதத்தின் நீதிகளெல்லாம் பல விதமாகத் தமிழில் எழுதப்பட்டன. பதினெண் கீழ்க்கணக்கு என்னும் நூல்களைப் பற்றி நண்பர் பலபேர் கேட்டிருப்பார்கள். அவை பதினெட்டு நீதி நூல்கள். பெரும்பாலானவை சமண சமயத்து நீதிகளைக் கூறுகின்றன. இவற்றில் திருக்குறள் முதலான பழைய நூல்களும், நாலடியார் முதலான பல புது நூல்களும் சேர்ந்திருக்கின்றன.

பௌத்தம், சமணம் இரண்டும் அரண்மனையில் பிறந்த மதங்கள். அவை தோன்றியது முதல் அரசர்கள் ஆதரவும் அம்மதங்களுக்கு இருந்தன. பௌத்தம் தமிழ் நாட்டில் மணிமேகலை காலத்தோடு அடங்கி விட்டது. ஆனால் வட நாட்டில் பிறகு சிலகாலம் இருந்து ஹர்ஷன் காலத்தோடு மறைந்து போயிற்று. சமணம் தமிழ் நாட்டில் மேலோங்கியிருந்த 6, 7 ஆம் நூற்றாண்டில் தமிழ் நாட்டை ஆண்டவன் மகேந்திரன் என்ற பல்லவன். வடநாட்டு அரசர்களைப்போல மதத்திற்கு ஆதரவளித்தான். தமிழ் நாட்டுச் சரிதத்தில், மதத்தை அரசாங்கத்தின் மு கிய பாகமாகக் கொண்டு, அதற்கு ஆதரவு கொடுத்த முதல் அரசன் இவன் தான். இது முதல் மத என்பது அரசாங்கத்தோடு பிணை கப்பட்டது. மதப்போர்கள் ஒன்று பலவாக வளரத் தொட கின. இப்போராட்டத்தில் அ

னிடத்திலும் படித்தவரிடத்திலும் எந்த மதத்திற்கு அதிக ஆதரவோ அதையே மக்கள் பின் பற்றினர்கள். பின் பற்றும் மதம் மேலும் மேலும் வளரத் தொடங்கிற்று. படித்தவர் என்போர் ஏதேனும் ஓர் மதத்தைச் சேர்ந்தவராகவும், அதற்காகத் தருக்கம் செய்பவராகவும், மதத்தைப் பற்றியே நூல்கள் எழுதுபவராகவும் ஆகிவிட்டார்கள். அது முதல் படிக்கும் படிப்பு மதப் படிப்பாகவும், செய்யும் ஆராய்ச்சி மத ஆராய்ச்சியாகவும், எழுதும் நூல் மத நூலாகவும், வாழ்க்கையின் போக்கு மதத்தின் போக்காகவும் மாறிவிட்டது. இதனுல் இலக்கியம் என்பது மக்களின் மதக் கொள்கையை — மதப்போரை விளக்கும் நூல்களாக மாறிவிட்டன. அது முதல் இதுவரையில் எல்லா நூல்களும் பெரும்பாலும் மத நூல்களாகவே இருக்கின்றன.

இனி, மேற்கொண்டு இலக்கியங்களைக் கவனிப்போம். மகேந்திரன் என்ற பல்லவன் முதல் முதல் மதத்திற்கு ஆதரவளித்தான் என்றேன். அப்படி அவனிடம் ஆதரவு பெற்றது சமண மதம். பௌத்தம் மறைந்து சமணம் மட்டும் நிலைத்து நின்றதால், இதை ஒழித்து விடுவதில் சைவம், வைணவம் இரண்டும் முனைந்து நின்றன.

அப்பர் முதலில் சைவராக இருந்து பிறகு சமணராய் மாறி, மறுபடியும் சைவரானதை நாம னைவரும் அறிவோம். அவரைக் கல்லைக் கட்டிக் கடலில் போட்டதும், யானைக் காலில் இடர விட்டதும்; சுண்ணும்புக் காளவாயில் வைத்ததையும் அறிவோம். திருஞானசம்பந்தர் சமணர்களோடு மதுரையில் வாதம் புரிந்தது முதலான பல நிகழ்ச்சிகளையும் படித்திருக்கிறோம். பாண்டியன் மனைவியும், மந்திரியும் சைவர்களாக இருந்து திருஞான சம்பந்தரை மதுரைக்கு அழைத்ததும், இன்னும் இவை போன்ற நிகழ்ச்சிகளும் பலவுண்டு. இவையெல்லாம் அரசர்களோடு தொடர்புடைய நிகழ்ச்சிகள். மக்களுக்குள்ளாகவே பல சச்சரவுகளும் உண்டு. சமணத்திற்கு எதிராகவும், சைவத்தின் பெருமையை நிலை நாட்டவும் — நாட்டின் ஒவ்வொரு மூலையிலும் உள்ள ஊர்களுக் கெல்லாம் சென்று அப்பர், சம்பந்தர் — அவர்களுக்குப் பிறகு சுந்தரர் — இவர்களைச் சேர்ந்த அடியார்கள் எல்லாரும் தேவாரம் முதலான பாட்டுக்களைப் பாடினர்கள். அவற்றில் 7000-க்கு மேற்பட்ட பாட்டுகள் இப்பொழுதும் கிடைக்கின்றன. அழிந்து போனவை பல்லாயிரம். 63 நாயன்மார்கள் என்போர் இந்தக் காலத்தவர்கள். இவரில் காரைக் காலம்மையார் முதலான சிலர் மிகவும் பழமையானவர்கள். சைவர்களோடு சேர்ந்து வைணவரும் சமணத்திற்கெதிராகக் கிளர்ச்சி செய்தார்கள்.

இந்தக் கிளர்ச்சியின் பயனுகப் பல்லவன் மகேந்திரன் சமணத்தை விட்டு சைவனுனன். பல்லவரில் பலர் சைவராகவும், வைணவராகவும் இருந்தனர். பாண்டியரும் அப்படியே. இப்படிச் சமணம் ஒடுங்கிச் சைவமும் வைணவமும் அழுத்தமாக வேரூன்றிக் கொண்டன. இதற்குத் தகுந்தாற்போல் மக்கள் பழமையாக நம்பிக்கை வைத்த வேதத்தை இந்த மதங்கள் அடிப்படையாகக் கொண்டன.

நாளடைவில் சைவம் வைணவம் இரண்டும் ஒன்றுக் கொன்று பகையாயின. சைவ நூலான

...தேவாரமும், வைணவ நூலான நாலாயிரப் பிரபந்தமும் தங்கள் தங்கள் கொள்கையைச் சிவன் மேலும், திருமால் மேலும் வைத்துப் பாடுகின்றன. ஒரு மதம் இன்னொரு மதத்தைத் தூற்றுகிறது. மக்களுக்குக் கவர்ச்சியாக இருக்கும் பொருட்டு, இனிமையான இசைப் பாட்டுகளில் அவை பாடப்பட்டுள்ளன.

ஒன்பதாம் நூற்றாண்டிலிருந்து சோழர்கள் பல்லவர்களை ஒழித்துவிட்டுத் தமிழ் நாட்டிலும் தமிழ் நாட்டிற்கு வெளியிலும் பெருத்த செல்வாக்கோடு விளங்கினர்.

இவர்கள் காலத்தில்தான், தமிழின் பெரிய இலக்கியங்கள் எழுதப்பட்டன. அதாவது ஒன்பது முதல் பதின்மூன்றாம் நூற்றாண்டு முடிய. இவர்களில் பல மன்னர்கள் நல்ல சைவர்கள். சிலர் மட்டும் வைணவராக இருந்தனர். இருந்தாலும் அரசியல் நடவடிக்கையில், இரண்டு மதங்களுக்கும் தகுந்த ஆதரவு காட்டினார்கள். வரையறையாகச் சொன்னால் சைவத்திற்கு ஆதரவு அதிகம்.

பல நூல்கள் அரசன் ஆதரவு இல்லாமலே எழுதப்பட்டன. 11-ஆம் நூற்றாண்டில் பட்டினத்தார் தமது பாடல்களைப் பாடினார். கந்த புராணம் எழுதப்பட்டது. திருவிசைப்பா திருப்பல்லாண்டுகள் பாடப்பட்டன.

இராசராச சோழன் தேவாரப் பாடல்களைக் கண்டெடுத்து வெளியிட்டான். பிறகு 80 ஆண்டுகள் கழித்துக் குலோத்துங்கன் காலத்தில் கலிங்கத்துப் பரணி, அவன் கலிங்கத்தை வென்றதைப் புகழ்ந்து எழுதப்பட்டது. பிறகு இரண்டு தலைமுறையில் பெரிய புராணம். பிறகு கம்பராமாயணம் ஔவையார் பாடல்கள் தோன்றின. பதின் மூன்றாவது நூற்றாண்டில் நன்னூல் எழுதப்பட்டது. இன்னும் பல சிறு சிறு நூல்கள் சோழர் காலத்தில் எழுதப்பட்டன. சோழர்களோடு தமிழ் வேந்தர்களின் ஆட்சி நசித்து விட்டது. பிறகு 200 ஆண்டுகளுக்குமேல், பாண்டியர்கள் மட்டும் பெயரளவில் தமிழ் நாட்டின் தென்கோடியில் ஆண்டு வந்தனர். தமிழ் நாட்டில் சரியான ஆட்சியில்லை. தமிழுக்கு ஆதரவாகச் சைவ மடங்களும், வைணவ மடங்களும் தோன்றின. இந்த மடங்களின் ஆதரவில், சைவ ஆலயங்கள், சைவ சிந்தாந்த சாத்திரங்கள், நாலாயிரப் பிரபந்த உரை முதலியவை எழுதப்பட்டன. இது முதல் எந்த மதத்திற்கும் பெரிய காவியங்கள் எழுதப்படவில்லை. நூற்றுக் கணக்கான சின்னஞ்சிறு இலக்கியங்கள். மதக் கொள்கைக்கு விளக்கங்கள் மதப் பெரியார்களாலும், மற்றவராலும், ஏராளமாய் எழுதப்பட்டன. தொல்காப்பிய உரைகள், திருக்குறள் பரிமேலழகர் உரை ஆகியவை இக்காலத்திற்கு உட்பட்டவை.

பதினாறும் நூற்றாண்டில், அதிவீரராம பாண்டியன், வடமொழியில் ஹர்ஷன் எழுதின நளன் கதையைத் தமிழில் 'நைடதம்' என்ற பெயரோடு மொழிபெயர்த்தான். 'வெற்றி வேற்கை' என்ற அழகிய சிறிய ஒரு நீதி நூலும் இவனால் எழுதப்பட்டது. அதன் பின், வில்லிபுத்தூரார் பாரதம், அருணகிரிநாதர் திருப்புகழ் பிறகு சில தலைமுறையில் காளமேகப் புலவர் பாடல்கள் பாடப்பட்டன. பதினேழாம் நூற்றாண்டில் ஒரு நாற்பது ஐம்பது புலவர்கள் இருந்...

திருக்கின்றனர். தமிழ் நிரம்பப் படித்தவர்களுக் கல்லாமல், மற்றவர்களுக்கு அவர்களுடைய நூல்கள் தெரியாது. பதினெட்டாவது நூற்றாண்டில் குற்றாலக் குறவஞ்சி பாடப்பட்டது.

சென்ற நூற்றாண்டில் திருவருட்பா இராமலிங்க சுவாமிகளால் பாடப்பட்டது. ஆறுமுக நாவலர் அவர்களால் பல நூல்கள் அச்சுக்குக் கொண்டு வரப்பட்டன. இது வரையில் பாடப்பட்ட எல்லா நூல்களும் எத்தனையோ புலவர்களால் பாடப் பட்டவை. எத்தனையோ வகையான பாட்டுகளால் ஆனவை. அன்றியும் நூலின் அமைப்பிலும் எத்தனையோ விதமானவை. இருந்தாலும் எல்லா நூல்களும் ஏதோ ஒரு வகையில், ஏதோ ஒரு மதத்தோடு தொடர்புடையன. நண்பர்களுக்குத் தெரிந்த முக்கியமான சில நூல்களை வைத்துக் கொண்டு இலக்கிய வளர்ச்சி எப்படி வந்திருக்கிறது 'என்பதை மேலோட்டமாக, எழுதுவது தவிர, இலக்கியச் சரித்திரத்தை முழுவதும் இதில் எழுதவில்லை. விடுபட்ட இடங்கள், நூல்கள், புலவர்கள், செய்திகள் ஏராளமாகவுண்டு.

ஆனால் 13-ம் நூற்றாண்டில் தமிழ்வேந்த ராட்சி முடிந்த பிறகு நாயக்கர்கள், மராட்டியர் முதலியோர் தமிழ் நாட்டின் பல பகுதியிலும் ஆட்சி செலுத்தியதால், தமிழுக்குப் போதிய ஆதரவும் வளர்ச்சியும் ஏற்பட... சைவம், வைணவம் — இரண்... மதங்களிலும் பெரிய காவியங்கள் சென்ற நூற்றாண்டுகளில் உண்டாக வில்லை. பலபேர் பல விதத்தில் சிறு சிறு நூல்கள் அளவில்லாது எழுதியுள்ளனர். மறைந்து போனதும் அளவில்லை. சைவ வைணவத் தகராறு இன்னும் இருக்கிறது; ஆனல் மறைந்து கொண்டு வருகிறது.

கடைசியாக ஆசிரியர்- சுந்தர... பிள்ளையின் 'மனோன்மணீ...' குறிப்பிடத் தகுந்தது. சென... நூற்றாண்டின் கடைசியில் எழுதப... பட்டது. அது தமிழுக்கும், தமிழர் எண்ணத்திற்கும் ஒரு மறு மலர்ச்சியான நூல். அதன் அருமையை நண்பர்கள் அறிவார்கள்.

ஒன்பதாம் நூற்றாண்டில் மாண...க்க வாசகர் திருவாசகம் பாடி...ஞர். அப்பொழுது மீதியாக இருந்த புத்தர்களை அவர் வாதம் செய்து வென்ருர். அதற்குப் புத்த மதம் மறுபடியும் சிறிது தலை தூக்கியது காரணம். ஏனெனில், அக்காலத்தில் புத்த மதத்தைப் பற்றியும், புத்த மதப் பெரியார்களைப் பற்றியும் பல தமிழ் நூல்கள் எழுதப்பட்டன. இருந்தும் புத்தமதம் ஒடுங்கியே போயிற்று. சமணம் மட்டும் உச்சமாக இல்லா விட்டாலும், ஒதுக்கமான நிலைமையோடு இதுவரையில் இருந்து வருகிறது. புத்த மதம் தலை தூக்கிய இந்தக் காலத்தில் சமணமும் சிறிது தலை தூக்கிற்று.

மலர் மணம்

முகப்புப் படம் :

தமிழ், தமிழர், தமிழகம் இம்மூன்றினையும் தமது எண்ணத்தாலும், எழுத்தாலும் பரிந்து வளர்க்கும் தமிழ் நாட்டுத் தவமுனி ஸ்ரீ சுத்தானந்த பாரதியார் அவர்கள். இடையருத இணையற்ற அவரது இலக்கியத் தொண்டினால் இன்று தமிழ் மொழி புது மெருகும், புத்தொளியும் பெற்று, சுடர்விட்டுப் பிரகாசிக்கிறது. புன்னகை பொங்கும் இன்முகத்தோடு விளங்கும் அவரது திருவுருவப் படம், இந்தப் பொங்கற் புது நாளன்று, வசந்தத்தின் மேலட்டையை அலங்கரிப்பது மிகப் பொருத்தமாயிருக்கிறதல்லவா?

டாக்டர் திருமூர்த்தி அவர்கள் வெறும் டாக்டராக மட்டுமிராமல் இலக்கியம், நோய் இவைகளைப் பற்றியும் அவ்வப்போது நுட்பமாய் ஆராய்ச்சி செய்துவருபவர். பிளேக் நோய் பற்றிய தமது ஆராய்ச்சிக் கட்டுரையில் பொது ஜன ஒத்துழைப்பில்லாமல் எந்தத் தொத்து வியாதியையும் ஒழிக்கமுடியாது என்பதை உதாரணத்துடன் வெகு ரஸமாகச் சொல்லுகிறார்.

ரா. ஆறுமுகம் தேர்ந்த சிந்தனையாளர். சிறந்த சிறுகதை ஆசிரியர். தாம் சிரமப்பட்டுச் சென்று, கண்டு களித்து வந்த "ஹம்பி" யை சுலபமாகக் கண்டு களிக்கச்செய்கிறார். ரஸித்துப் படிப்பதற்கேற்ற இந்த அருமையான கட்டுரை அடுத்த இதழில் முடிவடைகிறது.

ரங்ரோட்டுக் கதை, ஒரு சிந்தனைச் சித்திரம். சமூக சீர்திருத்தத்தை அடிப்படையாகக்கொண்டு சிறந்த சிறுகதைகள் எழுதுவது அவ்வளவு சுலபமல்ல. சி. ஆர். ராமசுவாமி உணர்ச்சியும், வேகமும் நிறைந்த ரங்ரோட்டுக்கதையின் மூலம் அது சுலபம்தான் என்பதைத் தெளிவாய்க் காட்டியிருக்கிறார்.

"இதுவும் வேண்டும்" என்ற புதுத்தொடரில் நமது 'வில்லன்' அவர்கள், விஞ்ஞானத்திற்கும் விவசாயத்திற்கும் உள்ள தொடர்பை அலசி ஆராய்ந்திருக்கிறார். புள்ளி விவரங்களோடு காரணங்காட்டி, விவசாயவளர்ச்சிக்கு விஞ்ஞான அறிவைப் பூரணமாக உபயோகித்துக் கொள்ளவேண்டும் என்று அவர் வற்புறுத்தும்போது, இதுவும் வேண்டியதுதான் என்று ஒப்புக்கொள்ள வேண்டியிருக்கிறது.

ஒரு பள்ளி உபாத்தியாயினியின் உள்ளக் கடலில் பொங்கிப் பிரவகிக்கும் எண்ணங்களையும் உணர்ச்சிகளையும் அற்புதமாகப் படம் பிடித்துக்காட்டுகிறார் எழுத்துலகப் பாதையில் முதலடிவைக்கும் கௌசல்யா

தமிழ் இலக்கியப் பூஞ்சோலை, மறுமலர்ச்சி பெற்றுப் பூத்துக்குலு-ங்கும் இச்சமயத்தில், அதன் தொன்மை வளர்ச்சி இவைகளைப்பற் தமிழ் இலக்கியத்தின் நறுமணத்திலேயே சதா திளைத்துக்கொண்ருக்கும் வித்வான் அ. கிருஷ்ணமூர்த்தி அவர்கள், சரித்திர ஆதா துடன் நன்ருய் விளக்கியிருக்கிறார்.

கவி ஸி. எஸ். ஆர். எஸ். பால... ஆகியவர்களின் அருமைய பாடல்களையும், இதர அம்சங்களையும் படித்துப்பாருங்கள்.

— ஆசி

19/7/58

A GOOD RE

for th is

NEW YEAR

"I will give a monthly

donation to

H. E. The Governor's War Fund."

தி சென்டரல் பேங் ஆப் இந்தியா, லிமிடெட்.

(இந்தியாவிலேயே மிகப் பெரிய இந்தியன் ஜாயின்ட் ஸ்டாக் பேங்)

(ஸ்தாபிதம்: டிசம்பர் 1911)

அதிகாரம் பெற்ற மூலதனம்	...	... ரூ.	3,50,00,000
பாக்களிக்கப் பட்ட மூலதனம்	...	... ரூ.	3,36,26,400
செலுத்தப் பட்ட மூலதனம்	...	... ரூ.	1,68,13,200
ரிசர்வும் மற்ற நிதிகளும்	...	... ரூ.	1,48,32,000
டிபாசிட்டுகள் 30–6–1943ல் இருந்தபடி		... ரூ.	72,27,68,300

தலைமை ஆபீசு:

மகாத்மா காந்தி ரோடு, போர்ட், பம்பாய்.

இந்தியா முழுவதிலும் 180க்கு மேற்பட்ட கிளை ஸ்தாபனங்களும், வளங்கும் ஸ்தாபனங் களும் பெற்றது.

ங் டைரக்டர்:- Mr. H. C. கேப்டன், J. P.

கள்:–

P. மோடி K. B, E. (தலைவர்) — நூர்முகமத் M. சினுய்

ஸ் மாதவதாஸ் — பாபுஜி தாதாபாய் லாம்

B. துபாஷ் — தரம்ஷே முல்ராஜ் காட்டாவ்

D. ரோமர் — ஹார்மஜி பிரேம்ஜி கனிஷ

விதல் தாஸ் கான்ஜி

ன் ஏஜண்டுகள் :– மெஸர்ஸ், பார்க்லேஸ்பேங் லிமிமிட்

ர்க் ஏஜண்டுகள்:- தி காரன்டி டிரஸ்ட் கம்பனி ஆப் நி
ாவிதமான பாங்கி அலுவல்களும் கவனிக்கப்படும்.
ர்ஜிதம் செய்து கொள்ளலாம்.

தென் இந்தியாவின் கிளை ஸ்தாப

ஆலப்பிளா, ஈரோடு, பங்களூர், பெஜவாடா,
ட்பை, தேனி, எர்ணாகுளம், குண்டக்கல்
தியால், பொள்ளாச்சி, சேலம், திரு
லப்பேட்டை, விருதுநகர்.

...alam Chett...

AND

...nnaswamy Chettiar

AGENTS

...rs. Burmah Shell Oil Storage & Distributing Co., of India Lt...

COIMBATORE

B O C	DEPENDABLE	Shel...
B O C	FIRM	
Grades	FOR	Grades

THE PRODUCTS OF BURMAH SHELL

MOTOR SPIRITS : MOTOR OILS
GREASES : INDUSTRIAL
LUBRICANTS OF EVERY
DESCRIPTION

★

...Oils : Candles : Shellt...

Etc., Etc., Etc.

... and Published by K. P. ...
... Editor: R. Thirugnanasa...

சென்ட்ரல் ஸ்டுடியோஸ் லிமிடெட்

கோயமுத்தூர்

(Lessees: ஜுபிடர் பிக்சர்ஸ்)

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
3 MAY 1945
MADRAS

...வீன யந்திர சாதனங்களைக் கொண்டு ...தில்

...ந்தியாவிலேயே மிகப் பிரக்யாதி வாய்ந்த

அநேகம் தமிழ்ப் படங்களைத் தயாரித்த

இணையற்ற ஸ்டுடியோ!

★

இப்பொழுது தயாராகி வரும் படங்கள்.

★

...வால்மீகி
...என் மகன் } — சென்ட்ரல் ஸ்டுடியோஸ்

... முருகன் — ஜுபிடர் பிக்சர்ஸ்

...தனன் — பாஸ்கர் பிக்சர்ஸ்

★

...றும் இரு தமிழ்ப் படங்கள்

★

பொங்கற் புதுநாளுக்கு

புதுமையான பொன் நகைகள் !

அபூர்வ ஆபரணங்கள் !

வனப்புள்ள வைரங்கள் !!

P. A. ராஜா செட்டியார் & பிர

போன் 218A　　　　தந்தி "ரா

—: தபால் பெட்டி 139 :—

கடைத்தெரு　　:　　கோயா